தேவியின் கண்மணி

சொ.கலைவாணிசொக்கலிங்கம்

ரூ.15



# 'தேடி வந்த உறவு'



# விளக்கெண்ணெய் ஜொலிப்பு

நம் முன்னோர்கள் தங்கள் அழகைப் பராமரிப்பதற்கு பெரும்பாலும் எண்ணெயைத் தான் பயன்படுத்தி வந்தனர். அதிலும்குறிப்பாககூந்தலைநன்கு நீளமாகவும், அடர்த்தியாகவும் வளர்ப்பதற்கு,தலைக்குதேங்காய் எண்ணெயை விட விளக்கெண் ணெயைத்தான் பயன்படுத்தி வந்தனர்.

விளக்கெண்ணெயில் ரிசினோலியிக் ஆசிட் அதிகம் உள்ளது. இந்த ஆசிட் ஒரு சிறந்த ஆன்டி பாக்டீரியா மற்றும் அழற்சியை சரிசெய்யக்கூடிய ஒன்று. எனவே இத்தகைய எண்ணெயை அழகு பராமரிப்பில் பயன்படுத்தினால், சருமம் அழகாவதோடு, கூந்தலும் நன்கு பொலிவோடு காணப்படும்.



சரி, விளக்கெண்ணெய் பயன்படுத்தினால், என்ன நன்மைகள் கிடைக்கும் என்று பார்ப்போமா!

தலைக்கு குளிக்கும் முன் விளக்கெண்ணெயை தலையில் தேய்த்து 15 நிமிடம் ஊற வைத்து, பின் மைல்டு ஷாம்பு போட்டு குளித்தால், கண்டிஷனர் போட்டது போல் கூந்தல் பளபளப்புடன் இருக்கும்.

விளக்கெண்ணெய்பயன்படுத்தி மசாஜ் செய்து வந்தால் கைகளில் இருக்கும்சுருக்கங்கள் அனைத்தும் நீங்கிவிடும்.

மேலும் தினமும் இரவில் படுக்கும் முன் நகங்களில் விளக்கெண்ணெயை வைத்து வந்தால், நகங்கள் நன்கு பொலிவோடு அழகாக வறட்சி யின்றி காணப்படும்.

விளக்கெண்ணெய் கொண்டு சருமத்திற்குகிளின்சிங்செய்யலாம். விளக்கெண்ணெய்யை முகத்திற்கு தடவி, சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் கழுவினால், நீர்ச்சத்தின்றி காணப்படும் சருமம் ஈரப்பசையுடன் இருக்கும்.


விளக்கெண்ணெயில் சோடா உப்பு சேர்த்து கலந்து, மச்சம் உள்ள இடத்தில் தேய்த்து வர, திடீரென்று வந்த மச்சம் மறைய ஆரம்பிக்கும்.

இரண்டு டேபிள் ஸ்பூன்பாதாம் எண்ணெய், 1 டேபிள் ஸ்பூன்

**அவ்வப்போது தலைக்கு எண்ணெய் மசாஜ் செய்ய வேண்டும். இதனால் தலையில் படிந்திருக்கும் மாசுக்கள் முற்றிலும் நீங்கி, இரத்த ஓட்டமானது சீராக இருப்பதோடு, கூந்தலும் வலுவோடு இருக்கும். அதிலும் இதனை தலைக்கு குளிக்கும் முன் சிறிது நேரம் செய்து குளித்தால் நல்ல பலன் கிட்டும்.**

**கோடையில் கூந்தலைப் பராமரிக்க செய்ய வேண்டியவைகளில் முக்கியமானவை கூந்தலை தினமும் அலசுவதுதான். தலைக்கு குளிக்கும் போது மாய்ச்சுரைசிங் ஷாம்புவை பயன்படுத்த வேண்டும். அதிகப்படியான எண்ணெய் பசை தலையில் இருந்தால், அழுக்குகள் தங்கும் என்று நினைத்து, கடினமாக ஷாம்பு அல்லது சோப்பு பயன்படுத்தினால், கூந்தலில் அதிக வறட்சி ஏற்பட்டு, பின் கூந்தல் உடைய ஆரம்பிக்கும்.**





விளக்கெண்ணெய் சேர்த்து ஸ்ட்ரெட்ச் மார்க் உள்ள இடத்தில், 10 நிமிடம் மசாஜ் செய்து, ஊற வைத்து, கழுவ வேண்டும். இதன் மூலம் சருமத்தில் இருக்கும் ஸ்ட்ரெட்ச் மார்க்குகளை போக்கலாம்.

சிலருக்கு இளம் வயதிலேயே முதுமை தோற்றம் காணப்படும். அத்தகையவர்கள், விளக்கெண்ணெய் கொண்டு சருமத்தை தொடர்ந்து மசாஜ் செய்து வந்தால், தளர்ந்து காணப்படும் சருமம் இறுக்கமடைந்து, இளமை தோற்றத்திற்கு மாறும்.

குதிகால் வெடிப்புகள் இருந்தால், தினமும் விளக்கெண்ணெய் தடவி வர, குதிகால்களில் இருக்கும் வறட்சி நீங்கி, வெடிப்புகளும் மறையும். ■

கூந்தலுக்கு அவ்வப்போது ஹேர் மாஸ்க் போட வேண்டும். இதனால் கூந்தலை ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்ளலாம். கெமிக்கல் கலந்த ஹேர் மாஸ்க்குகளை பயன்படுத்தாமல், இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி மாஸ்க் போட வேண்டும். அதிலும் வாழைப்பழம், பப்பாளி, தயிர், தேங்காய் பால் போன்றவற்றால் மாஸ்க் போடலாம். இதனால் பட்டுப் போன்ற அழகான கூந்தலைப் பெறலாம்.





## 3 பேருக்கு தலா ரூ.1000 மதிப்புள்ள பட்டுச்சேலை பரிசு

கீழே தரப்பட்டுள்ள கூப்பனில் தங்களின் விலாசத்தையும்,பதிலையும் எழுதி கவரில் வைத்து அனுப்புங்கள்.

குலுக்கல் முறையில் 3 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கூப்பன் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 1-5-2013.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

சேலை பரிசு,
ஆசிரியர்- கண்மணி,
246, அண்ணாசாலை
சென்னை- 600006
தொலைபேசி எண்: 28297225

**பட்டுச் சேலை பரிசு** **மார்ச் 24.4.2013**

கேள்வி: மதுரையில் சித்திரை திருவிழாவின் போது கள்ளழகர் இந்த ஆற்றில் இறங்குவார்.

பதில்: வை [ ]

அனுப்பும் வாசகர் முழு முகவரி:

______________________

______________________

மாவட்டம். ______________________

அஞ்சல் எண் :

தொலை பேசி எண்: 1-5-2013



# தேடி வந்த உறவு

*பிரிவைக் கண்டு கலங்காதே*
*இமைகள் பிரிந்தால் தான்*
*காட்சிகள் தெரியும் உதடுகள்*
*பிரிந்தால் தான் வார்த்தை வெளிவரும்!*

மணமக்கள்: சக்திவேல், சகுந்தலாதேவி பொன் நிறத்தில் ஒளிர்ந்த திருமண அழைப்பிதழை நீட்டும் போது சக்திவேலின் வலக்கரம் நடுங்குவதை உணர்ந்தாள் சுசீலா.

முகத்தில் எந்த உணர்வையும் காட்ட மனமின்றி விழிகளை உயர்த்தி அவனை நேராய் பார்த்தபோது தன்னையும் மீறி சுறுசுறுவென கோபம் கிளர்ந்தது.

கண்களில் நீர் வழிய பரிதாபமாய் அழுதவனை காணும்போது ஏனோ இரக்கமோ கனிவோ தோன்றவில்லை. மாறாக வெறுப்பும் கோபமும் கனன்றது.

''இப்ப எதுக்கு இங்கே வந்து ஒப்பாரி வெக்கிற'' தான் கேட்க நினைத்த கேள்வியை சுள்ளெனக் கேட்ட தன் சித்தப்பா மகள் வசுமதியை நன்றியோடு நோக்கினாள்.

ஆனால் சக்திவேலின் பார்வை வசுமதியிடம் திரும்பவில்லை. சுசீலாவின் கைகளைப் பற்றி தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

''மன்னிச்சிடு சுசி! இப்படியெல்லாம் நடக்கும்னு நான் எதிர் பார்க்கல'' மீண்டும் கண்ணீர் உகுத்தவனைக் கண்டு வெறுப்பாய் முகத்தை சுளித்தவாறே தன் கரங்களை இழுத்துக் கொண்டாள் சுசீலா.

## சொ.கலைவாணிசொக்கலிங்கம்



''நான் எவ்வளவோ பேசிப்பார்த்தேன் சுசி. ஆனா. அம்மா கேட்கவே இல்லை.. அதான் அம்மா வார்த்தையை மீற முடியாம''

''உன் மாமன் பொண்ணை கட்டிக்க சம்மதிச்சிட்டியாக்கும்?'' வசுமதி குத்தலாய்க் கேட்க, வெறுமனே தலையாட்டினான் ஆறடி உயரத்தில் இருந்த சக்திவேல்.

''என்னால வேற என்ன பண்ணமுடியும் சுசீ! அம்மாவை மீறி என்னால எதுவும் செய்ய முடியாதே''

''உன் அம்மாகிட்ட கேட்டுட்டுத்தான் இவளை விரும்புனியா?'' இதற்கும் வசுமதியே பேச, தன் கண்ணீரை நிறுத்திவிட்டு சுசீலாவை ஏறிட்டான் சக்திவேல்.

''என்ன சுசி! நான் பாட்டுக்கு பேசிட்டு நிற்கிறேன். நீ இவளை பேசவிட்டு வேடிக்கை பாக்கிற?''

''அவ பேசமாட்டா. இப்ப எதுக்காக இங்கே வந்தே?''

''வந்து... கல்யாண பத்திரிகை கொடுக்கலாம்னு''

''ஆனாலும் உனக்கு ரொம்பத் துணிச்சல் தான்டா. உன் உடம்புல எவ்வளவு தெனாவட்டு இருந்தா ரெண்டு வருஷமா நீதான் என் உலகம்னு சுத்தி இப்பஅவகிட்டயே பத்திரிகையை நீட்ட வந்திருக்கியே'' வசுமதி வெறுப்பை உமிழ, பதறிப்போனான் சக்திவேல்.

''ஐயோ! சத்தமா பேசாதே வசு''

''ஏன்?''

''இப்பத்தான் ஊர்முழுக்க பத்திரிகை வெச்சிட்டு வர்றேன். நீ பேசுறதுமட்டும் யார் காதுலயாவது விழுந்தா என்னாகும்?''

''என்னாகும்?''

''கல்யாணமே நின்னுடும். அப்புறம் என் அம்மா என்னைக் கொன்னே போட்டுடும்'' என்றவனை நிதானமாய் ஏறிட்டாள் சுசீலா.

''நீ கிளம்பு''

''சுசீ?''

''பத்திரிகை தானே வெக்க வந்தே? வெச்சிட்ட கிளம்பு''

''என்ன சுசி. இப்படிப்பேசுற''

''வேற என்ன பேசணும்?''

''உனக்கு எம்மேல கோபம் இருக்குன்னு தெரியுது'' என இழுத்தவனை கை உயர்த்தித் தடுத்தாள்.

''ஸாரி! எனக்கு யார்மேலயும் எந்தக் கோபமும் இல்ல''

''தெரியும் சுசி. உனக்குத் தான் கோபமே வராதே. ஆனா.... வருத்தம்

இருக்குமே''

''உங்கிட்ட கோபமோ வருத்தமோ படுறஅளவுக்கு நான் முட்டாளோ ஏமாளியோ இல்ல''

''சுசீ?''

''கிளம்பு சக்தி. சித்தியும் சித்தப்பாவும் கோவிலுக்கு போயிருக்காங்க. வீட்ல பெரியவங்க இல்லாத நேரம் நீ வந்ததே தப்பு. கிளம்பு''

''சுசி! நீ ரொம்பக் கோபமா இருக்கேன்னு தெரியுது. நான் வேணா... அம்மாகிட்ட இன்னொருவாட்டி பேசிப்பார்க்கட்டுமா?'' ஆவலாய்க் கேட்டவனை இருவருமே புருவம் உயர்த்திப் பார்த்தனர்.

''என்ன பேசப்போற?''

''உன்னையே கல்யாணம் பண்ணிக்க...''

சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தாள் வசுமதி.

''அப்படியே அறைஞ்சேன்னா மூஞ்சி முதுகுப்பக்கமா திரும்பிக்கும்'' என அடிக்கப் பாய்ந்தவளை பிடித்துக் கொண்டாள் சுசீலா.

''விடு சுசி என்னை. அவனை நாலு சாத்து சாத்தினாத்தான் என் ஆத்திரம் அடங்கும்''

''சும்மா இரு வசு. நீ கிளம்பு சக்தி''

''ஏன் சுசி? இப்ப நான் என்ன தப்பாப் பேசிட்டேன்னு இவ இப்படிக் குதிக்கிறாள்?'' என்றவனைக் கண்டு பற்களைக் கடித்தாள் வசுமதி.

''டேய்! மரியாதையாப் போயிடு. இல்ல..''

''சும்மா கத்தாதே வசு. சுசிலாவே என்பக்கம் உள்ள நியாயத்தை உணர்ந்து கோபப்படாம பொறுமையா இருக்கா. நீ ஏன் சும்மா கத்துற?''

''டேய் பொறுக்கி நாயே! எனக்கு சுசின்னா உசிரு. அவ இல்லாம வாழவே முடியாதுன்னு என்கிட்டதானேடா வந்து கண்ணீர் விட்டாய்? நானும் உன் கண்ணீரை நம்பி உனக்காக இவகிட்ட பேசி.... இவமனசை மாத்தினேனே.

இப்ப நான் ஏன் கோபப்படுறேன்னு என்னையே கேட்கிறியா? தொடை நடுங்கிப்பயலே! அன்னிக்கு என்னமோ சினிமா ஹீரோ மாதிரி வசனமெல்லாம் பேசிட்டு இப்போ அம்மா சொன்னா ஆட்டுகுட்டி சொன்னான்னு வந்து பத்திரிகையை நீட்டுறியே!''

''இந்தா! சும்மா என்னை கேவலமாபேசாதே. எனக்கும் கோபம்



வரும்''

''அட! கோபமா? உனக்காக? உன் கோபத்தைத் தூக்கி குப்பையில போடு''

''சுசி! இவ ரொம்ப ஓவரா பேசுறா''

''நீ மட்டும்? இன்னும் பத்து நாள்ல கல்யாணத்தை வெச்சிகிட்டு நான் வேணா அம்மாகிட்ட பேசிப்பார்க்கட்டுமானு கேட்கிறியே. இதுக்கு என்ன அர்த்தம்?''

''சுசி?''

''இதோ பார் சக்தி. பொண்ணுங்க ஒன்னும் பொம்மைங்க இல்ல. ஒன்னைத் தூக்கிபோட்டுட்டு அடுத்ததை எடுத்துறதுக்கு உன் அம்மா பார்த்த பொண்ணை கட்டிகிட்டு அவகூட சந்தோஷமா குடும்பம் நடத்து. இனிமே இப்படி அசட்டுத்தனமா பேசிகிட்டு இந்தப்பக்கம் வராதே. போ''

''சும்மா போபோன்னு விரட்டாதே சுசி. உம்மனசு சங்கடப்படக்கூடாதுன்னு தானே நாலுவார்த்தை ஆறுதலா பேசுறேன்''

''உன் ஆறுதல் எனக்குத் தேவையில்லை. நீ கிளம்பு. வசு! அவனை அனுப்பிட்டு கதவை சாத்து'' என்றவாறே அறைக்குள் நுழைந்தவளை பின் தொடர முயன்றவனை கை நீட்டி தடுத்தாள் வசுமதி.

''ஏய் நில்லு!''

''வசு! தயவு செய்து என்னைப் புரிஞ்சுக்க''

''ஓ! நல்லா புரிஞ்சுகிட்டேனே. நான்கூட உன்னை என்னமோன்னு நினைச்சிருந்தேன். இப்பத்தானே புரியுது. நீ ஒரு தஞ்சாவூர் பொம்மைன்னு''

''வசு!''

''டாக்டர் எங்களுக்கு பதினாறு வருஷமா குழந்தை இல்லை டாக்டர்''

''இப்பத்தானேம்மா உங்க பையன் ப்ளஸ் டூ படிக்கிறான்னு சொன்னீங்க?''

''அவனுக்குப் பிறகு தான் டாக்டர் சொல்றேன்!''



-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி.

"வாயைமூடுடா. உன் அம்மா சொன்னான்னு விரும்பினவளை விட்டுட்டு இன்னொருத்தியை கட்டிக்கப் போற. நாளைக்கு அவளையும் விட்டுடாதே"

"என்ன நீ? சும்மா இதையே சொல்லிட்டு இருக்க? நாங்க என்ன ஜோடி போட்டு ஊரையா சுத்தினோம்? எனக்கு சுசியை பிடிச்சிருந்தது. அதனால பேசினோம் பழகினோம்.

ஆனா.... கல்யாணம்னு வரும்போது பெத்தவங்க வார்த்தையை மீறலாமா? எனக்கு நல்லது எதுன்னு என் அம்மாவுக்குத் தெரியாதா?"

"இதோ பாருடா.. நீ என் ஆத்திரத்தைக் கிளப்பாம போயிடு"

"சும்மா கத்தாதே வசு. நியாயமாப்பார்த்தா நான்தான் உங்கமேல கோபப்படணும்" என்றவனைப் புரியாமல் பார்த்தாள் வசுமதி.

"என்ன உளர்ற?"

"எங்கம்மாவுக்கு சுசீலாவை பிடிக்காம இல்ல"

"என்ன?"

"அவ உங்க வீட்ல இப்படி வேலைக்காரி மாதிரி இருக்கிறதுதான் பிடிக்கலை" சக்திவேலின் குற்றச்சாட்டில் அறைக்குள் இருந்த சுசீலாவின் முகம் மாறியது.

வசுமதியின் குரல் உயர்ந்தது "என்னடா உன் இஷ்டத்துக்கு உளறிட்டு இருக்க?"

"நான் ஒன்னும் உளறல. சுசீலாவோட அம்மா அப்பா உசுரோட இருந்திருந்தால் சீர் செனத்தியோட கல்யாணம் பண்ணி வெச்சிருப்பாங்க.

ஆனா இப்ப அவளே உங்க வீட்ல ஒட்டிட்டு இருக்கா. இதுல எப்படி சீரை எதிர்பார்க்க முடியும்? அதான் சொத்துபத்தோட வந்த எம்மாமன் மகளை பேசிமுடிச்சிருச்சி.

நாம ஆசைப்படுற பொண்ணுக்கு சொத்துசுகம் தேவைப்படாம இருக்கலாம். ஆனா கல்யாணம்னு வரும்போது...." அதற்கு மேலும் உள்ளே இருக்க முடியாமல் படீரென கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் சுசீலா.

முகம் கல்லாய் இறுகியிருந்தது. "நான் கூட உன் அம்மாவை எதிர்க்க முடியாமத்தான் கல்யாணத்துக்கு சம்மதிச்சியோன்னு நினைச்சேன் சக்தி. ஆனா.... அது தப்புன்னு இப்பத்தான் புரியுது"

"சுசீ! நான்"



"பேசாதே! எப்போ என்னைவிட உனக்கு சீர்செனத்தி சொத்துதான் பெரிசுன்னு தோணிச்சோ அப்பவே நீ வெறும் தூசியாகிட்ட..."

"சுசீ"

"இனி என் வாழ்நாள்ல நான் உன்னை பார்க்கவே கூடாது. போ.. போயிடு" வாசலை நோக்கி கைநீட்ட, தோளைக் குலுக்கினான் சக்திவேல்.

"நானும் இனிமே உன்னைப் பார்க்க முடியாதுதான். மாமனோட தோட்டம் காட்டை பார்த்திட்டு அவர் ஊர்லயே செட்டிலாகிடுவேன். அதான் கடைசியா உன்னைப் பார்த்து பேசலாம்னு வந்தேன்"

"பேசிட்டல்ல? கிளம்பு"

"அப்புறம்.. சுசீ! கல்யாணத்துக்கு வந்திடாதே. எனக்கு சங்கடமா இருக்கும்" என்றவனிடம் சீறினாள் வசுமதி.

"அந்தக் கண்றாவியப் பார்க்க நாங்களும் ஆசைப்படல. போடா வெளியே" கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாய் வசுமதி அவனை வெளியேற்ற, மவுனமாய் தன் அறைக்குள் நுழைந்தாள் சுசீலா.

அவளது மனம் ஏமாற்றமாய் கலங்கித் தவிக்கவில்லை. விழிகளில்

2

*ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு*
*இருட்டு கூட அழகுதான்*
*சிரிக்கத் தெரிந்தவர்களுக்கு*
*சோகம் கூட சுகம்தான்!*

*நாட்டுக் கோழி முட்டை கிடைக்குமா?"*
*"கிடைக்குமே"*
*"அமெரிக்க நாட்டு கோழிமுட்டை ஒருடஜன் கொடுங்க!"*

**-எம்.அசோக்ராஜா**
**அரவக்குறிச்சிப்பட்டி.**



''உன் வீட்ல உன் மாமியார் சாப்பிட்ட பிறகு தான் நீ சாப்பிடுவியா, ஏன்?''
''அவங்க சமையலை அவங்களே முதல்ல சாப்பிடட்டுமேன்னு தான்!''

-கு.அருணாசலம்,
தென்காசி.



கடப்பாரையை தலைகீழாய் நட்டு வைத்து காய்ந்த மட்டையோடு இருந்த தேங்காய்களை உரித்துக் கொண்டிருந்தார் முத்துசாமி. மட்டைகள் கழன்றுவிட பருமனான தேங்காய்கள் ஒருபுறம் குவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அவருக்கு சற்று தூரத்தில் அமர்ந்து காய்ந்த தென்னை ஓலைகளிலிருந்து ஈர்க்கை தனியாக வாரிக்கொண்டிருந்தாள் அவரது மனைவி பாக்கியலஷ்மி.

சொட்டுநீர் குழாய்கள் மூலம் தென்னை மரங்களுக்கு நீர்பாய்ந்து கொண்டிருக்க, கரும்பாம்புகளாய் நெளிந்து வளைந்து சென்று கொண்டிருந்த குழாய்களில் கால் இடறிவிடாமல் நிதானமாய் நடந்து முத்துசாமியை நெருங்கினர் வசுமதியும் சுசீலாவும்.

''நீ பேசு'' என சுசீலாவின் காதில் ஓதிவிட்டு நல்லபிள்ளையாய் தாயருகே அமர்ந்து கொண்டாள் வசுமதி.

சுசீலா தயக்கமாய் ஒருமுறை தன் சித்தியை பார்த்துவிட்டு, மெலிதாய் குரல் கொடுத்தாள்.

''சித்தப்பா!''

தன் வேலையை நிறுத்திவிட்டு நிமிர்ந்தார் முத்துசாமி.

''என்னம்மா?''

''வந்து... வேலைமுடிய நேரமாகுமா?''

''நம்ம தோட்ட காய்தானேம்மா. எப்ப வேணா உரிச்சுக்கலாம். என்ன விஷயம்மா?''

''அது.. வந்து சித்தப்பா...''

''என்ன? உங்க அண்ணன் மக இப்படி பம்முறா?'' தன் வேலையை தொடர்ந்து கொண்டே குரல் கொடுத்த மனைவியை அதட்டினார்.

''நீ சும்மா இரு. புள்ள என்னவோ சொல்ல வந்திருக்கு. நீ சொல்லும்மா''



''சித்தப்பா! நான்.. நான் படிக்கட்டுமா?'' தயக்கமாய் கேட்டவளை கணவனும் மனைவியும் புரியாமல் பார்த்தனர்.

''சுசீம்மா. நீ என்ன கேட்குற? எனக்கு சரியா விளங்கலையே''

''சித்தப்பா! நான் மேலே படிக்கட்டுமா? எனக்கு படிக்கணும்னு ரொம்ப ஆசையா இருக்கு சித்தப்பா''

''படிப்புன்னா... பெரிய படிப்பா?''

''ஆமா சித்தப்பா''

''எப்படிம்மா? படிப்ப நிறுத்தி ரெண்டு வருஷம் ஆகுதே. இனிமே எப்படி?''

''படிக்கலாம் சித்தப்பா. எங்க ஸ்கூல் ஹச்.எம்.கிட்ட கேட்டோம். கரஸ்ல எப்ப வேணா படிக்கலாமாம். ஸ்கூல் சர்டிபிக்கேட் இருந்தா போதுமாம். எப்படியும் சேர்ந்திடலாம்னு... சொன்னாங்க....''

முத்துசாமி யோசனையாய் தலைப்பாகையை அவிழ்த்தார்.

''என்னம்மா! ஏதேதோ சொல்ற?''

''ஆமாப்பா. நாங்க ரெண்டு பேரும்தான் போய்க்கேட்டோம். வீட்ல இருந்தும் படிக்கலாமாம். காலேஜ்ல சேரதுக்கான எல்லா ஏற்பாடும் சாரே பண்ணிடுறாராம். செலவு கூட நிறைய ஆகாதாம்'' என்ற மகளை முறைத்தாள் பாக்கியலஷ்மி.

''ஏய்! இதெல்லாம் எப்போ நடந்தது?''

''நேத்துதாம்மா போனோம்''

''யாரைக் கேட்டு பள்ளிகொடத்துக்குப் போனீங்க?''

''ஏம்மா! அடுத்த தெருவுல இருக்கிற ஸ்கூலுக்கு போறதுக்கு யார் கிட்ட கேட்கணும்?''

''எங்கிட்ட கேட்காம..'' எனத் தொடங்கிய மனைவியை பார்வையால் அடக்கினார் முத்துசாமி.

பொறுமலுடன் அவள் தனது வேலையைத் தொடர, புன்னகையோடு சுசீலாவிடம் திரும்பினார்.

''என்னம்மா! திடீர்னு படிப்பு மேலே அக்கறை?''

''திடீர்னு இல்ல சித்தப்பா. எப்பவுமே படிக்கணும்னு ஆசைதான். அப்பாகூட என்னை டீச்சருக்கு படிக்க வைக்கிறேன்னு சொன்னாங்க. ம்ப்ச்! திடீர்னு அவங்க போயிட்டதால எனக்கு எல்லாமே சூன்யமா போச்சு. இப்ப வீட்ல சும்மா இருந்தா அம்மா, அப்பா நினைப்பாவே இருக்கு. அதான் மேலே படிக்கலாம்னு...''

''ம்க்கும்! வயசு பத்தொன்பதாவுது. ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து

கல்யாணம் பண்ற நேரத்ில படிப்பு என்ன வேண்டிக்கிடக்கு?''

''சித்தி! கல்யாணத்தை எப்பவேணா பண்ணிக்கலாம். ஆனா படிப்பை அந்தந்த வயசில ஆர்வம் இருக்கும் போதே படிச்சிடணும்.''

''அது சரிம்மா. ஆனா... மேலே படிக்கணும்னா வெளியூர் போகணுமே. நம்மூர்ல அந்த வசதி கிடையாதே''

''ஆமா சித்தப்பா! கோயம்புத்தூர்ல உமாசித்தி இருக்காங்கள்ல. அவங்ககூட இப்ப பி லிட் படிச்சிட்டு இருக்காங்களாம்.''

''அப்படின்னா?''

''பி.ஏ. லிட்ரேச்சர் சித்தப்பா. தமிழ் டீச்சரா ஆகலாம். என்னையும் சேர்த்து விடுறேன்னு சொல்றாங்க. ப்ளீஸ் சித்தப்பா.''

''பார்த்திங்களா உங்க அண்ணன் மவளை. ஊமை மாதிரி இருந்துட்டு என்னென்ன வேலை செய்திருக்கா. எல்லா ஏற்பாட்டையும் அவளே செய்திட்டு ஒப்புக்காக நம்மகிட்ட கேட்கிறாளே?''

''பாக்கியம்! நீ சும்மா இரு''

''சித்தி! உங்களுக்கு தெரியாம எதையும் பண்ணணும்னு நினைக்கல சித்தி. படிக்கணும்னு ஆசை. அதை எப்படி செய்யலாம்னு படிச்சவங்க கிட்ட கேட்டு தெரிஞ்சுகிட்டேன். உங்க சம்மதம் இல்லன்னா விட்டுடலாம்.''

''க்கும்! நீ கேட்டாத்தான் உன் சித்தப்பா உடனே தலையாட்டுவாரே.''

''பாக்கியம்! நீ போய் மோட்டாரை ஆப் பண்ணு.''

''எப்படியோ போங்க. எனக்கென்ன வந்தது?'' - முனகிக் கொண்டே எழுந்து சென்றவளைக் கண்டதும் முகம் வாடினாள் சுசீலா.

அண்ணன் மகளின் முகம் வாடியதைக் கண்டதும் மனம் பதறினார் முத்துசாமி.

''அட என்னம்மா நீ? இப்ப ஏன் கண் கலங்குற?''

''நான்... படிக்க முடியாதா சித்தப்பா?''

''படிம்மா. தாராளமா படி''

''சித்தப்பா! நிஜமாவா?'' - கண்ணீரும் புன்னகையுமாய்க் கேட்டவளின் தலையில் கைவைத்து அழுத்தினார்

''என் அண்ணன் ஆசை அதுதான்னா அதை நான் நிறைவேத்த மாட்டேனா? நீ படிம்மா. படிச்சு உன் அப்பன் சொன்ன மாதிரி டீச்சராகிக் காட்டு.''



''ஆனா... சித்தி..''

''அவளுக்கென்னம்மா! பொட்டப்புள்ளைகளை நல்லபடியா கல்யாணம் பண்ணிக் கொடுத்துடணும்னு ஆசைப்படுவாள். மத்தபடி வேற எதுவும் சொல்ல மாட்டாள்.''

''தேங்க்யூ சித்தப்பா. நான் ரொம்ப பயந்திட்டு வந்தேன்.''

''ஏய்! நான்தான் சொன்னேனில்ல. நீ கேட்டா அப்பா மறுக்க மாட்டாங்கன்னு.''

''வசும்மா! இதெல்லாம் உன் ஏற்பாடா?''

''பாவம்ப்பா சுசி. படிக்கணும், படிக்கணும்னு நாலுநாளா புலம்பிட்டே இருந்தா.''

'' சரிசரி. ரெண்டு பேரும் வீட்டுக்குப் போங்க. நான் மிச்ச தேங்காயை உரிச்சிட்டு அப்படியே வாத்தியாரைக் பார்த்து விபரம் கேட்டுட்டு வர்றேன்.''

''ரொம்ப தேங்க்ஸ் சித்தப்பா. இந்த உதவியை என் வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டேன்.''

''என்னம்மா பெரிய வார்த்தையெல்லாம் பேசுற! நீ படிச்சு டீச்சரானால் எங்களுக்கும் பெருமைதான். ஆனா ஒன்னு!''

'' என்ன சித்தப்பா?''

''நல்லபடியா படிச்சு முடிச்சிட்டு நான் பார்க்கிற மாப்பிள்ளையை கட்டிக்கணும். ஏன்னா வசுவை விட ஆறுமாசம் மூத்தவ நீ. உனக்கு முடிச்சிட்டு தான் அவளுக்கு நான் மாப்பிள்ளை பார்க்கணும்.''

''ஐயோ சித்தப்பா! நான் படிக்க நிறைய நாளாகுமே''

''என்ன?''

''ஆமா சித்தப்பா! முதல்ல பி.ஏ. அப்புறம் எம்.ஏ. அப்புறம் பி.எட்.. எம்.பில்.. இப்படி நிறைய படிக்கணும் சித்தப்பா.''

''எம்மா இதெல்லாம் படிச்சாத் தான் டீச்சராக முடியுமா?''

''அ.. அப்படியில்லை சித்தப்பா..

***''எதுக்கு ஏட்டையா கபாலிய கட்டிப்பிடிச்சி அழறிங்க?''***

***''ஏரியா மாத்திக்கப் போறானாமே இனிமேல் மாமூலுக்கு என்ன பண்ணுவேங்கற துக்கம்தான்.''***

**ஏ.மூர்த்தி**
**திருவள்ளூர்**



நான்...''

''ஏய்! அம்மா வர்றாங்க. வா நாம போகலாம்'' வசுமதி அழைக்க, முத்துசாமியை ஏறிட்டாள் சுசீலா.

''சித்தப்பா! மூத்தவ சின்னவன்னு பார்க்காம முதல்ல வசுவுக்கு நல்ல மாப்பிள்ளையா பாருங்க. என்படிப்பு முடிஞ்சபிறகு எனக்கு பார்த்துக்கலாம். சரியா?'' என்றவள் அவரது பதிலுக்கு காத்திராமல் நடக்கத் துவங்கினாள்.

லேசான முகமாற்றத்துடன் அவளைப் பின் தொடர்ந்தாள் வசுமதி.

''சுசீ!''

''ம்?''

''எதுக்கு இந்த பதுங்கல் வேலை?''

''என்ன?''

''இப்ப எதுக்காக நீ இப்படி ஊரைவிட்டு போகத் துடிக்கிற?''

''படிப்பு என்னோட கனவு வசு!''

''அது மட்டும்தானா?''

''வேற என்ன?''

''சக்தியை மறக்க முடியாமத்தானே நீ இவ்வளவு அவசரமா கிளம்புற? வசுமதியின் கேள்வியில் சுசீலாவின் முகம் இறுகியது.

''இல்ல''

பொய் சொல்லாதே!

''இல்ல இல்ல''

''சுசீ?''

''தலைவரே எதுக்கு ரகசியமாய் போய் ஓட்டு கேக்கறீங்க?''
''கள்ள ஓட்ட வெளிப்படையாவா கேக்க முடியும்.''

ஏ.மூர்த்தி
திருவள்ளூர்





''தப்புதான். உம்பேச்சைக் கேட்டு, அவன் கெஞ்சலைப் பார்த்து அவனை விரும்பினது தப்புதான். ஆனா அதுக்காக காலம்பூரா கண்ணீர் விட்டுட்டு மூலையில முடங்கிக் கிடக்க நான் ஒன்னும் முட்டாள் இல்ல''

''சுசீ?''

''என்னை விட்டுட்டு போனவனை நினைச்சி நான் ஏன் அழணும்?'' பணமும் வசதியும் தானே முக்கியமுன்னு போனான்.

நான் வாழ்ந்து காட்டுவேன். இனி என்லைப்ல எந்த ஆணுக்கும் இடமில்ல. என்னோட எய்ம் முழுக்க படிப்புதான். படிப்பு... படிப்பு மட்டும்தான்' சுசீலாவின் தீவிரமான உறுதியில் மலைத்துப் போனாள் வசுமதி.

'சுசீ! நீ... என்ன சொல்ற?'

'ஆமா வசு! இனி நான் ஊருக்கு வரமாட்டேன். கோயம்புத்தூர்லயே ஏதாவது ஹாஸ்டலல்ல தங்கி என் படிப்பைத் தொடங்கிடுவேன். கொஞ்சநாள்லயே ஏதாவது ஒரு வேலையைத் தேடிக்கிட்டு என் சம்பளத்தை வெச்சே மேற்படிப்பை படிச்சுடுவேன்.'

சுசி! என்ன இது? உன் வருத்தம் மாறணும்னுதான் உம்படிப்பு விஷயத்துக்கு சம்மதிச்சேன் நீ என்னன்னா... ஊருக்கே வரமாட்டேன்னு சொல்ற?'

'அந்த சக்திவேலுக்கு பயந்துகிட்டு நான் இதைச் சொல்லல. ஊருக்கு வந்தா சித்தப்பா எனக்கு கல்யாணம் பண்ணி வெச்சிடுவாங்க.'

'அப்போ... நீ... கடைசி வரைக்கும் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லையா?'

'ஆண்கள் மேலே எனக்கு நம்பிக்கையில்ல வசு!'

'சுசீ?'

'அதோட கல்யாணம் மட்டும்தான் வாழ்க்கையா? அதையும் தாண்டி எவ்வளவோ இருக்கு. நான் படிக்கணும் ஜெயிக்கணும். என்னை மாதிரி படிக்க ஆர்வமா இருக்கிறவங்களை படிக்க வைக்கணும்.

கடைசிவரை உழைக்கணும். அடுத்தவங்களுக்கு முன் மாதிரியா இருக்கணும். வாழ்க்கையில உயரணும். எல்லாரும் அண்ணாந்து பார்க்கும் அளவுக்கு உயரணும். முகமும் கண்களும் சிவக்க, சுசீலா பேசிக் கொண்டே போக, வசுமதியின் உடலில் பயம் ஊடுருவியது.

# 3

***பூக்களாக இருக்காதே***
***உதிர்ந்து விடுவாய்***
***செடியாய் இரு அப்போதுதான்***
***பூத்துக் கொண்டே இருப்பாய்!***

'அப்போ போனவதான். அதுக்குப் பிறகு ஊருப்பக்கம் வரவே இல்ல. போன் மட்டும் பண்ணி பேசுவாள். கிட்டத்தட்ட ஏழு வருஷமாச்சு. அப்பாவும், அம்மாவும் நேர்ல கூட போய் பார்த்து கூப்பிட்டாங்க. ஆனா அவ வரவே இல்ல.

எங்க கல்யாணத்துக்கும் கூட வரல. கேட்டா ஏதோ முக்கியமான பரிட்சை இருக்குன்னுட்டா. எப்பவும் படிப்புதான் படிச்சி படிச்சி இப்ப காலேஜிக்கே பாடம் எடுக்கிறாளாம்.

ஆனா இன்னும் படிப்பை விடல. ஏதோ ஆராய்ச்சி படிப்பு படிக்கணுமாம். ஹூம்! எப்பத்தான் அவளுக்குன்னு ஒரு வாழ்க்கையை அமைச்சுக்குவாளோ?' பெருமூச்சோடு வசுமதி கதையை முடித்த போது அவள் மடியிலிருந்த மூன்று வயது குழந்தை தூங்கிப்போயிருந்தது.

மேசைமீது வைத்திருந்த மெதுவடையும் காபியும் ஆறிப்போயிருக்க, கதையில் ஆழ்ந்திருந்த ரகுநந்தனும் அவனது இளைய சகோதரன் ரவிபிரகாஷும் அசையாமல் அமர்ந்திருந்னர்.

'அந்த ஜோதிடர் எது சொன்னாலும் நடக்கும்''
''அப்படி என்ன சொல்லுவார்?''
'' ஆடு, மாடு, கோழி, மனிதன்...''
**வெ.ராம்குமார்**
**வேலூர்**



'என்னங்க! காபி ஆறிப்போச்சே! சூடு பண்ணி எடுத்திட்டு வரவா?' - என்ற வசுமதியை தலையாட்டி மறுத்தான் ரகுநந்தன்.

'காபி கிடக்கட்டும் வசு. இப்ப உன் சிஸ்டர் எங்கே இருக்காங்க? என்ன பண்றாங்க?

'கோயம்புத்தூர்ல ஏதோ ஒரு காலேஜ் பேர் சொல்வாளே.. ம்.. பாரதியார் யூனிவர்சிட்டியில தமிழ்ப் பேராசிரியையா இருக்கா. ஏங்க?'

'அண்ணி! பாரதியார் யூனிவர் சிட்டியிலா வொர்க் பண்றாங்க?' ஆவலாய்க் கேட்டான் ரவிபிரகாஷ்.

'ஆமா'

'அண்ணா! நம்ம மாறன் கூட அங்கே தானே வொர்க் பண்றான்.

'யெஸ்! போனமாசம் கூட பார்த்தேனே!'

'ஏன் அண்ணி! நீங்க போய் அவங்களை பார்த்து பேசக் கூடாதா?'

'ம்ப்ச்! நான் என்ன பேசுறது? போன்ல பேசத் தொடங்கினாலே வேற பேசுன்னு சொல்றா'

ரவி பிரகாஷின் கண்கள் அனிச்சையாய் சுவரில் மாட்டப்பட்டிருந்த புகைப்படத்திற்கு சென்றது. வசுமதியும் சுசீலாவும் தோளில் கைபோட்டுக் கொண்டு சிரித்த புகைப்படம்.

இந்த புன்னகை சிந்தும் நிலவிற்குள் இத்தனை காயமா? அவனது இழப்பை தாங்கிக் கொள்ள முடியாமலா இப்படி சந்நியாச வாழ்வை தேடிக் கொண்டாய்?

உன்னைப் போன்ற ஒரு பூவை இழந்தவன் குருடன், முட்டாள், பைத்தியக்காரன். அவனை நினைத்துக் கொண்டா உன்னையே நீ தண்டித்துக் கொள்கிறாய்?'

வழக்கமாய் பார்த்து ரசிக்கும் நிழற்படம்தான். ஆனால் இன்று கேட்ட நிகழ்விற்குப்பின் உடனே அவளை நேரில் சந்திக்க வேண்டும் போல் மனம் பரபரத்தது.

'அப்பாவுக்கும் உடம்புக்கு முடியல்ல. தன் அண்ணன் மகளை தனிமரமா விட்டுட்டு போயிடுவோமோன்னு பயப்படுறாங்க. அந்த பயம் தான் அப்பாவை படுக்கையில தள்ளிடுச்சி' மனைவியின் குரலில் தெரிந்த வருத்தம் கண்டு அவளது தோளைத் தட்டினான் ரகுநந்தன்.

'இதுல மாமா தப்பு எதுவும் இல்லையே'

'ஆனா ஊர்க்காரங்க அப்படி நினைக்கலங்க தம் பொண்ணை மட்டும் சீரும் சிறப்புமா கல்யாணம் பண்ணி வெச்சிட்டு. அந்தப்

பொண்ணை இப்படி அநாதையா விட்டுட்டானேன்னு பேசுறாங்களாம்.'

'ஊர் கிடக்குது விடும்மா. வாழ்ந்தாலும் பேசும். தாழ்ந்தாலும் பேசும்'

'இல்லங்க. நாங்க செய்ததும் தப்புதான். அதுவும் நான் பண்ணினது பெரியதப்பு.

'நீ என்ன பண்ணின?'

'அந்த சக்திவேல் பய சுசீலாவை சுத்தி சுத்தி வந்தப்ப கூட அவ திரும்பிப்பார்க்கல. என்கிட்ட வந்து அழுதான். நான்தான் மனசு கேட்காம அவகிட்ட பேசினேன். அவளும் விரும்பினாள்.

இந்த நாய் இப்படி மாறுவான்னு நினைக்கல. என்னாலதான்... அவ மனசு ரணமாகிப்போச்சு. படிக்கணும்னு சொன்னப்பவும் நான்தான் எல்லா ஏற்பாடும் செய்தேன்.

அவ மனசுக்கு ஒரு மாறுதலா இருக்கும்னு நினைச்சேன். ஆனா அவ இப்படியே இருந்திடுவாளோன்னு மனசு கிடந்து தவிக்குது. அவ வாழ்க்கையை நான்தான் பாழாக்கிட்டோன்னு தோணுது. ஏதோ ஒரு குற்ற உணர்வு என்னை ஆட்டிப்படைக்குதுங்க. முள்மேல நிற்கிற மாதிரி இருக்கு. கண்களில் நீர் மின்னச் சொன்னவளைக் காணும் போது சங்கடமாக இருந்தது ரவிக்கு.

'வருத்தப்படாதீங்க அண்ணி!'

'இல்ல தம்பி! அவளும் என்னை மாதிரி குடும்பம் குழந்தைன்னு வாழவேண்டியவ. இப்ப தனிமரமா நிற்கிறாளே. அதுக்குக் காரணம் நான்தான்னு..'

'ஏன் அண்ணி. பீல் பண்றீங்க? பேசாம நீங்களே ஒரு மாப்பிள்ளை பார்க்க வேண்டியதுதானே?'

''அட நீங்க வேற? இதுவரைக்கும் இருபது மாப்பிள்ளைக்கு மேலே பார்த்தாச்சு. அவ ஒத்துக்கணுமே'

''என்னதான் சொல்றாங்க?'

'கல்யாணமே பண்ணிக்க மாட்டாளாம். இந்த மாதிரி பேச்சே எடுக்காதீங்கன்னு கத்துறா.'

'அந்த அளவுக்கு அவனை விரும்பினாங்களா?'

'அப்படின்னும் சொல்ல முடியாது தம்பி. இயல்பாகவே அவ கொஞ்சம் கூச்ச சுபாவம் உள்ளவ. அவன் பத்து கேள்வி கேட்டா இவ ஒத்தை வார்த்தை தான் பேசுவாள். அதுவும் நான் இல்லாம அவனைத் தனியே போய் மீட் பண்ணமாட்டாள்.




அவ்வளவு ஏன்? அவன் பத்திரிகையை தந்தானே அன்னிக்கும் கூட அவ கண்ல சொட்டுக்கண்ணீர் வரல. அழல. அவன்கிட்ட கோபப்பட்டு சண்டை போடல. என்னால கூட அப்படி இருக்க முடியல. ஆனா அவ சாதாரணமாத்தான் இருந்தாள். இப்ப.. எப்படி... ஏன் இப்படி இருக்கான்னு புரியல...'

'அண்ணி! அவங்க கோபப்பட்டு இருந்தாலோ, அழுதாலோ அந்தக் காயம் மறைஞ்சிருக்கும். கண்ணீராவோ வார்த்தைகளாவோ வருத்தமெல்லாம் வெளியேறியிருக்கும்.

அது உள்ளயே தங்கிட்டதால தான் அவங்க இறுகிப் போயிட்டாங்க. அதுதான் மொத்த ஆண்வர்க்கத்தையும் இப்ப வெறுக்க வைக்குது.

'நான் என்ன பண்ணுவேன்? நேத்து அப்பா ரொம்ப வருத்தப்பட்டாங்க. என் கண்ணு மூடுறதுக்குள்ள அவளுக்கு ஒரு நல்லது பண்ணிடணும்னு கலங்கிட்டாங்க.'

'மாமாவை தைரியமா இருக்கச் சொல்லுங்க அண்ணி. இனி இது உங்க பிரச்சனை இல்ல. என் பிரச்சனை' என்றவனை வியப்பாய் பார்த்தான் ரகுநந்தன்.

'ரவி! என்னடா சொல்ற?'

'அது என் பிரச்சனைன்னா... நம்ம பிரச்சனை'

'என்ன?'

'அண்ணி வருத்தப்பட்டா அது நமக்கும் வருத்தம் தானே அண்ணா? அதைத்தான் சொன்னேன்' என்றான் சமாளிப்பாய்.

'ஓஹோ' நம்பாத பார்வையோடு மனைவியின் மடியில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு ரகுநந்தன் உள் அறைக்குள் செல்ல, வசுமதி மச்சினனிடம் திரும்பினாள்.

'தம்பி!'




'சொல்லுங்கண்ணி'

'இப்ப ஏதோ பேர் சொன்னீங்களே மாறன்னு'

'ஆமா'

'அவர் யாரு?'

' நம்ம உறவுக்காரன்தான். சும்மா வாடா போடான்னு பேசுற அளவுக்கு பழக்கம். ஏன் அண்ணி?'

'அவர்கிட்ட கொஞ்சம் சொல்லி சுசீகிட்ட பேசச் சொல்லக் கூடாதா?'

'அது.. அவ்வளவா நல்லா இருக்காது அண்ணி'

'ஏன்?'

'வேலை பார்க்கிற இடத்தில அவங்களை கஷ்டப்படுத்தணுமா? அப்புறம் அவங்களோட கோபம் அதிகமாகுமே தவிர குறையாது.'

'அப்போ... வேற வழியே இல்லையா?' வசுமதி வருத்தமாய்க் கேட்க, ரவிபிரகாஷின் மூளைக்குள் மின்னல் வெட்டியது.

அண்ணியிடம் சொல்லிவிடலாமா? இந்தப் புகைப்படத்தை பார்த்ததில் இருந்தே இவள் மீது பைத்தியமாய் இருப்பதை.

'என்ன தம்பி யோசிக்கறீங்க?'

'ஒரு அருமையான பையன் இருக்கான் அண்ணி. அவன் மனசு வெச்சா உங்க சகோதரி மனசை மாத்திடுவான்.'

'என்ன? யாரு? எங்கே இருக்கான்?'

''எல்லாம் உங்களுக்கு தெரிஞ்சவன்தான். நிறைய படிச்சிருக்கான். இப்ப ஐ.ஏ.எஸ். பரிட்சை கூட எழுதியிருக்கான்.'

'என்ன? ஐ.ஏ.எஸ்ஸா. யாருதம்பி? உங்க கூட படிக்கிற பையனா?' வசுமதி ஆவலாய்க் கேட்க முறைத்தான் ரவிபிரகாஷ்.

'ஏன் அண்ணி! என்னைப் பார்த்தால் மாப்பிள்ளையாய் தோன்றவில்லையா?'

'என்ன? வாயைப் பிளந்தாள் வசுமதி.

'அப்படி போடு! என்னடா லீவு நாள்ல வீட்ல ஒரு நிமிஷம் கூட



இருக்காதவரு இன்னிக்கு போட்டோவைக் காட்டி இந்தப் பொண்ணைப் பத்தி விசாரிக்கும் போதே நினைச்சேன்! இப்படி ஏதாவது இருக்கும்னு''

என்றவாறே வந்த ரகுநந்தனைப் பார்த்த அசடு வழிய சிரித்தான் ரவி பிரகாஷ்.

''என்னங்க சொல்றீங்க?''

''உனக்கு இன்னும் புரியலையா வசு! இவன் இந்த போட்டோவை அடிக்கடி உற்றுப்பார்க்கும் போதே எனக்கு டவுட் தான். இப்ப கிளியராயிடுச்சு''

''அண்ணா! சும்மா கிண்டல் பண்ணாதே. எனக்கு பிடிச்சுருக்கு. பார்த்தேன்''

''தம்பி! என்ன சொல்றீங்க நீங்க?''-வியப்பாய் விழிகளை மலர்த்தினாள் வசுமதி.

''ஆமா அண்ணி. சுசீலாவை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. அதான் அவங்களைப் பத்தி கேட்டேன். இப்ப நீங்க சொன்ன பிறகு முடிவே பண்ணிட்டேன்''

''எ...ன்ன முடிவு?''

''கட்டினா உங்க சகோதரியைத் தான் கட்டுறதுன்னு.''- ரவிபிரகாஷ் உறுதியாய்ச் சொல்ல, வசுமதிக்கு பன்னீர் மழை தூவினாற் போலிருந்தது.

உடல் முழுக்க உற்சாக வெள்ளம் கரை புரண்டது. கண்கள் பனிக்க புன்னகையோடு கேட்டாள்.

''த...ம்...பி! நிஜமாவா சொல்றீங்க?''

''கண்டிப்பா அண்ணி. நீங்க முதல்ல சுசீலாவோட அட்ரஸைக் கொடுங்க. மத்ததையெல்லாம் நான் பாத்துக்கிறேன்.''

''டேய்! அப்பா அம்மாகிட்ட சொல்ல வேண்டாமா?''

''அது உன் வேலை அண்ணா.''

''அது சரி.''

''நீ இங்கே பெரியவங்ககிட்ட பேசு. நான் நாளைக்கே கோவை போய் சுசீலாகிட்ட பேசுறேன்''

''என்ன? நாளைக்கேவா?''

''ஆமா! நல்ல காரியத்தை தள்ளிப்போடக்கூடாது அண்ணா.''

''அடடா! என் தம்பி போற போக்கைப் பார்த்தால் இன்னும் பத்து நாள்ல சுசீலாவைக் கல்யாணம் பண்ணிக் கூட்டிட்டு வந்திடுவான்

போலிருக்கே''

''நோ நோ. முதல்ல சுசீலாயோட மனசு மாறணும். அவ என்னை விரும்பணும். அதுக்கு பிறகுதான் கல்யாணம்.''

''ஐயோ! கேட்கவே சந்தோஷமா இருக்கே. இது.....இதெல்லாம் நடக்குமா?''

''கண்டிப்பா நடக்கும் அண்ணி! ரவி இருக்க பயமேன்?''- வலது கையை உயர்த்தி ரவிபிரகாஷ் சொல்ல, தன் கவலைகளை மறந்து வாய்விட்டு சிரித்தாள் வசுமதி. மனம் லேசாகி மிதக்கத் துவங்கியது.

## 4

***கா**ற்றைப்போல் உன்னைத்*
*தொடர்வேன் நீ என்னையே*
*சுவாசிக்க வேண்டும் என்பதற்காக!*
*நான் உன் சுவாசம்!*

சுசீலா வெகுவாய் மாறியிருந்தாள். குழந்தைத்தனம் கொஞ்சம் முகத்தில் இப்போது மிடுக்கு கூடியிருந்தது. மிரளும் கருவிழிகளில் புத்திக் கூர்மை தெரிந்தது. சின்னஞ்சிறு இதழ்களில் கண்டிப்புடன் கூடிய புன்னகை.

நேர்த்தியாய் கட்டப்பட்டிருந்த புடவையில் கம்பீரமாய் அவள் கல்லூரிக்குள் நுழையும் போது எதிர்ப்படும் மாணவர்களின் தலை தானாய் தாழ்ந்து வணங்கியது.

*''கட்டின புடவையோட இரவே என்னோடு வர்றதா சொன்னியே..பின் ஏன் வரலை?''*
*''நேற்று நான் சுடிதார் போட்டிருந்தேன்!''*
**வெ.ராம் குமார்**
**வேலூர்.**



புன்னகையோடு பதில் வணக்கம் சொல்லிக் கொண்டே அலுவலக அறைக்குள் நுழைந்த போது சுகுமாறன் எதிர்ப்பட்டான். முனைவர் பட்டம் பெற்ற பேராசிரியர்.

''குட்மார்னிங் ஸார்''-புன்னகைத்தாள்.

''குட்மார்னிங்''-அவளை விட சற்றே வயது முதிர்ந்த சுகுமாறன் பளிச்சென புன்னகைத்தான்.

''ஸார்! இன்னிக்கு நாட்டுப்புறவியல் பத்தி குறிப்பு கேட்டீங்களே. கொண்டு வந்திருக்கேன்''

''ஓ! ஸாரி சுசீலா. இன்னிக்கு ஊர்ல இருந்து ஒரு முக்கியமான கெஸ்ட் வர்றார். நான் அவரை ரிஸீவ் பண்ணணும்.''

''அப்போ....''

''ஸ்டாப் ரூம்ல டேபிள்ல ரெண்டு கைடு வெச்சிருக்கேன். அதில இருந்து தேவையான குறிப்புகளை எழுதிடுங்க. நாளைக்கு பாப்போம்.''

''ஓ.கே.ஸார்''

''ஓ.கே.- என்றவாறு அவன் விலகி நடக்க,

எரிச்சலாய் விலகினாள் சுசீலா.

'இவனைப் போய் தனக்கு ட்ரெய்னராய் போட்டார்களே. சுபத்ரா மேடத்தை போட்டியிருந்தால் நன்றாய் இருந்திருக்கும். இவனைத் தேடி அலைவதே பெரிய கஷ்டம்'- தனக்குள் முனகிக் கொண்டே பணியாளர்கள் அறையை அடைந்த போது இரண்டு பெண் பேராசிரியைகள் அமர்ந்திருந்தனர்.

வழக்கமான புன்னகை பரிமாறலோடு உள்ளே நுழைந்து தன் கைப்பையை கழற்றி மேசை மீது வைத்தபோது அறையில் இருந்த தொலைபேசி வீறிட்டது.

அருகே இருந்த பேராசிரியை எடுத்து பேசிவிட்டு,

''சுசீலா மேம்! உங்களுக்கு தான் போன்''- என நீட்டினாள்.

''எனக்கா? யாரு ஆபீஸ் நம்பர்ல பண்றது?''

குழப்பமாய் தொலைபேசியை நெருங்கி ரீஸிவரை வாங்கி காதில் வைத்தாள்.

''ஹலோ!''

''ஹாய்!'' -துடிப்பான துள்ளலான குரலில் புருவம் சுருக்கினாள்.

''ஹலோ! யாருங்க?''

''ஹாய்! நான் தான் ரவி பேசுறேன்''-குரலில் உற்சாகம் வழிய

குழம்பி போனாள்.

''யாரு?''

''ரவி. ரவி பிரகாஷ்''

''ஸாரி! நீங்க யாருன்னு தெரியலையே. உங்களுக்கு யார் வேணும்?''

''நீங்கதானே சுசீலா?''

''ஆமா''

''அப்போ நீங்கதான் வேணும்''

''வாட்? ஹேய் மிஸ்டர்...''

''வெயிட் வெயிட்! சுசீலான்னா லேடி துர்வாசமுனின்னு பேசிக்கிறாங்க. பட்! உங்க குரலைக் கேட்டா ஏதோ எல்.கே.ஜி.குழந்தை பேசுற மாதிரி இருக்கு''

''மிஸ்டர்!''

''எனக்கு எதுக்கு சுசி இவ்வளவு மதிப்பு?

சும்மா ரவின்னே கூப்பிடேன். நான் ஒன்னும் தப்பா நினைச்சுக்க மாட்டேன்.''

''ஹேய்''

''எனக்கு கூட உன்னை வாங்க போங்கன்னு கூப்பிட பிடிக்கல. நாம தான் ஒன்னுக்குள்ள ஒன்னா ஆகிட்டோமே. எதுக்கு டிஸ்டன்ஸ்?- அவன் வெகு உரிமையாய் பேச, சுசீலாவின் முகம் கடுகடுத்தது.

''ஏய்! யார் நீ?''

'' அதான் சொன்னேனே சுசீ. ரவின்னு ''

'' சுசீலா மேடம் போன்ல யாரு?'' அருகே அமர்ந்திருந்த சக பேராசிரியை கேட்க, கடுப்பை மறைத்தபடி சொன்னாள்.

'' யாரோ வெட்டிப்பய'' என்றவாறே ரிசீவரை வைக்க முற்பட ரவியின் குரல் தடுத்தது.

'' போனை வெச்சிடாதே சுசீ! நான் திரும்பவும் பண்ணுவேன். நீ எடுக்காட்டி பிரின்சிபல் ரூமுக்கே பண்ணிடுவேன்''

சுசீலாவின் முகம் சுருங்கியது. 'யாரிவன்? கல்லூரியின் அனைத்து தொலைபேசி எண்களையும் தெரிந்து வைத்திருக்கிறானே? யாராய் இருக்கும்?

இங்கு பயிலும் மாணவர்களா? இருக்காது. அனைத்து மாணவர்களும் அருமையான பிள்ளைகள் ஆயிற்றே. இது வேறு யாரோ? ஒரு வேளை ஏதாவது ஆசிரியராய் இருக்குமா?





இல்லையே! இந்த குரலை இதற்கு முன் நான் கேட்டதே இல்லையே? எத்தனை இயல்பாய் உரிமையாய் பேசுகிறான். யார் இவன்?

'' என்ன சுசீ, பதிலையே காணோம். நான் யாருன்னு தானே யோசிக்கிறே?''

'' இதோ பார் நீ யாரா வேணா இருந்திட்டுப் போ. எனக்கு ஏன் போன் பண்ற? முதல்ல அதைச் சொல்லு''

'' அடடா கோபப்படக்கூடாதும்மா. என்னை மாதிரி சிரிச்சுட்டே பேசணும். ''

'' ஓ ஷிட் ''

'' ஓ.கே. உன்னை வொர்க்கிங் ஹவர்ல டிஸ்டர்ப் பண்ணிட்டன்னு நினைக்கிறேன். ஓ.கே. நீ வேலையை கவனி. நாம நாளைக்கு மீட் பண்ணலாம். ''

'' என்ன? '' பலமாய் அதிர்ந்தாள்.

'' ஏன் சுசீ பதறுற? தனியா இல்ல. உன் காலேஜ்ல வந்து தான் மீட் பண்ணப் போறேன். ''

'' ஏய் யார்டா நீ? எனக்கு தலையே வெடிச்சிடும் போலிருக்கு ''

'' ம்.. இதைத்தான் இதைத்தான் நான் எதிர்பார்த்தேன் '' ரவி வெற்றிச் சிரிப்போடு சொல்ல மீண்டும் கடுப்பானாள் சுசீ.

'' என்ன சொல்றே? ''

'' நான் யாரு? எப்படி இருப்பேன்னு தெரிஞ்சுக்க ஆர்வமா இருக்கு இல்ல?''

'' நான்சென்ஸ் ''

'' ஹய் இப்படியெல்லாம் கோபப்பட்டா நாங்க நம்பிடுவோமா? என்னைப் பார்க்கணும்னு உனக்கு இப்பவே ஆசை வந்திடுச்சு. அதை கோபத்திரை போட்டு மூடுற ''

'' நான் யாரையும் பார்க்க விரும்பலை''

'' நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் என்னைப் பார்த்து தான் ஆகணும். அது தான் விதி. நாளைக்கு காலையில கரெக்டா பத்து மணிக்கு உன் முன்னால நான் இருப்பேன். ''

'' என்ன ''

'' எனக்கு பயந்து லீவு போட்டுட்டு வீட்ல உட்கார்ந்திடாதே. உன் வீட்டு அட்ரசும் எனக்குத் தெரியும் ''

'' வாட் நான்சென்ஸ்! நான் உனக்கு பயப்படுறதா? நெவர்''



*''அந்த பெரியவரை சுற்றி எப்பவுமே இளைஞர்கள் இருக்கிறார்களே ஏன்?''*
*''அந்த பெரியவருக்கு ஐந்து பெண் பிள்ளைகளாம்!''*

**வெ.ராம் குமார்**
**வேலூர்.**



சுசீலாவின் குரலில் கலக்கம் மறைந்து ஒருவித துணிவு தெரிந்தது.

ரவியால் அதை உணர முடிந்தது. அவனது புன்னகை இன்னும் அதிகரித்தது. வேண்டுமென்றே சீண்டினான்.

'' பார்க்கலாமா ''

'' பார்க்கலாம் ''

'' நாளைக்கு என்னைப் பார்க்கிற வரைக்கும் உன்னால நிம்மதியா சாப்பிட தூங்க முடியாது. நான் உன்னை டிஸ்டர்ப் பண்ணிட்டே இருப்பேன்''

'' வாட்? ''

'' ஐ... மீன்... என்னோட நினைப்பு உன்னை டிஸ்டர்ப் பண்ணும் ''

'' அதுக்கெல்லாம் வேற யாரையாவது பாரு ''

'' ஏன்? ''

'' உன்னை மாதிரி ஒருத்தனை நினைச்சுட்டு இருக்க நான் ஒண்ணும் பைத்தியக்காரி இல்ல. எனக்கு ஆயிரம் வேலை இருக்கு. போனை வை''

'' அவசரப்படாதே சுசீ! ஆமா உன்னைப் பத்தி நீ என்ன தான் நினைச்சுட்டே இருக்கே? ''

பதில் சொல்ல மனமின்றி பற்களை கடித்தாள். மறுமுனையில் ரவியின் சிரிப்பு செவியை நிரடியது.

'' பதில் சொல்ல முடியலையா? சுசீ! நீ உன்னை கற்சிலையா நினைச்சுட்டு இருக்க. யாராலும் உன்னை அசைக்க முடியாதுன்னு நீயே முடிவு பண்ணிட்டு இருக்க.

ஆனா என்னைப் பொறுத்தவரைக்கும் நீ ஒரு ரோஜாப்பூ. பனித்துளியால மூடப்பட்ட ரோஜாப்பூ. நான் ரவி. ரவின்னா சூரியன். நான்

"பிறந்த நாள் விழா மேடையில்
தலைவரோட முகம் இறுக்கமா இருக்கே..
ஏன்?"
"அவரோட எடைக்கு எடை இது வரை
அவர் மேல வீசப்பட்ட செருப்புகளை வச்சு
குடுத்துட்டாங்களாம்."

பர்வீன் யூனுஸ்
சென்னை



பார்த்தாலே உன்னை மூடிட்டு இருக்கிற பனித்துளியெல்லாம் மாயமாயிடும்."

" என்ன? ஏதாவது சினிமாவுக்கு வசனம் எழுதுறவனா நீ?"

" நடைமுறையில நாம பேசுறது தானே வசனங்களா மாறுது "

" ஆனா உன்னோட முட்டாள் தனமான டயலாக்க கேட்க எனக்கு பொறுமை இல்ல. போனை..."

" வெச்சிடாதே. ஜஸ்ட் டூ மினிட்ஸ் பிளீஸ் "

" ம்ப்ச்! உனக்கு என்ன தான் வேணும்? "

" நீ தான் வேணும் "

" ஹேய் "

" என் வாழ்நாளின் கடைசி நொடிவரை... என் இறுதி மூச்சு வரை நீ தான்... நீ மட்டும் தான் வேண்டும் " இதுவரை குறும்பாக ஒலித்த குரல் நெகிழ்வோடு ஒலிக்க, சுசீலாவின் பேச்சு தடைபட்டது.

" சுசீ நான் பேசுறது எதுவும் வேடிக்கையோ, பொய்யோ இல்ல, அத்தனையும் உண்மை. இப்போதைக்கு இது போதும். மிச்சத்தை நாளைக்கு நேர்ல பேசிக்கலாம்

மார்னிங் கண் விழிக்கும்போதே என்னை எதிர்பார்க்கத் தொடங்கிடு. எந்த நிமிடத்திலும் எந்த ரூபத்திலும் உன் முன்னால வந்து நிற்பேன் ஓ.கே.?

போனை வெச்சிடவா? பை டேக் கேர்"

என்றவாறு அவன் போனை வைத்த பின்பும் ரிசீவரை சாத்த தோன்றாமல் சிலையாய் நின்றாள் சுசீலா.

அவளது மனம் வெகுவாய் குழம்பித் தவிக்க துவங்கியது. யார்?



யாரவன்? ஏன் என்னை இம்சிக்கிறான்? தலையை இறுகப் பற்றிக் கொண்டாள்.

போனை வைத்த ரவியை பார்த்து மலைத்துப் போனாள் வசுமதி. ஒருமுறை கூட சுசியை இவன் நேரில் பார்த்ததில்லை. பேசியதில்லை. இன்று எப்படி இவனால் இத்தனை சரளமாகப் பேச முடிகிறது?

" என்ன அண்ணி ஷாக்காகிட்டீங்க?"

" எப்படி தம்பி?"

" அண்ணி முதல்ல இந்த தம்பிய விடுங்க. ரவின்னு கூப்பிடுங்க"

" ஐயோ வயசுல மூத்தவர் நீங்க. உங்களைப் போய்"

"வயசைப் பார்க்காதீங்க அண்ணி. உறவுமுறையைப் பார்த்தாப் போதும். தம்பின்னா ஒரு மாதிரி இருக்கு "

" ஏன்? " என்றவளிடம் வந்தான் ரகுநந்தன்.

" என்ன வசு நீ? அவன் ஏன் சொல்றான்னு புரியலையா?"

" ம்ஹீம்"

" உன் சகோதரியை கட்டிக்கப் போறவனை நீ தம்பின்னு கூப்பிடலாமா? அது சரியா? "

" அட ஆமா "

" அதான் சாரு தம்பியை அவாய்ட் பண்ணச் சொல்றாரு இல்லடா?"

" அண்ணா! நீ எப்பவுமே பிரிலியண்ட் தான். உன்னை அடிச்சிக்க ஆளே கிடையாது"

" அது இருக்கட்டும். அதான் நாளைக்கு நேர்ல போய் பார்க்கப் போறியே அதுக்கு முன்னால ஏன் இந்த போன்? "

" விஷயம் இருக்குண்ணா "

" என்ன விஷயம்? "

" இப்போ திடீர்னு போய் அவ முன்னால என்னை அறிமுகப்படுத்திக்கிறதை விட இப்படி கொஞ்சம் பேசிட்டு போய் நின்னால் எப்படி இருக்கும்? சும்மா சூப்பரா இருக்காது? "

" ரவி "

" ஆமாண்ணா இப்ப பேசின பேச்சில இன்னைக்கு முழுக்க அவ என்னை மறக்க மாட்டா. நாளைக்கு நான் போய் அறிமுகப்படுத்தினதும் என்னை திட்றதுக்காக பேச தொடங்கிடுவா. எனக்கும் எந்த சிரமமும் இருக்காது எப்படி? " என்ற மைத்துனனை கண்டு மெய்யாகவே பிரமித்துப் போனாள் வசுமதி.

# 5

***எல்லோரது இதயத்திலும்***
***காயங்கள் உண்டு - அதை***
***வெளிப்படுத்தும் விதம் தான்***
***வித்தியாசம் உரிமை***
***உள்ளவர்களிடம் கண்ணீராக...***
***மற்றவர்களிடம் புன்னகையாக...***

கல்லூரி வளாகத்தில் நிழலையும், நறுமணத்தையும் பரப்பிக் கொண்டிருந்த பன்னீர் மரத்தடியில் நின்று கொண்டிருந்தனர் ரவிபிரகாஷும் சுகுமாறனும். மெலிதாய் வீசிய காற்றில் சில பன்னீர் புஷ்பங்கள் நீண்ட காம்புடன் உதிர்ந்து தரையை அழகுபடுத்திக் கொண்டிருக்க, ரவிபிரகாஷின் கண்கள் அவற்றை வெகுவாய் ரசித்தன.

சுகுமாறனின் முகத்தில் மெல்லிய பதட்டம் பரவிக் கிடந்தது. நொடிக்கொருதரம் வாசலை பார்ப்பதும் கடிகாரத்தை பார்ப்பதுமாய் நின்றிருந்தான்.

'' ரவி எதுவும் சொதப்பிட மாட்டியே? ''

'' ம்ப்ச் எத்தனை முறை இப்படி கேட்பாய்? ''

'' இல்லடா! இந்த காலேஜ்ல எனக்குன்னு நிறைய மரியாதை இருக்கு. ஸ்டூடண்ட் மட்டுமில்ல எல்லா ப்ரொப்பஸர்களும் எம்மேல தனி மதிப்பு வச்சிருக்காங்க ''

'' பயப்படாதே மாறா. என்னால உன் மரியாதைக்கும், மதிப்புக்கும் எந்த பங்கமும் வந்திடாது''

'' அதுக்கில்லடா! நீ ஏதாவது ஏடாகூடம் பண்ணி அது என் தலையில வந்து விழுந்திடக்கூடாது. ''

'' ஏன் இப்படி பயந்து சாகுறே?''

'' பயப்படாம? நீ அந்த சுசீலாவை நேர்ல பார்த்திருக்கியா? ''

'' இல்ல ''

'' பார்த்தால் உனக்கும் பயம் வரும்''

'' ஏன்டா நிஜமாவே அவ ரொம்ப கோபக்காரியா? ''






'' அப்படின்னு சொல்ல முடியாது. ஆனா அவங்க சிரிச்சு நான் பார்த்ததே இல்ல. ஆண் பேராசிரியர்களிடம் நின்று ஒரு வார்த்தை பேசினது இல்ல. முகத்தில எப்பவும் ஒருவித இறுக்கம், கடுமை. அழகான முகம்னு யாரும் ஒருமுறை பார்க்க முடியாது. அப்படி ஒரு கடுமை. ரத்தினச் சுருக்கமா ரெண்டு வார்த்தை பேசுறதே அபூர்வம்''

'' சரி விடு இனி அது என் பொறுப்பு ''

'' பார்த்து ரவி பிரின்சிபால் கிட்ட உன்னைப் பத்தி ரொம்ப உயர்வா பேசி பெர்மிஷன் கேட்டிருக்கேன் ''

'' என்னன்னு சொன்னாய்? ''

'' நெக்ஸ்ட் மன்த்ல கலெக்டராக ஜாய்ன் பண்ணப் போற. அதுக்கு முன்னால நாட்டுப்புறக்கலைகளையும், அவுங்களோட வாழ்க்கை முறையும் ஆராய்ச்சி பண்ணப் போறதா சொல்லியிருக்கேன் ''

'' குட் ''

'' சுசீலா கிட்ட பேசும்போது ரொம்ப ஜாக்கிரதையா பேசு. போன்ல பேசின மாதிரி பேசிடாதே. பிரச்சனையாயிடும். ''

'' என்ன மாறா இது கூட எனக்குத் தெரியாதா? போன்ல சும்மா கலாட்டா பண்ணிப் பார்த்தேன். ''

'' நேர்ல அப்படி எதுவும் பண்ணிடாதே. பாட சம்பந்தமா மட்டும் பேசு. தயவு செய்து எம் பேரைக் கெடுத்திடாதே. பிளிஸ்''

'' ஏய் போதும்பா பேசியே அறுக்காதே. நான் சுசி கிட்ட பேசுறதுக்கு ஒத்திகை பார்க்கணும். ''

'' பார்த்துடா. நான் '' என்றபோது வயது முதிர்ந்த பெண்மணி புன்னகையாடு காலை வணக்கம் கூற அவசரமாய் புன்னகைத்தான் சுகுமாறன்.

'' குட்மார்னிங் மேம் ''

'' என்ன சார் இங்கே நின்னுட்டு இருக்கீங்க? ''

'' அது சும்மா தான் இல்ல சுசீலாவைப் பார்க்கணும். அவங்க கிட்ட கைடு கொடுத்திருந்தேன் ''

'' சுசீலா ரெஸ்ட் ரூம்ல இருக்காளே ''

'' என்ன வந்துட்டாங்களா? ''

'' எப்பவோ வந்துட்டா. உடம்புக்கு முடியலை போலிருக்கு. மாத்திரை போட்டுட்டு ரெஸ்ட் எடுத்திட்டு இருக்கா. ''

'' என்ன ஆச்சு? '' பதட்டமாய் கேட்க முயன்ற ரவியை தடுத்து தானே கேட்டான் சுகுமாறன்.

'' தலைவலின்னு சொன்னாள் மூணு தரம் மாத்திரை போட்டிருக்கா. எனக்கென்னவோ அவ ரொம்ப டிஸ்டர்ப்ட்டா ஆன மாதிரி தோணுது ''

'' மேம் ''

'' நேத்து ஏதோ ஒரு ராங்கால் வந்தது. அப்ப இருந்தே அவ முகம் சரியில்ல. கேட்டா சரியா பதில் சொல்ல மாட்டேங்கிறா'' அவள் யோசனையாய் சொல்ல, இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

'' ஓ.கே.மேம் நான் பிறகு பேசிக்கிறேன். அவுங்க ரெஸ்ட் எடுக்கட்டும்''

'' ஓ.கே. சார்'' என்றவாறு அவள் விலகி நடக்க, ரவி பிரகாஷ் அவசரப்படுத்தினான்.

'' ரெஸ்ட் ரூம் எங்கே இருக்கு மாறா? ''

'' எதுக்குடா? ''

'' நான் உடனே சுசீயைப் பார்க்கணும். ''

'' என்ன இப்பவா? ''

'' ஆமா ''

'' விளையாடாதே ரவி. சுபத்ரா மேம் சொன்னதைக் கேட்டல்ல? நீ போன்ல பேசினதிலயே அப்செட்டாகி இருக்காங்க. இப்பப் போய் நான் தான் ரவின்னு அவங்க முன்னால போய் நிற்கப் போறியா?''

'' பின்னே? ''

'' வேண்டாம் ரவி. இது காலேஜ். சுசீலா கோபப்பட்டு கத்தினா போறது நம்ம மானம் மட்டுமில்ல. உன்னோட கனவும் தான் ''

'' மாறா ''

'' சொன்னாக் கேளு. ஒரு ரெண்டு நாள் போகட்டும். நான்



உன்னை''

'' நோ நான் இப்பவே சுசீயைப் பார்க்கணும். ''

'' அடம்பிடிக்காதே ரவி ''

'' நோ கால் மீ பிரகாஷ் ''

'' என்ன? ''

'' ரவின்னு கூப்பிடாதே ''

'' ஏன்டா? ''

'' பிரகாஷ்னு கூப்பிடு ''

'' அதான் ஏன்னு கேக்கிறேன்?''

''உங்கிட்ட சொல்றதுக்கென்ன? நேற்று போன்ல கொஞ்சம் ஓவரா பேசிட்டேன்''

'' என்ன? ''

'' ம்... ரொம்ப உரிமையா பேசுறதா நினைச்சுக்கிட்டு ஏதேதோ சொல்லிட்டேன். அதான் அவளை டிஸ்டர்ப் பண்ணிடுச்சு போலிருக்கு ''

சுகுமாறன் கோபமாய் முறைத்தான். '' ஏன்டா உனக்கு இந்த வேண்டாத வேலை? பேசாம கலெக்டரானோமா மக்களுக்கு நாலு நல்லது செய்தோமான்னு இல்லாம...''

'' போதும் நீ ஆரம்பிச்சுடாதே வா போகலாம்''

'' என்னவோ அடி கிடைக்காம இருந்தா சரி தான் ''

'' அதையெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ மட்டும் என்னை ரவின்னு கூப்பிட்டு விடாதே''

'' ஏன்டா? ''

'' ரவின்னு பேரைக் கேட்டால் இப்ப உள்ள மனநிலையில சுசீயோட

''ஜெயிலுக்கு போயிட்டு வந்த பின் தப்பு பண்ணாம இருப்பியா..?''

''கண்டிப்பா.. இந்த மாதிரி மொக்க வக்கீலை எனக்காக வாதாட வைக்க மாட்டேன்..எசமான்..''



பர்வீன் யூனுஸ்
சென்னை

"வருமானத்துக்கு அதிகமா சொத்து சேர்க்கலேனு சத்தியம் பண்றாரே. தலைவர்.?"
"வருமானமே இல்லாம தான் சேர்த்தாராம்.."

பர்வீன் யூனுஸ்
சென்னை



ரியாக்‌ஷன் எப்படியிருக்குமோ? ஒருவேளை கோபப்பட்டு என்னை திட்டி அனுப்பிட்டா நாங்க பட்ட கஷ்டமெல்லாம் வீணாப்போயிடும்

அண்ணியும் மாமாவும் ரொம்ப பாவம்டா. எனக்காக இல்லாட்டியும், அவங்களுக்காகவாவது நான் சுசீயோட மனசை மாத்தியே ஆகனும். ''

'' சரி இப்ப நான் என்ன செய்யணும்? ''

'' சுசீ கிட்ட என்னை பிரகாஷ்னு அறிமுகப்படுத்து. பிரின்சிகிட்ட சொன்னதையே அவகிட்டயும் சொல்லு. கொஞ்ச நாளைக்கு ரவி கேரக்டரை ஒதுக்கி வைப்போம்.''

'' யூ மீன் ''

'' ரவி எப்பவுமே வேடிக்கையாக பேசுறவன். ஆனா பிரகாஷ் சீரியஸ் மேன். ஸோ இப்ப நான் பிரகாஷ் ஓ.கே. ''

'' என்னவோ செய் ''

'' முதல்ல என்னைக் கூட்டிட்டு போ. அவளோட தலைவலியை நான் குணமாக்கணும்.''

'' ம்.. கலெக்டராகுறதுக்குள்ள டாக்டராகிட்டியா? நடத்து நடத்து'' சுகுமாறன் புன்னகையோடு நடக்கத் துவங்க, ரவிபிரகாஷ் தன் உடைகளை சீராக்கிக் கொண்டான்.

சற்றே மிடுக்கான தோரணையோடு நடந்து அந்த அறையை அடைந்தபோது பெரிய மர மேஜையின் முன் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தாள் சுசீலா.

மேஜை மீது கைகளை ஊன்றி விரல்களால் நெற்றியை இறுகப் பற்றிக் கொண்டிருந்த பக்கவாட்டு தோற்றமே ரவிபிரகாஷின் நடையை தடை செய்தது.

அவன் எதிர்பார்த்ததைப் போல் சுசீலாவின் முகம் அத்தனை கடினமாய் மாறியிருக்கவில்லை. புகைப்படத்தில் இருந்ததைவிடவும் சற்று மூப்பாய் இன்னும் அழகாய் இருந்தது. சிவந்த முகம் குழம்பிப் போயிருந்தது.

இளம் மஞ்சள் நிற புடவையில் தேவதை போல் அவள் அமர்ந்திருக்க வாசலிலே நின்று விட்டவனை அசைத்தான் சுகுமாறன்.

'' என்ன நின்னுட்ட வாடா? '' கிசுகிசுப்பாய் ஒலித்த குரலில் திடுக்கிட்டுத் திரும்பினாள் சுசீலா. கண்கள் அவசரமாய் தன் மணிக்கட்டிலிருந்த கைக்கடிகாரத்தைப் பார்த்தது.

சரியா பத்து மணிக்கு உன் முன்னால நான் இருப்பேன். என்ற தன் பேச்சு நினைவு வர தன் மீதே கோபம் கொண்டான் ரவிபிரகாஷ். அதிகமாய் கஷ்டப்படுத்தி விட்டோமோ?

'' ஹலோ சுசீலா. குட்மார்னிங்'' என்ற சுகுமாறனையும், அவனுடன் நின்றவனையும் திகைப்பாய் பார்த்தபடி எழுந்து நின்றாள்.

'' மா...மார்னிங் சார்''

'' என்ன சுசீலா உடம்பு சரியில்லையா? ''

'' நோ நோ சும்மா லேசான தலைவலி ''

'' ஓ சாரி நான் அப்புறமா வரட்டுமா? ரெஸ்டு எடுக்கிறீங்களா? ''

'' பரவாயில்ல சார். என்ன விஷயம். இவ்வளவு தூரம் தேடி வந்திருக்கீங்க? ''

'' காரணம் இருக்கு சுசீலா. மீட் மை பிரண்ட்! பேர் பிரகாஷ்'' என்றதும் அவளது முகத்தில் லேசாய் நிம்மதி படர்ந்தது.

'' பிரகாஷா? ''

'' யா நெக்ஸ்ட் மன்த் கலெக்டராகப் போறான். அதுவரைக்கும் நாட்டுப்புற கலைகளைப் பத்தி கொஞ்சம் ரிசர்ச் பண்ணணுமாம். நீங்களும் நாட்டுப்புறவியலை சப்ஜெக்டா எடுத்திருக்கிறதால இவனுக்கு உங்க நோட்ஸ் கொஞ்சம் ஹெல்ப்புல்லா இருக்கும்னு கூட்டிட்டு வந்தேன் '' என்பதற்குள் சுகுமாறன் வியர்த்து விட்டிருந்தான்.

கலெக்டர் என்றதும் பிரகாஷின் மீது தனி மரியாதை தோன்ற கைகூப்பி வணக்கம் சொன்னாள்.

'' வணக்கம் சார்''

'' வணக்கம். உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா? '' இது அவன் குரலா? லேசாய் தடுமாறினாள்.

'' நோ சார். படிப்பு விஷயமா யார் ஹெல்ப் கேட்டாலும் அதை நான் டிஸ்டர்பா நினைக்கிறதில்லை ''

'' இல்ல உங்க உடம்புக்கு முடியலைன்னு ''

'' அது ஒரு வேண்டாத தலைவலி. இப்ப சரியாப் போச்சு'' அலட்சியமாய் சொன்னவளைப் பார்த்து புன்னகைத்தான்.

'' தேங்க்ஸ் ''

'' எதுக்கு சார்? ''

'' அது எனக்கு ஹெல்ப் பண்ண ஒத்துக்கிட்டதுக்கு''

'' ஓ.கே. சுசீலா. நீங்க பிரகாஷ் கேட்கிறதுக்கு ஹெல்ப் பண்ணுங்க. எனக்கு கிளாஸ் இருக்கு ''

'' நீ கிளம்பு மாறா. நான் பார்த்துக்கிறேன் ''

'' பார்த்து பிரகாஷ் அவங்களை சிரமப்படுத்தாதே''

'' இதுல எந்த சிரமமும் இல்ல. நீங்க உட்காருங்க சார்.'' என பிரகாஷிற்கு நாற்காலியை காட்டினாள் சுசீலா. சுகுமாறன் விட்டால் போதும் என வெளியேற, எதிர் இருக்கையில் அமர்ந்தாள்.

'' சொல்லுங்க சார் ''

'' மிஸ் சுசீலா வந்த அன்னிக்கே பாடம் நடத்தணுமா? ஏதாவது பேசலாமே?'' என்றதும் புருவம் உயர்த்தினாள்.




''ஏதாவதுன்னா?''-இது அவன் தானா? பார்வையில் கடுமை கூடியது.

''சும்மா... உங்களைப் பத்தி.. என்னைப் பத்தி நம்மைப் பத்தி...''

''ஹலோஸார்! உங்களைப் பத்தி சுகுமாறன் ஸார் சொன்னதே போதும். என்னைப் பத்தி தெரிஞ்சுகிட்டு என்ன பண்ணப் போறீங்க?''

''இல்ல..''

''லுக்! எனக்கு உங்களை மாதிரி ஆட்கள்கிட்ட பேசக்கூட இஷ்டம் கிடையாது. படிப்பு விஷயம்னு சொன்னதாலதான் உட்காரவெச்சு பேசிட்டு இருக்கேன். புரியுதா?''

''பு..ரி..யுது''



''இப்போது... படிப்பு சம்பந்தமா பேசலாமா?''

''பேசலாமே! எனக்கும் வெட்டித்தனமா பேசி நேரத்தை வீணாக்குறது பிடிக்காது. அதுவும் லேடீஸ்கிட்ட பேசுறதை அவாய்ட் பண்ணணும்னு நினைக்கிறவன் நான். வேற வழியில்லாமத்தான் உங்ககிட்ட வந்திருக்கேன்.'' அலட்சியமாய் தோளைக் குலுக்கிய வாறே பிரகாஷ் சொல்ல அவனை நிமிர்ந்து பார்த்தாள் சுசீலா.

நிச்சயமாய் இது அவனில்லை. குரல் தான் லேசாய் ஒத்துப்போகிறது. மற்றபடி இவன் எண்ணங்களும் பேச்சும் அவனுக்கு நேரெதிராய் உள்ளதே. அவன் யாரோ ஒரு வெட்டிப்பயல். தன்னை குழப்புவதற்காக ஏதோ உளறியிருக்கிறான். ரவியைப் பற்றிய குழப்பத்தை உதறிவிட்டு, பிரகாஷ் கேட்ட கேள்விகளுக்கான விளக்கங்களை ஆர்வமுடன் சொல்லத்துவங்க, திருப்தியாய் புன்னகைத்தான் பிரகாஷ்.

# 6

***உன் சிரிப்பில் என்னை***
***மறக்கிறேன் உன் பார்வையில்***
***மீண்டும் பிறக்கிறேன்-நீ***
***என்னை விட்டு விலகும் போது***
***மனதால் மரித்துப் போகிறேன்!***

பிரகாஷ் ஒரு பேராசிரியர் தோரணையுடன் நாட்டுப்புற கலைகளைப் பற்றி விவரித்துக் கொண்டிருக்க சுசீலா மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுடன் சேர்ந்து தங்கள் ஆராய்ச்சி படிப்பை தொடங்கியிருந்த இரண்டு இளம்பெண்களும் கையில் குறிப்பேடுடன் அமர்ந்திருக்க, அவன் தான் கற்றவற்றை அறிந்தவற்றை அவர்களுக்கு உரைத்துக் கொண்டிருந்தான்.

''இப்போது நமக்குத் தெரிஞ்ச கலைகளில் கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, கனியான் ஆட்டம்னு...''

''ஸார்! மத்த கலைகள் எங்களுக்குத் தெரியும். ஆனா.. இதென்ன கனியான் ஆட்டம்?''-ஒரு மாணவி ஆர்வமாய்க் கேட்க, புன்னகைத்தான் பிரகாஷ்.

''சிட்டியில வளர்ந்தவங்களுக்கு இது தெரிய நியாயமில்லதான். ஆனா இப்பவும் கிராமப்புறங்கள்ல கோவில் திருவிழாக்கள்ல இந்த கனியான் ஆட்டம் நடந்திட்டுதான் இருக்கு இதை மகுடம்னும் சொல்வாங்க.''

''இது என்ன ஆட்டம் ஸார்?''

''மத்த கலைகள்ல ஆண்களும் பெண்களும் இருப்பாங்க. ஆனா இதுல ஆண்களே பெண்களா மாறி கால்ல சலங்கை கட்டிட்டு ஆடுவாங்க''

''ஈஸிட்?''

''யா. இவங்க ஆடுறதுக்கு மியூஸிக் இவங்க கூட இருக்கிற கலைஞர் வாசிக்க தப்பு ஓசைதான். தாளம் வாசிச்சிகிட்டே புராணகதைகள் சொல்லி, அதையே பாட்டாவும் பாடுவாங்க. அதற்கேத்த மாதிரி அந்த பெண்வேடமிட்ட வங்க சலங்கையோட ஆடுறதைப் பார்க்கும் போது அவ்வளவு அருமையா இருக்கும்.''

''வாவ்''

''எங்க ஊருபக்கம் உள்ள கோவில்கள்ல பூஜைக்கு முன்னால இந்த ஆட்டம் கண்டிப்பா நடக்கும். இந்த ஆட்டம் கடவுளுக்கே பிடிச்ச ஆட்டம்னு சொல்வாங்க.''

''சூப்பர் ஸார்! கேட்கும் போதே அதை பார்க்கணும்னு ஆசையா இருக்கு.''

''உங்களை மாதிரி யூத்துங்க விரும்பினா இந்தக்கலைகள் மீண்டும் உயிர்பிக்கும். இப்பல்லாம் யாரு இதை விரும்புறாங்க?

ஆட்டம் பாட்டம், பாட்டுக்கச்சேரி, சினிமான்னு மாறிப்போச்சு. இதனால அழியுறது நம்ம கலைகள் மட்டுமில்ல. அதை பாடுபட்டு வளர்த்த கலைஞர்களும் தான்.'' என்ற போது அவன் குரல் கம்மிப் போனது.

சுசீலாவிடம் துளியும் அசைவில்லை. அவன் முகத்தில் பதித்த விழியை எடுக்கவும் தோன்றாமல் அமர்ந்திருந்தாள்.

''இது மட்டுமில்லாம பாவைக்கூத்து, பொம்மலாட்டம், மரப்பாவைகூத்து, தோல்பாவைக் கூத்து இப்படி எத்தனையோ அரிய கலைகள் மறைஞ்சிட்டு வருது.

நாகரீகம் வளர வளர நம்ம கலாச்சார கலைகள் எல்லாம் அழிய ஆரம்பிச்சிடுச்சி. இப்போ அந்தக் கலைஞர்கள் எல்லாம் தங்கள் வயித்துக்காக கல் உடைக்கவும். கட்டிடம் கட்டவும் கிளம்பிட்டாங்க.



''ஆவேசமா சண்டை போடற மனைவியை ஒரே ஒரு வார்த்தையில அடக்கிடுவியா.. எப்படி?''

''சாரி'னு சொல்லுவேன்..''

பர்வீன் யூனுஸ்
சென்னை



இனிமே வர்ற நம்ம சந்ததிகளுக்கு இந்தக் கலைகளோட பேர் கூட தெரியாமப் போயிடும் போலிருக்கு.'' வருத்தமாய் அவன் முடித்த போது அனைவருமே பிரமித்து தான் போயினர்.

''ஸார்! நீங்க நிஜமாவே ஐ.ஏ.எஸ். பண்றீங்களா?''

''ஏன் கேட்கிறீங்க?''

''இல்ல... மூணுவருஷமா ஆராய்கிறோம். எங்களால கூட இவ்வளவு தகவல்களை சேகரிக்க முடியல. அதான்...''

''ஐ.ஏ.எஸ். என் அப்பாவுக்காக படிச்சபடிப்பு, பட் எனக்கு எப்பவுமே இந்த ஆராய்ச்சியிலதான் ஈடுபாடு.''

''தேங்க்யூ ஸார். உங்களால எங்களுக்கு நிறைய டிப்ஸ் கிடைச்சிருக்கு.''

''இது பெரிய விஷயமே இல்ல. உங்கள்ல யாராவது கள ஆய்வுக்கு ஐ மீன் பீல்டு வொர்க் போயிருக்கீங்களா?''

''இன்னும் இல்லை ஸார்''

''போலாமா?''

''ஓ! போலாமே. எப்போ போலாம் ஸார்?'' இருவரும் ஆர்வமாய்க் கேட்க, அசைவின்றி அமர்ந்திருந்த சுசீலாவை ஏறிட்டான்.

''சுசீலா! மிஸ். சுசீலா!''-அழுத்தமாய் அழைத்ததும் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''ஸ.. ஸார்!''

''என்னாச்சு! எதுவுமே சொல்லல நீங்க!''

''அதான் எல்லாமே சொல்லிட்டீங்களே ஸார். இதுல நான் என்ன சொல்ல?''

''கள ஆய்வுக்கு போறதப் பத்தி பேசுறோம். உங்க ஐடியா என்ன?''

''போகணும் ஸார். பட்! ஒரு டென்டேஸ் எங்கேயும் நகரமுடியாது.



''அடுத்த தேர்தல்ல கூட்டணி சேராம தனிச்சு நிக்க தலைவர் முடிவு பண்ணிட்டார்..''
''ஓய் திஸ் ' தற்கொலை வெறி..!''

**பர்வீன் யூனுஸ்**
**சென்னை**

பசங்களுக்கு எக்ஸாம் டைம்.''

''இட்ஸ் ஓகே. எக்ஸாம் முடியட்டும். போகலாம்.'' அவன் இயல்பாய் சொல்ல, சற்று தயக்கமாய்க் கேட்டாள்.

''ஏன் ஸார்? நீங்க... அதுவரைக்கும் இருப்பீங்களா?''

''வாட் யூ மீன்?''

''ஸாரி... இங்கே எங்களோட இருப்பீங்களான்னு...''

''இருக்கணுமா? வேண்டாமா?''-கழுத்தைச் சரித்து அவன் கேலியாய் கேட்க, அவசரமாய் பார்வையைத் தழைத்துக் கொண்டாள்.

''இல்ல... நீங்க... டியூட்டியில ஜாய்ன் பண்ணனுமே..''

''அதுக்கு இன்னும் டைம் இருக்கு. மூனு மாசம் ஆகலாம்''-என்றதும் பளிச்சென முகம்மலர நிமிர்ந்தாள்.

''அப்போ... அதுவரைக்கும்... இங்கே..''

''வருவேன். பேசுவேன். உங்களுக்கு தொந்தரவா இருந்தால்...'' என அவன் இழுக்க, அவள் மறுக்கும் முன் மற்ற பெண்கள் மறுத்தனர்.

''நோ ஸார்! நீங்க எங்களுக்குக் கிடைச்ச வரப்பிரசாதம். உங்ககிட்ட எவ்வளவு கத்துக்கணுமோ அவ்வளவையும் கத்துக்கணும்.''

''வெரிகுட்! எனக்கும் இது பிடிச்சிருக்கு. எனக்கு தெரியாததை உங்ககிட்ட இருந்து நானும் தெரிஞ்சுக்கணும்''

''ஸார் எப்போ கள ஆய்வுக்கு போகலாம்? எங்கே போகலாம்?''

''எங்கே போகலாம்? சுசீலா! நீங்க சொல்லுங்களேன்!''

''நா..னா?''

''ஆமா! கிட்டத்தட்ட நாலுவருஷமா ரிசர்ச் பண்றீங்கல்ல?''

''ஆமா''

''ஏதாவது இடம் செலக்ட் பண்ணி வெச்சிருக்கீங்களா?''

''ம்...ம்.. ஸார்! பொள்ளாச்சி பக்கத்தில் கீரிபாறைனு ஒரு



வில்லேஜ் இருக்கு. பழங்கால கலைகள் அங்கே இன்னும் மறையாம இருக்குன்னு கேள்விப்பட்டேன். அதோட நிறைய கல்வெட்டுகள் கூட இருக்குன்னு..''

''வாவ்! அப்போ அது ரொம்ப அருமையான இடமா இருக்கும் போலிருக்கே.''

''ஆமா ஸார்''

''அப்போ அங்கேயே போகலாமா?''

''போகலாம். போகலாம்.''

''ஓ.கே. எக்ஸாம் முடியட்டும். அதுக்குள்ள நான் அந்த ஊரைப்பற்றி அங்கே போற ரூட்டைப்பற்றி விசாரிச்சு வெக்கிறேன். போகலாம்.''

''தேங்க்யூ ஸார்! அப்புறம் ஒரு ஸ்மால் ரிக்வெஸ்ட்''

''கேளுங்க''

''நாம போகும் போது ரிஸர்ச் பண்ண ஆசைப்படுற ஸ்டூண்ட்ஸையும் கூட்டிட்டு போலாமா?''

''வொய் நாட்?''

''ஓ! தேங்க்யூ ஸார்''

''மொத்தமா எத்தனை பேர் வர்றாங்கன்னு கேட்டு வையுங்க. அதுக்கேத்த மாதிரி வண்டி பிடிச்சுபோயிடலாம். ப்ரோகிராம் கன்பார்ம் ஆனதும் பிரின்சிபல்கிட்ட பர்மிஷன் கேட்கலாம்.''

''ஓ.கே.ஸார்''

''ஓ.கே. அப்ப நான் கிளம்பட்டுமா?''

''சரி ஸார்''-என மற்றவர்கள் சுலபமாய் விடைகொடுத்துவிட்டு வெளியேறிவிட சுசீலா மௌனமாய் எழுந்து நின்றாள்.

வழக்கமாய் அவள் முகத்தில் இருக்கும் கடுமையோ இறுக்கமோ இன்றி நெகிழ்ந்து போயிருந்தது. இதையே தனக்கு மிகப்பெரிய வெற்றியாக எண்ணிக்கொண்ட பிரகாஷ் புன்னகையோடு அவளை நெருங்கினான்.

''மிஸ். சுசீலா!''

''ஸா.. ஸார்?''

''ரொம்ப போரடித்து விட்டேனோ?''

''ஸார்!''

''இல்ல.. உங்க முகமே சரியில்லையே. அதான் கேட்டேன்.''

''பிரமிப்பா இருக்கு ஸார்''

''எது?''

''உங்களோட பேச்சு. சுகுமாறன் ஸார் உங்களுக்கு என்னை ஹெல்ப் பண்ணச் சொன்னார். ஆனா இப்ப நீங்கதான் எங்களுக்கு ஹெல்ப் பண்ணிட்டு இருக்கீங்க.''

''இல்ல சுசீலா. எல்லாருக்கும் எல்லாம் தெரியுறதில்ல. எனக்கு தெரிஞ்சத மட்டும்தான் நான் சொன்னேன். ஆனா உங்க ப்ராஜக்ட் ரிப்போர்ட்ஸ் பார்த்து அசந்திட்டேன்.''

''ஸார்?''

''கூத்துகளின் வகைகள், பாட்டுக்களின் உட்பிரிவுனு எவ்வளவு கண்டுபிடிச்சிருக்கீங்க. உங்ககிட்ட நான் நிறைய கத்துக்க வேண்டியதிருக்கு.''

''சும்மா சொல்லாதீங்க ஸார்'' கூச்சமாய் சிரித்தாள்.

''ஐயோ! நிஜமாங்க. சான்ஸே இல்ல. எவ்வளவு புத்தகங்களை புரட்டுனீங்க? படிப்பைத் தவிர வேற எண்ணமே கிடையாதா உங்களுக்கு?''

''படிப்பு என் உயிர் மூச்சு!''

''இருக்கலாம். இருந்தாலும் இவ்வளவு தீவிரமா இருக்கணும்னா இதுக்கு பின்னால ஏதா வது காரணம் இருக்கணுமே?'' சாதாரணமாய் கேட்பதுபோல் கேட்டுவிட்டு அவளது முகத்தை ஆராய்ந்தான்.

மலர்ந்திருந்த பூ முகம் லேசாய் மாறியது. லேசாய் சமாளித்தாள்.

''இல்ல. அப்படியெல்லாம் எதுவும் இல்ல''

''நான் நம்பமாட்டேன். உங்க வெற்றிக்குப் பின்னால யாரோ ஒருத்தர் தூண்டுகோலா இருந்திருக்காங்க. ஹூ இஸ் தட்?'' என்றதும் சுசீலாவின் முகம் கல்லாய் இறுகியது.

''என் வாழ்க்கையில ஏற்பட்ட தோல்விகள் தான் என்னை இந்த அளவுக்கு வெற்றியடைய வெச்சிருக்கு. தட்ஸ் ஆல்'' என்று விட்டு தன்

*''நல்லா படிக்கலேன்னா கஷ்டப் படனும்டா''*
*''நீ அம்மாட்ட கஷ்டப்படற மாதிரியாப்பா?''*

**கே.பிரசன்னகுமார்.**
**குடந்தை**





குறிப்புகளை சேகரித்துக் கொண்டு விடுவிடுவென வெளியேறினாள்.

'இன்னும் அவனை மறக்கவில்லையா சுசீலா?' வருத்தமான பெரு மூச்சை வெளியிட்டான் பிரகாஷ்.

# 7

***நினைவில் இருக்க விரும்பவில்லை***
***என்றும் நிலைத்திருக்க வேண்டும்***
***என்றே விரும்புகிறேன்-உன்***
***இதயத்திற்குள்!***

தொலை பேசியில் பதறினாள் வசுமதி. ''அச்சோ! அப்புறம் என்ன ஆச்சு?''

''என்ன ஆகும்? விறுவிறுன்னு எழுந்து போய் விட்டாள்.''

''அப்புறம் உங்களை பார்த்தாளா? பேசினாளா?''

''இல்ல அண்ணி! நேற்றும் இன்னிக்கும் காலேஜ் லீவு. நாளைக்கு போனால்தான் தெரியும்''

''என்ன ரவி நீங்க? அவ இயல்பா பேசும் போது ஏன் அந்தச் சண்டாளப்பாவியை நினைவுப்படுத்துனீங்க?''

''அண்ணி! அவ மனசில அவனோட நினைப்பு எந்த அளவுக்கு இருக்குன்னு தெரிஞ்சாத்தானே அதை மாற்ற முடியும். அதான் பேசினேன். ம்ப்ச்! அவளுக்கு இன்னும் அந்த காயமும் வலியும் இருக்கு.''

''இனிமே என்ன பண்ணப்போறீங்க?''

''பார்க்கலாம். ஜெண்ட்ஸ்ன்னாலே வேப்பங்காயா நினைச்சிட்டு இருந்தவ என் முகத்தைப் பார்க்கிறாள். என்னிடம் ஆர்வமாய் பேசுகிறாள். இப்போதைக்கு இது போதும்.

சீக்கிரமா அவ மனசுல உள்ள காயத்தை போக்கிடுவேன். ஆனா அதுக்கு முன்னால எனக்கு உங்க மூலமா சில விபரங்கள் வேணுமே''

''என்ன விபரம் வேணும்?''

''அந்த சக்திவேல் இப்போ எங்கே இருக்கான்? எப்படி இருக்கான்?''

''அவனா? அதையேன் கேட்கிறீங்க?''

''ஏன் அண்ணி? என்ன ஆச்சு?''

''அந்தப்பய..'' எனத் தொடங்கிய நேரம் அழைப்பு மணி ஒலித்தது. குளியலறையில் இருந்து சுகுமாறன் குரல் கொடுத்தான்.

''ரவி! யாருன்னு பாருடா''

''பார்க்கிறேன். அண்ணி! யாரோ வந்திருக்காங்க'' என்றவாறே வாசலை நெருங்கியவன் பக்கவாட்டு ஜன்னல் வழியாய் தெரிந்த உருவத்தைக் கண்டு வியந்தான்.

வாசலில் கைகளில் சில கோப்புகளோடு நின்று கொண்டிருந்தாள் சுசீலா. உடல் மொத்தமும் உற்சாகமாய் துள்ள காதில் வைத்திருந்த போனில் கிசுகிசுத்தான்.

''அண்ணி! போனை வைச்சிடுங்க''

''ஏன் ரவி''

''சுசி வந்திருக்கா. நான் அப்புறமா பேசுறேன்.''

''ரவி! போனை அவகிட்ட கொடுங்களேன். உங்களைப்பத்தி ரெண்டுவார்த்தை நல்லவிதமா சொல்றேன்''

''காரியமே கெட்டுடும்.''

''ஏன்?''

''நான் உங்கள் மச்சினன் என்று அவளுக்குத் தெரியாது.''

''எ..ன்ன? ஏன் ரவி..''

''அண்ணி! எதுவா இருந்தாலும் அப்புறம் பேசலாம். முதல்ல போனை வைங்க'' என போனை ஆப்பண்ணிய வாறே ஓடிச் சென்று கதவைத் திறந்தான்.

''ஹலோ! மிஸ் சுசீலா! கம் ப்ளீஸ்கம்.''

தயக்கமாய் புன்னகைத்தாள். ''ஹலோ ஸார்!''

''உள்ளே வாங்க''

''சுகுமாறன் ஸார் இல்ல?''

''இருக்கான். குளிச்சிட்டு இருக்கான். முதல்ல நீங்க உள்ளே வாங்க. இல்லன்னா அவன் வெளியே வந்து என் சட்டையைப் பிடிச்சு சண்டை போடுவான்.''

''எதுக்கு?''

''என் சக பணியாளரை அதுவும் ஒரு பேராசிரியை வெளியே நிற்க வைத்து பேசினாயா என்று...'' பிரகாஷ் பாவனையோடு சொல்ல, மெலிதாய் புன்னகைத்தவாறே வாசலில் செருப்பைக் கழற்றிவிட்டு



வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவசரமாய் துணி எடுத்து சோபாவைத் தட்டி துடைத்தான்.

''உட்காருங்க சுசீலா''

''இருக்கட்டும் ஸார்!''

''அட உட்காருங்க மேடம். அவன் குளிச்சிட்டு வர எப்படியும் ஒரு மணி நேரமாகும்.''

''என்ன? ஒரு மணி நேரமா?''

''யா! இன்னிக்கு ஸன்டே ஆச்சே. அதனால...''

''ஸார்! அவர் என்கிட்ட ரிப்போர்ட்ஸ் எல்லாம் கேட்டிருந்தார். அதான் கொடுத்திட்டு போலாம்னு வந்தேன்.

நான் வந்திருக்கேன்னு சொல்றீங்களா?''

''ஷ்யூர்! அதுக்கு முன்னால... ஏதாவது சாப்பிடுறீங்களா? காபி, டீ..''

''நோ தேங்க்ஸ் ஸார்''

''ஒன் மினிட்''-என்றவன் அடுத்த அறைக்குள் நுழைந்து குளியலறையை நெருங்க, அதற்குள் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் சுகுமாறன்.

''ஏய்! அதுக்குள்ள குளிச்சிட்டியா?''

''ஆமா! யாருடா வந்திருக்காங்க?''

''சுசி''

''உட்காரச் சொல்லு. இப்ப வந்திடுறேன்''-என கொடியில் கிடந்த சட்டையை எடுத்தவனிடம் அவசரமாய் பறித்தான் ரவி பிரகாஷ்.

''டேய்! இது என் ஷர்ட்.''

''அது தெரியுது.. உன்னை யாரு இப்பவே வெளியே வரச்சொன்னது?''

''இது என்னடா வம்பாப் போச்சு. குளிச்சு முடிச்சபிறகு பாத்ரூம்ல என்னடா வேலை?''

''ஏதாவது செய். ஒரு ஒன்அவர் கழிச்சு வா''

**''உங்க ஆபீசு மேனேஜர் ஜோதிடத்தில் ரொம்ப நம்பிக்கை வச்சிருப்பவரா?''**

**''ஆமா! ஆபீசில வேலை செய்யிற எல்லார் ஜாதகத்தையும் வாங்கி வைச்சிருக்கான்னா பார்த்துக்குங்க!''**

**-தென்காசி, கு.அருணாசலம்.**



"ஏம்ப்பா! பூட்டை உடைச்ச திருடனியா?"
"ஆமா எசமான்! பூட்டுக்கு உண்டான காசை அபராதமா கட்டிடுறேன்!"

-தென்காசி,
கு.அருணாசலம்.



"வாட்?"

"சொன்னதைச் செய். முதல்ல உள்ளே போ" சுகுமாறனின் ஈரமான முதுகில் கைவைத்து மீண்டும் குளியலறைக்குள் தள்ள, அவன் முறைத்தான்.

"பிரகாஷ்! உனக்கு என்னடா ஆச்சு?"

"நம்ம வீடு தேடி சுசியே வந்திருக்கா. இந்த அருமையான வாய்ப்பை மிஸ் பண்ணலாமா?"

"என்னடா பண்ணப்போற?"

"பேசப்போறோம். மனசு விட்டு பேசப்போறோம். அதுக்கு நீ கரடிமாதிரி நிற்கக் கூடாது. போ போய்க் குளி."

"டேய்! இதெல்லாம் உனக்கே ரொம்ப ஓவராத் தெரியல?"

"தெரியல. போ" குளியலறைக்குள் தள்ளி கதவை வெளியே தாளிட்டான்.

"அடப்பாவி! தண்ணி ரொம்பக் குளிருதுடா"

"கெய்ஸரைப் போட்டுக்க."

"டேய். பிரகாஷ்.. கரண்ட் இல்லடா.."

"ஷ்! பேசாதே ஷவரைத் திறந்துவிடு."

"எதுக்கு?"

"நீ குளிக்கிற சத்தம் கேட்க வேண்டாம்? அட்லீஸ்ட் பைப்பையாவது திறந்துவிடு"

"எல்லாம் நேரம்டா" முனகியவாறே தண்ணீர்க் குழாயை திறந்து விட்டான் சுகுமாறன். தண்ணீர் விழும் சத்தம் கேட்டதும் திருப்தியாய் சிரித்துக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்து இரண்டே நிமிடத்தில் சூடான காபியோடு சுசீலாவை நெருங்கினான்.

"காபி சாப்பிடுங்க"

"வேணாம்னு... சொன்னேனே ஸார்"

"நீங்க சொல்வீங்க. அதுக்காக வீட்டுக்கு வந்த விருந்தாளியை உபசரிக்காம இருக்க முடியுமா?"



"இல்ல.. நான்.."

"தைரியமா குடிங்க சுசீலா. நான் போடுற காபி குடிக்கிற மாதிரி இருக்கும்."

"நீங்க போட்டீங்களா? சாரோட வொய்ப் இல்லைங்களா?"

"அவங்க ஊருக்கு போயிருக்காங்க. வர ஒரு வாரம் ஆகும்."

"அப்போ சமையல் எல்லாம்?"

"செல்ப் சர்வீஸ்தான்"

"நீங்களா சமைக்கிறீங்க?"

"ஏங்க! நாங்கல்லாம் சமைக்கக்கூடாதா?"

"இல்ல... நீங்க எப்படி?"

"ஹலோ! என் கைவண்ணத்தப் பத்தி எங்க ஊர்ல வந்து கேட்டுப் பாருங்க."

"ஏன் ஸார்? இதுக்கு முன்னால ஊருக்கே சமைச்சு போட்டுட்டு இருந்தீங்களா?" சுசீலா சிரிக்காமல் கேட்க, வாய்விட்டு சிரித்தான் பிரகாஷ்.

"என்னங்க கிண்டலா? என் சமையல் மணம் ஊர் முழுக்க மணக்கும். அதைச் சொன்னேன்!"

அப்படியென்ன செண்ட் போடுவீங்க சாப்பாட்டில?"

"ஹலோ! என்ன நக்கலா?"

"சேச்சே!"

"ம். என் சமையல் மேலே உங்களுக்கு நம்பிக்கை வரணும்னா முதல்ல இந்தக் காபியைக் குடிங்க. அப்புறம் தெரியும் என் கைமணம்" என்றவனிடம் மறுக்க முடியாமல் வாங்கிக் கொண்டாள்.

தயக்கமாய் குடிக்கத் துவங்கியவள் குளிருக்கு இதமான சூட்டோடு மணமும் சுவையுமாய் இருந்த பானத்தை சொட்டு மிச்சம் வைக்காமல் குடித்து முடித்தாள்.

அதற்குள் சமையலறைக்குள் நுழைந்து சில வேலைகளை முடித்துவிட்டு வந்த ரவிபிரகாஷ் மேசை மீது இருந்த காலி கோப்பையை எடுத்துக் கொண்டு புன்னகைத்தான்.

"காபிய குடிச்சீங்களா? இல்ல வாஷ்பேசின்ல கொட்டிட்டீங்களா?"

"அச்சச்சோ! என்ன ஸார் இப்படிக் கேட்கிறீங்க?"

"இல்ல.. கிளாஸ் இவ்வளவு சுத்தமா இருக்கே."

"நான் தான் குடிச்சேன்"

''நிஜம்மா?''

''ம். காபி பிரமாதமா இருந்தது''

''சும்மாதானே சொல்றீங்க?''

''இல்ல ஸார். நிஜமாவே அருமையா இருந்தது. ரொம்பநாள் கழிச்சு வீட்டுக்காபி குடிச்சமாதிரி திருப்தியா இருந்தது.''

''ஆமா! உங்களுக்கு இதே ஊர்தானா?''

''இல்ல. கீரனூர். நான் இங்கே வாடகைக்கு

வீடு எடுத்துத்தங்கியிருக்கேன்

தனியாவா?

ஆமா

ஏன்? அம்மா அப்பா எல்லாம்?

அவங்க உயிரோட இல்ல.

ஸாரி. உங்களைக் கஷ்டப்படுத்திட்டேனா?

இல்ல ஸார் பழகிப்போச்சு - வறட்சியாய் புன்னகைத்தாள்.

வேற ரிலேஷன் யாரும் இல்லையா?

சித்தப்பா சித்தி, பெரியப்பா இப்படி எல்லாரும் இருக்காங்க பட். எல்லோருக்குமே தோட்டம் வயல்னு இருக்கிறதால அவங்களால இங்க வர முடியுறதில்ல.

எனக்கும் எனி டைம் வொர்க் இருக்கிறதால ஊர்ப்பக்கம் போக முடியறதில்ல.

போகணும் சுசீலா.. இப்படி போய் வந்து இருந்தால்தானே உறவு விட்டுப்போகாம இருக்கும்?

உண்மைதான் ஸார். போகணும். ஆசை இருக்கு.. ஆனா. நேரம் தான் கிடைக்கல..

நாமதான் நேரத்தை ஏற்படுத்திக்கணும்.. இப்போ நான் இந்த ஊருக்கு வந்து ஒருவாரம் தான் ஆகுது.. அதுக்குள்ள எப்ப வரு வேன்னு கேட்டு வீட்ல இருந்து ஒரே போன்.

அம்மா ஒரு பக்கம் அப்பா ஒரு பக்கம். இதுல அண்ணா அண்ணி ஒரு பக்கம். இப்படி ஒரே போன் மயம் தான் போங்க.- சலிப்பாய் சொன்னவனை துளி பொறாமையோடு பார்த்தாள்.

உங்க பேமிலி ரொம்ப அன்பான பேமிலியோ?

ரொம்ப ரொம்ப! எனக்கு அவங்களைப் பார்க்காம இருக்கிறது கஷ்டமாத்தான் இருக்கு. இப்பக்கூட அண்ணி போன் பண்ணி ஒரே டார்ச்சர்.





என்னவாம்?

அவங்க சிஸ்டர் ஒருத்தர் இருக்காங்களாம். அவங்களை எனக்கு பேசி முடிக்கணும்னு ஒரே தொந்தரவு.. அதுல இருந்து தப்பிக்கத்தான் இப்போதைக்கு ஊருக்கு போகக்கூடாதுன்னு முடிவு பண்ணி வெச்சிருக்கேன்.

ஏன் ஸார். அவங்க தங்கையை உங்களுக்கு பிடிக்கலையா?- ஆர்வமாய்க் கேட்டவளைக் கண்டு சலிப்பாய் தலையாட்டினான்.

பிடிக்குதா இல்லையான்றது விஷயம் இல்ல,

வேற?

கல்யாணம் மட்டும் தான் வாழ்க்கையா? லைப்ல சாதிக்க வேண்டியது எவ்வளவோ இரு க்கு. ஐ.ஏ.எஸ். ஆகணும். தொடங்கின பட்டயப்படிப்பை முடிக்கணும். மேலே மேலே ஏதாவது கத்துகிட்டே இருக்கணும்.

தன்னைப்போலவே சிந்திக்கிறானே? வியப்பாய் நோக்கியவளைப் பார்த்து புன்னகைத்தான்.

''இதுக்கு நடுவே ஒருவேளை என் எண்ணங்களோடு ஒத்துப்போற மாதிரி உங்களை மாதிரி புத்தி நிறைய இருக்கிற பொண்ணைப்பார்த்தால் அப்பத்தான் கல்யாணத்தைப்பத்தி யோசிக்கணும்''- சாதாரணமாகவே அவன் சொல்லிவிட.. சுசீலாவின் இதயம் ஆட்டம் காணத்தொடங்கியது.

## 8

***உ**ரிமை கொள்ள உறவுகள்*
*ஆயிரம் இருந்தாலும் - என்*
*உள்ளத்தை புரிந்து கொள்ள*
*ஒரு உயிர்போதும் உன்னைப்போல!*

சுகுமாறனின் முகம் செந்நிறமாய் மாறிப்போயிருந்தது. விடாமல் தும்மல் போட்டுக்கொண்டே இருந்ததில் மூக்கும் கண்களும் மிளகாய் பழமாய் சிவந்திருந்தது. கைக்குட்டையால் மூக்கை சிந்தினான்.

மீண்டும் தும்மல் வர 'ஹச்ச்' - என பலமாய் தும்மினான். காரை



ஓட்டிக்கொண்டிருந்த ரவிபிரகாஷ் தன் சட்டைப்பையிலிருந்த விக்ஸ் இன்ஹேலரை எடுத்துநீட்டினான்.

இதை யூஸ் பண்ணு மாறா. கொஞ்சம் ரிலாக்ஸா இருக்கும்

ரெண்டு டப்பா விக்ஸையே காலி பண்ணியிருக்கேன். அதுல நிக்காத தும்மல் இதுல நின்னுடுமா? பாவி! துரோகி!

என்னை ஏண்டா திட்டுற?

''வேற? ஏன்டா! என்னதான் ஒரு பொண்ணுகூட பேசினாலும் இப்படியாடா சுற்றுப்புறம் மறந்து பேசுறது? ஒருத்தனை பாத்ரூம்ல தள்ளி மூடினோமே அவன் என்ன ஆனான்னு ஒரு செகண்ட்டாவது யோசிச்சியா?

ஸாரி நண்பா. சுசி கூட பேசிட்டு இருந்ததுல நான் உன்னை மறந்திட்டேன்

என்னை மட்டுமா மறந்த? அடுப்பில வெச்சிருந்த பால், குக்கர்ல வெச்சிருந்த இட்லி, கொதிச்சிட்டு இருந்த சாம்பாரு இப்படி எல்லாத்தையும் மறந்திட்டு உட்கார்ந்து பேசியிருக்க? ''- சுகுமாறன் கோபக்குரலில் குற்றம் சாட்ட, அவஸ்தையாய் உதட்டை பிதுக்கினான்.

ஸாரி! வெரி ஸாரி!

ஸாரி சொல்லிட்டா சரியாப் போச்சா? கேஸ் சிலிண்டரை ஓபன் பண்ணி ஓன் விக்தான் ஆகியிருந்தது. மொத்த கேஸூம் காலியாகற வரை பேசியிருக்க.

நான் வேணா... சிலிண்டருக்கு பே பண்ணிடுறேன்.

வாயை மூடுடா. சிலிண்டர் காலியானது கூட பெரிசில்ல. சாப்பாடு போனது கூட வருத்தமில்ல. ஆனா தீய்ஞ்சி போன பாத்திரங்களை என்னடா பண்றது?

அ..து..சுரண்டித் தேய்ச்சா...

ஓட்டை தான் விழும். தேய்ச்சு தேய்ச்சு என் கை புண்ணாப்போனது தான் மிச்சம். இப்ப எம் பெண்டாட்டி வந்து கேட்டால் நான் என்ன செ



''டாக்டர் என் மனைவி தூக்கத்துல திடீரெனு சிரிக்கிறா... பிறகு அழுவுறா என்னென்னு பாருங்க?''
''வேற ஒண்ணுமில்லை! தூக்கத்துல டீவி சீரியல் பார்க்கறாங்க''!

-கு.அருணாசலம்,
தென்காசி.

ஙல்றது?.

விடுடா.. அண்ணி வர்றதுக்குள்ள இதைத்தூக்கிப்போட்டுட்டு புது பாத்திரம் வாங்கி வெச்சிடலாம்.. நீ டென்ஷனாகாதே!

எனக்கு ஒரு விஷயம் தான் புரியவே இல்ல

என்னடா?

நீங்க லவ்வர்ஸூம் இல்ல. பேமிலி பிரண்ட்ஸூம் இல்ல. அப்புறம் எப்படிடா மணிக்கணக்கா உங்களையே மறந்து பேசிட்டு இருந்தீங்க?

எனக்கே ஆச்சர்யமா இருக்குது மாறா.சும்மா பேமிலியப் பத்தி தொடங்கின பேச்சு மெல்ல மெல்ல ஒவ்வொரு டாப்பிக்கா மாறி பேசிட்டே இருந்தோம்.

பிடிச்சது பிடிக்காதது படிச்சது பார்த்தது சமையல் சினிமா. அரசியல் இப்படி எவ்வளவோ பேசினோம். சுசீலா என்கிட்ட இயல்பா பேசுவான்னு நானே எதிர்பார்க்கல.

இப்பவே எனக்கு ஜெயிச்ச மாதிரி இருக்குடா. அவ மனசை ஆசையை எதிர்பார்ப்புகளை என்னால தெளிவா புரிஞ்சுக்க முடிஞ்சது.

'மச்சான்! உனக்குத்தான் நான் நன்றி சொல்லணும்'- ரவி பிரகாஷ் உணர்ச்சிமயமாய்ச் சொல்ல, மீண்டும் தும்மினான் சுகுமாறன்.

எதுக்கு? பாத்ரூம்ல அஞ்சுமணி நேரமா அடைபட்டுக்கிடந்ததுக்கா?

சேச்சே! நீ அவளை வீட்டுக்கு வரச்சொன்னதைச் சொல்றேன்.

ஏண்டா! நீ தான் அவமேல பைத்தியமா இருக்க. உனக்கு அவளைக் கண்டதும் மத்தது மறந்து போச்சு. ஓ.கே.. ஆனா.. அந்தப்பொண்ணுக்கு என்ன ஆச்சு?

ஏன்?

***"இதபாரும்மா கணவன் இருக்கும் போதே இன்னொரு திருமணம் செய்யக்கூடாது. முதல்ல விவாகரத்து ஆகி இருக்கணும். இரண்டாவது கணவன் இறந்து போய் இருக்கணும்"?***

***"முதலாவது சான்று இல்லே, இரண்டாவது முயற்சி செய்யறேன்".***

**-கு.அருணாசலம், தென்காசி.**





பின்னே? இட்லி குக்கர் காது செவிடாகிற வரை விசிலடிச்சிருக்கு. சாம்பார் கொதிச்சு வத்திப்போய் பாத்திரம் தீய்ஞ்சி அந்த ஸ்மெல் தெரு வரைக்கும் போயிருக்கு.

இதுல ஸ்டவ்வ ஆப் பண்ணுடான்னு நான் மணிக்கணக்கா கத்திட்டு இருக்கேன். உனக்கு காது மூக்கு வேலை செய்யல...சரி..அவளுக்குமா இதெல்லாம் வேலை செய்யல?

'ஏய்! நாங்க பேச்சு சுவாரஸ்யத்தில இருந்தோம்ப்பா'

நல்லா இருந்தீங்க போ.. தீய்ஞ்ச வாசனைய மோப்பம் பிடிச்சி பக்கத்துவீட்டம்மா வந்து கதவைத்தட்டலன்னா என்னாகியிருக்கும்?

என்ன ஆகியிருக்கும்?

பாத்ரூம்லயே நான் பாடியாகியிருப்பேன்

ஐயோ! என்ன மச்சான் இப்படியெல்லாம் பேசுற?

பின்னே? மூனு நாளா ட்ரீட்மெண்ட் எடுக்கிறேன். இன்னும் ரிலீப் ஆகல.. இதுல டாக்டர் என்னைத்திட்டுறார்

ஏன்?

''குளிக்கிறதுக்கு ஒரு அளவில்லையான்னு கேட்கிறார்' - சுகுமாறன் கடுப்பாய் சொல்ல, வாய்விட்டுச்சிரித்தான் ரவிபிரகாஷ்

சிரிடா! என் அவஸ்தை உனக்கு சிரிப்பா இருக்கு இல்ல?

''சரி..சரி.,, காலேஜ் வந்தாச்சு... உன் கோபத்தை விட்டுட்டு சிரிச்ச மாதிரி போய் பாடத்தை நடத்து.'' - என்றவாறே காரை கல்லூரி வளாகத்திற்குள் நுழைத்தான்.

என் சர்வீஸ்ல இதுநாள் வரைக்கும் ஒருநாள் கூட லீவு போட்டதில்ல. உன்னால ரெண்டு நாள் லீவாகிப்போச்சு.. எக்ஸாம் வேற வருது.

''அதான் சரியாகிடுச்சில்ல.. வெறும் தும்மல் தானே..கிழே இறங்கு'' - என்றவாறே காரை நிறுத்திவிட்டு இறங்க முயன்றவனின் செவியில் அந்த சலசலப்பு கேட்டது.

இருவரும் திரும்ப, அலுவலகத்திற்கு முன்பாக சன்னமாக கூட்டம் தெரிந்தது. அனைத்து ஆசிரியர்களின் தலையும் தென்பட, சில மாணவர்கள் பலத்த குரல் எழுப்பிக்கொண்டிருந்தனர்.

என்னாச்சு மாறன்?

''தெரியலையே.. வா பார்ப்போம்''- இருவரும் ஓட்டமும் நடையுமாய் கூட்டத்தை நெருங்க, வித்தியாசமான தலை அலங்காரத்துடன் நின்ற வாலிபன் சுசீலாவிடம் ஒற்றை விரலை நீட்டி எச்சரித்துக்கொண்

டிருந்தான்,

''இதோ பார்! உனக்கு கடைசியா சொல்றேன். வந்தோமோ. பாடம் படிச்சுக் கொடுத்தோமா பேசாம வீட்டுக்குப் போனாமான்னு இருந்தா உனக்குநல்லது.

இல்லேன்னா.. முழுசா வீடு போய் சேரமாட்ட.. உனக்கு என்ன பெரிய சமூக சேவகின்னு நினைப்பா? நான் யாருன்னு தெரியாம என் வழியில குறுக்கிடாதே,''- அவனது மிரட்டலில் சுசீலா அசையாமல் நிற்க, கல்லூரி முதல்வர் அவனிடம் மன்றாடிக் கொண்டிருந்தார்.

''ஸாரி தம்பி! இவங்ககிட்ட நான் சொல்றேன். இனிமே இந்த மாதிரி எதுவும் நடக்காது. பிரச்சனை வேண்டாம். கிளம்புங்க தம்பி''

சுகுமாறனுக்கு முன்னால் ரவிபிரகாஷ் அவரை நெருங்கினான்.

ஸார்! என்ன பிரச்சனை?

இல்ல. சும்மா சின்ன பிரச்சனைதான்.

என்ன? சின்ன பிரச்சனையா? இவன் ரௌடி மாதிரி மிரட்டிட்டு இருக்கான்.

''ஏய்! யாரைப்பார்த்து ரௌடின்ற? மவனே! குடலை உருவிடு வேன் ''- வந்தவன் எகிற, தீர்க்கமான பார்வையோடு சட்டையின் கைப்பகுதியை மடக்கி விட்டுக்கொண்டே அவனை நெருங்கினான் ரவிபிரகாஷ்.

என்ன? என்னடா சொன்ன? திருப்பிச் சொல்லு

''ஏய்! யார் நீ? நீ ஏன் இதுல மூக்கை நுழைக்கிற? இது எனக்கும் இதோ நிற்கிறாளே இவளுக்கும் உள்ள பிரச்சனை'' - என அவன் சுசீலாவை சுட்டிக்காட்ட, தன் ஆத்திரத்தையெல்லாம் ஒன்று திரட்டி பளாரென அறைந்தான் ரவிபிரகாஷ்.

காதின் செவிப்பறையை கிழிக்கும் படியான அடிவாங்கியவன் சிலகணம் அசைவற்றுப்போக, மொத்தக் கூட்டமும் ஸ்தம்பித்துப்போனது.

திடுக்கிட்டுப் போனவளாய் சுசீலா ரவிபிரகாஷைப் பார்க்க, அவன் இன்னும் அதே ஆத்திரத்தோடு பற்களைக் கடித்தபடி நின்றிருந்தான். கல்லூரி முதல்வர் பதறிப்போனார்.

மிஸ்டர் பிரகாஷ்! என்ன பண்றீங்க?

யார் ஸார் இவன்?

இவர் இஞ்சினியரிங் காலேஜ் ஸ்டூடண்ட்.

ஸ்டூடண்ட்டா? ஏன்டா! ஒரு ஸ்டூடண்ட் கத்துக்கொடுக்கிற குருவை



''எந்த பஸ் பின்னாடி போகும்?''
''எதுக்கு கேட்கற''!
''அந்த கண்டக்டர் நீ சொல்ற இடத்துக்கு போறதுக்கு பின்னாடி போற பஸ் போகும்னு சொன்னார்.''

**-கு.அருணாசலம், தென்காசி.**



எப்படிடா கூப்பிடணும்? இவளா? இப்படித்தான் மரியாதையில்லாம கூப்பிடுவியா?

ஸார்! இப்ப ஏன் ஸார் என்னை அடிச்சீங்க?

இவங்க என்ன செய்தாங்கன்னு தெரியுமா? - அடிபட்ட கன்னத்தை தடவிக் கொண்டே கேட்டவனின் வார்த்தையில் மதிப்பு ஏறியிருந்தது.

என்னடா பண்ணினாங்க?

நான் விரும்பற பொண்ணு இவங்ககிட்டதான் படிக்கிறாள். இவங்க பாடம் மட்டும் தானே நடத்தனும். அதை விட்டுட்டு என்னைப்பத்தி தப்பு தப்பா பேசி..

''ஏய்! நான் ஒன்னும் உன்னைப்பத்தித் தப்பா சொல்லல. படிக்கிற வயசுல தப்பான வழியில போகாதேன்னு சொன்னேன்.'' - என்றாள் சுசீலா.

அதையெல்லாம் நீங்க ஏன் சொல்லணும்? உங்க வேலையைத் தானே பார்க்கணும்.

இதுவும் என் வேலை தான். எங்கிட்ட படிக்கிற மாணவிகளுக்கு கல்வியில மட்டுமில்ல நல்ல பாதையையும் நாங்கதான் கற்பிக்கணும்.. அது என் கடமை.

அதுக்காக என் லைப்ல தலையிடலாமா? உங்க பேச்சைக் கேட்டுட்டு அவ என்கிட்ட பேசுறது இல்ல. என்னை மீட் பண்றதில்ல.

''யார் அந்தப்பொண்ணு?'' - சுசீலாவிடம் கேட்டான் ரவிபிரகாஷ். அவள் மௌனம் காக்க, முதல்வர் வெடித்தார்.

யாருன்னும் சொல்லமாட்டேங்கிறீங்க? மன்னிப்பும் கேட்க மாட்டீங்க. மிஸ் சுசீலா! உங்க மனசுல என்ன தான் நினைச்சிட்டு இருக்

கிங்க?

''எக்ஸ்கியூஸ்மீ ஸார்'' - கூட்டத்திலிருந்து தயக்கமாய் குரல் கேட்க, அனைவரின் பார்வையும் திரும்பியது.

அந்தப்பெண் பயமும் கண்ணீருமாய் நின்று கொண்டிருந்தாள். அடிவாங்கியவனின் முகம் மலர்ந்தது.

ஏய் சுவாதி! இங்கே தான் இருந்தியா? நான்..

''ப்ளீஸ் ரஞ்சித்! இப்படியெல்லாம் கலாட்டா பண்ணாதே எனக்கு.. அவமானமா இருக்கு.. கஷ்டமா இருக்கு''

சுவாதி!

இன்னும் ரெண்டு நாள்ல எக்ஸாம் இருக்கு. என்னை டிஸ்டர்ப் பண்ணாதே.. நான் படிக்கணும்.. ப்ளீஸ்! என்னை இப்படி அசிங்கப்படுத்தாதே!- கண்ணீரோடு கை கூப்பியவளைக்கண்டு அவன் உறைந்து விட ரவிபிரகாஷ் கேட்டான்.

ஏம்மா! நீ இவனை விரும்புறியா?

அப்படியெல்லாம் இல்ல ஸார். இவன்தான் அப்படிச்சொல்லிட்டு இருக்கான். இவன் டார்ச்சர் தாங்காம நான்தான் சுசீலா மேம்கிட்ட சொன்னேன். அதுல இருந்து மேம்கூடவே போறேன்.. வர்றேன்.

அந்த கடுப்புல தான் இப்படி வந்து கலாட்டா பண்றான். மத்தபடி நான் இவன் மேலே பிரியப்படல ஸார். அவள் கண்ணீரோடு சொல்ல, ரஞ்சித்தின் சட்டையைப்பற்றித் தன் புறமாய் திருப்பினான் ரவிபிரகாஷ்.

ஏய்! என்னடா இதெல்லாம்

இல்ல ஸார் அவ சும்மா.

வாயை மூடுடா.. அதான் அந்தப்பொண்ணு தெளிவா சொல்லிட்டாங்களே.. இதுக்குத்தான் இவ்வளவு ரௌடிஸம் பண்ணியா?

இல்ல ஸார். நான் அந்தப் பொண்ணை சின்ஸியரா விரும்புறேன்.

நாம விரும்புறது பெரிசி

''கண்டாக்டர் என்ன கேட்டாருனு பெரியவர் டென்ஷனாயிட்டாரு?''

''பெரிசு... இன்னுமா டிக்கெட் எடுக்கலை'னு கேட்டாராம் கண்டக்டர்!''

–எம்.அசோக்ராஜா, திருச்சி.





ல்லப்பா.நம்மை விரும்புற பொண்ணை விரும்பணும். இப்படி விருப்பமில்லாத பொண்ணை இம்சிக்கக்கூடாது.

இல்ல ஸார். நான்..

நீ என்ன படிக்கிற?

''மெக்கானிக்கல் என்ஜினீயரிங் செகண்ட் இயர்''

ம்.. முதல்ல படிப்பை முடி.. படிப்புக்கேத்த வேலையைத்தேடிக்க. லைப்ல ஸ்டெடியான பிறகு உனக்கேத்த வாழ்க்கைத் துணையைத் தேடிக்க.

அந்த வாழ்க்கை தான் வெற்றியாக அமையும். இனிக்கும். அதை விட்டுட்டு படிக்க வேண்டிய வயசுல உன் படிப்பையும் ஸ்பாயில் பண்ணிட்டு இன்னொரு பொண்ணையும் ஏன் கஷ்டப்படுத்துற? ம்.?

''ஸா..ஸாரி ஸார்.''

ஆமா! இதென்ன ஹேர்ஸ்டைல்.. சப்பிப்போட்ட மாங்கொட்டை மாதிரி?

அது...ஸ்டைல் ஸார்

படிக்கிற காலத்தில படிப்புக்கு மட்டும் முக்கியத்துவம் கொடு. இந்த மாதிரி ரௌடி ஹேர்ஸ்டைல் பண்ணினதும் ரௌடி மாதிரி பிஹேவ் பண்ற பார்த்தியா?

ஸாரி ஸார்!

உன் அம்மா அப்பா நீ படிச்சு பெரிய ஆளா வருவேன்னு ஆயிரம் கனவு கண்டுட்டு இருப்பாங்க. நீ என்னன்னா.. இப்படி பொண்ணுங்க பின்னாடி சுத்திக்கிட்டு படிப்பைக் கோட்டைவிட்டுட்டு அலையுற.

இதெல்லாம் உம் பேரண்ட்ஸுக்கு தெரிஞ்சா அவங்க மனசு. எவ்வளவு கஷ்டப்படும். இதற்காகவா உன்னை செலவு பண்ணி படிக்க வைக்கிறாங்க? ம்?

ஸா..ரி..ஸார்!

முதல்ல இந்த ஹேர் ஸ்டைலை மாத்து.. நல்ல பிள்ளையாய் படி.. படிக்கும் போது படிப்புல மட்டும் தான் கவனம் இருக்கணும்.. புரியுதா?

''புரியுது ஸார்''

ரொம்ப நல்ல பையனாத்தான் இருக்க. பிறகேன் இப்படி இன்-டீஸன்ட்டா நடந்துக்கிற?

ஸாரி ஸார்! பிரெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்து சுவாதி என்னை விரும்பு

றதா.. உசுப்பேத்திவிட்டுட்டாங்க. மேடம் தான் அதை தடுக்கிறான்னு நினைச்சு..

இப்படி மரியாதையில்லாம பேசுனியா? இது தப்பில்ல?

ஸாரி ஸார்!

முதல்ல அவங்ககிட்ட மன்னிப்பு கேளு.

ஸாரி மேடம்.. மன்னிச்சிடுங்க.. ரஞ்சித் சொல்ல, சுசீலா இன்னும் திகைப்பு மாறாமல் நின்றிருந்தாள். அவளது பார்வை பிரகாஷை விட்டு விலகவில்லை.

பிரகாஷ் ரஞ்சித்தின் தோளில் தட்டிக்கொடுத்தான்.

சரி கிளம்பு. கிளாஸ் நடக்கட்டும்.

ஸாரி ஸார்.ஸாரி மேடம்.. ஸாரி சுவாதி- தலையை நிமிர்த்தாமலே அவன் சொல்லிவிட்டு நகர, கூட்டம் கலையத்துவங்கியது.

சுவாதி நன்றியாய் கை கூப்பினாள்.புன்னகையாய் தலையசைத்தான்.

கிளாஸுக்கு போம்மா!

தேங்க்யூ ஸார்! - அந்தப்பெண் நகர்ந்ததும் பிரின்ஸ்பாலிடம் திரும்பினான்.

ஸாரி ஸார்! கொஞ்சம் ஓவரா நடந்துகிட்டேன்.

இல்ல ஸார், நான்தான் பயந்திட்டேன்., பிரச்சனை பெரிசாகிடக்கூடாதுன்னு.

நீங்க எல்லாரும் பயந்தது தான் அவனுக்கு துணிச்சலைக் கொடுத்திருக்கு.. நான் செய்ததை யாராவது முதல்லயே செய்திருந்தா அவன்

''ஆபரேஷன் தியேட்டர் இந்த பக்கம் இருக்குது டாக்டர் ஏன் கத்திரிகோல் கத்து எடுத்துகிட்டு அந்த பக்கம் போனார்''?
''ஆபரேஷன் நடந்து பல வருடம் ஆயிடுச்சேயில்லை. கத்தரிகோல் கத்தி முனை மங்கிவிட்டது. சாணை பிடிக்க எடுத்துட்டு போறார்''!

-கு.அருணாசலம், தென்காசி.





அப்பவே ஓடிப்போயிருப்பான்.

இல்ல அவன் ஸ்டூடண்ட். அவன் மேலே கைய வெச்சா ஸ்ட்ரைக். அது இதுன்னு ஆகிடுமோன்னு..,

இது ஒரு சாதாரண விஷயம் ஸார். இதுக்கு பயப்பட வேண்டிய அவசியமே இல்ல.நம்மைப்பார்த்து தான் மத்தவங்க பயப்படணும்.. விரட்டிட்டு வர்ற நாய் கூட நாம நின்று திரும்பி பார்த்தால் ஓடுமே..'' - என அவன் சொல்ல, சுசீலாவின் மனக்கதவு தன் தாழ்ப்பாளை உடைத்துக்கொண்டு திறந்தது. கம்பீர நடையோடு அதற்குள் நுழைந்தான் ரவி பிரகாஷ். அவனை உள்ளே வைத்துக்கொண்டு கதவு மூடிக்கொண்டது.

## 9

***கொதிக்கும் மணலில்***
***நடக்கும் போது நம் கால்கள்***
***ஒரு நிழலைத்தேடும் - அப்படி***
***நான் தேடும் நிழல் தான்***
***உன் அன்பு!***

இரவு வெகுநேரம் வரை உறக்கம் வராமல் முன்பக்க லானில் நடந்துகொண்டிருந்தாள் சுசீலா.. வழக்கமாய் படுத்த உடன் தூங்கிவிடுபவள். படுக்கும் வரை புத்தகங்களில் ஆழ்ந்துவிடுபவள். இன்று ஏனோ எதிலும் மனம் ஈடுபடவில்லை .

கொட்டும் பனியில் இருகைகளையும் கட்டிக்கொண்டு சிலமணி நேரங்களாய் நடந்தும் கால்கள் துவளவில்லை. உறக்கம் வரவில்லை. மனம் முழுக்க குழம்பித்தவித்துக்கொண்டிருந்தது.

யாரிடமாவது தன் மனதில் உள்ளவற்றைக் கொட்ட வேண்டும் போல் தோன்றியது? யாரிடம் சொல்வது? வசு? வசுவிடம் பேசினால் என்ன? அவளிடம் பேசியும் மாதக்கணக்காகிறதே!

வீட்டிற்குள் நுழைந்து தன் செல்போனை எடுத்து வசுமதியின் எண்ணில் தொடர்பு கொண்டாள். வசுமதியின் குரலைக்கேட்டதும் உள்ளம் துள்ளியது.

''வசு! நான் சுசி பேசுறேன்..'' - என்றதும் மறுமுனையில் பதட்டமானாள் வசுமதி.

சுசீ! என்னாச்சு? உடம்புக்கு ஒண்ணுமில்லையே?

ஏய்! ஏன்டி பதறுற? நான் சந்தோஷமா இருக்கேன்

அப்பாடி! நானும் ரொம்ப பயந்திட்டேன்.

ஏன் வசு?

இப்படி அர்த்த ராத்திரியில போன் வந்தால் பயமா இருக்காதா?

என்ன? அர்த்த ராத்திரியா? - குழப்பமாய் கடிகாரத்தை பார்த்தவள் கையை உதறினாள்.

அச்சச்சோ! மணி பனிரெண்டரையா?

டயமே தெரியாமத்தான் போன் பண்ணியா?

ஸாரி வசு! தூக்கமே வரலை. உன்கிட்ட பேசணும் போல இருந்தது., அதான்.. ஸாரிடி! உன்னை டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?

சேச்சே! லேட் நைட்ல போன் வந்ததில கொஞ்சம் பயந்திட்டேன். வேற ஒண்ணுமில்ல. சொல்லு

தூங்கிட்டு இருந்தியா வசு?

இல்லப்பா! குழந்தையை தூங்க வெச்சிட்டு இருந்தேன்.. இப்பத் தான் தூங்கினாள்.

இப்பவா? இவ்வளவு நேரமா விழிச்சிருந்தாள்?

அதையேன் கேட்கிற? வழக்கமா அவங்க சித்தப்பா கூடவே ஆட்டம் போட்டுட்டு அவர் மடியில தான் தூங்குவா. இப்ப அவர் ஊர்ல இல்லை. அவரைக் கேட்டு ஒரே அழுகை.

இவ்வளவு நேரமா போராடி இப்பத்தான் தூங்க வெச்சோம். இவரும் தூங்கிட்டார். நீ சொல்லு சுசீ. இத்தனை நாளா போன் பண்ணணும்னு தோணவே இல்லையா?

ஸாரி வசு! வொர்க் அதிகம்.

சரி! இப்ப என்ன திடீர்னு போன்? ஏதாவது பிரச்சனையா?

சேச்சே! எதுவும் இல்ல. சும்மா... உங்கிட்ட பேசணும்னு தோணிச்சு.

பேசு சுசீ. நாமளும் இப்படி பேசி ரொம்ப காலம் ஆயிடுச்சே.

உண்மைதான் வசு. என்னோட கஷ்ட நஷ்டம் எல்லாத்தையும் உங்கிட்ட தானே சொல்லுவேன். இப்ப அதுக்குக்கூட நேரமில்லாம லைப் ஓடிட்டே இருக்கு.

என்ன சுசி. பேச்சில ரொம்ப சலிப்பு தெரியுது.

சில சமயங்கள்ல லைப் போராடிச்சுப்போயிடுது வசு. என்ன வாழ்க்கை இதுன்னு நினைக்கத்தோணுது- சுசீலா சொல்ல வசுமதியின்



மனம் குழப்பமானது.

என்ன ஆயிற்று இவளுக்கு? ரவியால் மனசு காயப்பட்டு பேசுகிறாளா? இல்லையென்றால் இந்த நேரத்தில் போன் பண்ண மாட்டாளே!

வசு! சொல்லு சுசி

உங்கிட்ட ஒன்னு சொல்லணும் வசு.

சொல்லு

இன்னிக்கு காலேஜ்ல ஒரு சின்ன பிரச்சனை.

என்ன? பிரச்சனையா? என்ன ஆச்சு?

பதறாதே. பிரச்சனை சரியாப்போச்சு. ஆனா எம்மனசுதான் குழம்பிப் போயிடுச்சு.

என்ன சுசி சொல்ற?

வசு! உங்கிட்ட எதுக்கு மறைக்கணும்? இங்கே எங்க காலேஜ்ல பிரகாஷ்ன்னு ஒருத்தர் வந்திருக்காருடி.

யாரு? பிரகாஷா?

ம். ஐ.ஏ.எஸ். ஆபீஸர், பிரிலியண்ட் பாய். ரொம்ப நல்லவர். தமிழ் பண்பாடு கலாச்சாரம் நாட்டுப்புறக்கலைகள்னு நிறைய ரிசர்ச் பண்றா ராம்.

அவர் பேசுறதக் கேட்கும் போது பிரமிப்பா இருக்கும் வசு. இத்தனை வருஷமா எவ்வளவோ புக்ஸ் படிக்கிறேன். ஆனால் எனக்குத் தெரியாத எவ்வளவோ விஷயங்கள் அவருக்குத் தெரிஞ் சிருக்கு.

ஓஹோ! பெரிய புத்திசாலியா இருப்பார் போலிருக்கே.

சிரிப்பை மென்று கொண்டே கேட்டாள் வசுமதி.

கண்டிப்பா. புத்திசாலி மட்டு மில்ல வசு. தைரியசாலியும் கூட.

என்ன?

ஆமா வசு! இன்னிக்கு ஒரு ஸ்டு டண்ட் எங்க காலேஜ்ல வந்து என் னைப்பார்த்து காச்மூச்சுன்னு கத்து

***"தலைவர் பயங்கரமான ஆளு"***
***"என்ன சொல்றே?"***
***"2016ல் ஆட்சி அமைப்போம். முடியலைன்னா 2021ல் ஆட்சி அமைப்போம்னு பேசுகிறாரே!"***

**-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**



றான். குத்திடுவேன் கொன்னுடுவேன்னு மிரட்டுறான்.

ஐயோ! யாரு அவன்?

ம்ப்ச்! அது முக்கியமில்ல. முழுசாக்கேளேன்.

ம். சொல்லு.

மொத்தக்கல்லூரியும் பேசவோ அவனை எதிர்க்கவோ தைரியம் இல்லாம நிற்கும் போது இவர் வந்தாருடி.

யாரு?

அதான் பிரகாஷ். அவர் வந்து அந்தப்பயலோட

செவிட்டுல வெச்சாரு பாரு ஓர் அறை...

அடிச்சாரா?

அடின்னா அடி சரியான அடி. அந்தப்பயலை விட நாங்கள் தான் ரொம்ப மிரண்டுட்டோம். அப்படி ஒரு அடி-சுசீலா குதூகலமாய்ச் சொல்ல, வசுமதியின் மனம் கும்மியடித்தது.

ஹீரோ வேலையெல்லாம் செய்கிறாரா தன் மச்சினன் தங்களிடம் சொல்லவே இல்லையே. வரட்டும் பேசிக்கிறேன்.

வசு! எத்தனையோ ஆம்பிளைங்களைப்பார்த்திருக்கேன். ஆனா பிரகாஷ் மாதிரி ஒரு வீரமான ஆண் மகனை இதுவரை பார்த்ததில்லடி.

சுசீ?

ரொம்ப டீஸண்ட்டானவரு. இதுவரைக்கும் எத்தனையோ வாட்டி தனியா உட்கார்ந்து பேசியிருக்கோம். ஆனா ஒருதரம் கூட எல்லை மீறி பேசினதேயில்ல. தப்பாப் பார்த்தது கூட இல்ல.

இரு இரு! சுசீ இப்ப என்ன சொல்ல வர்ற? அந்த வீரனையே உனக்கு பேசி முடிச்சிடலாமா? வசுமதி விளையாட்டு போல் கேட்க, சுசீலாவின் முகம் சட்டென மாறியது.

வ...சு!

இப்ப ம்ன்னு சொல்லு. நான் பேசி முடிக்கிறேன்.

உங்க கல்யாணத்தை. சொல்லு! அவரைப்பிடிச்சிருக்கா?

வசு! என்ன நீ.. இப்படி கேட்கிற?

ஏன்?

நான்... சும்மா காலேஜ்ல நடந்ததைச் சொன்னேன். அதுக்குள்ள நீ...

ஏன் சுசீ உன்னையே நீ ஏமாத்திக்கிற? அந்த ஆளை பிடிக்காமலா இவ்வளவு நேரமா அவரைப்புகழ்ந்து தள்ளிட்டு இருக்க? வசுமதியின் கேள்வியில் திணறிப்போனாள் சுசீலா.



"அந்த வீட்டில் கதவை உடைத்து திருடியிருக்கிறாயே ஏன்?"
"வெளியில் இருந்துகிட்டு எப்படி எசமான் திருட முடியும்? கதவை உடைச்சால்தானே உள்ளே போய் திருட முடியும்?"

**-எம்.அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி.**



சுசீ! ஏன் தயங்குற? நீ எப்போ கல்யாணத்துக்கு சம்மதிப்பன்னு அப்பா உசுரைக்கையில பிடிச்சிட்டு இருக்காங்க. உனக்கு அவரைப்பிடிச்சிருந்தா.

வாயை மூடு வசு. அவர் யாரு அவங்க குடும்பம் என்னன்னு எனக்கு எதுவுமே தெரியாது.

அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய் அவர்..

வசு! நான்.. நான் எப்படி இன்னொருவர் மீது ஆசைப்பட முடியும்?

சுசீ?

ஏற்கனவே ஒருவனை விரும்பியவள் அவனால் ஏமாற்றப்பட்டவள்.. நான் நான் எப்படி?

உளராதே சுசீ. அவன் ஒரு கோழை. ஒரு புழு. அவனா வந்து உம்மேல ஆசைப்பட்டான். கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொன்னான். அதுல உன் தப்பு எதுவும் இல்லையே.

ஆனா சரின்னு தலையாட்டினேனே. அவன் தான் என் புருஷன்னு நினைச்சேனே. இப்ப... அதே மனசில எப்படி இன்னொருத்தரை நினைக்க முடியும். அது தப்பில்லையா?

துரோகம் இல்லையா?

இல்ல சுசீ. இது தப்பே இல்லை

வசு!

அவனாத்தானே போனான்? நீயா விரட்டின? பெத்தவகிட்ட தைரியமா நின்னு பேச முடியாம அவ சொன்ன பொண்ணைக் கட்டிகிட்டு அவன் தானே உன்னை விட்டுட்டு ஓடினான்? அது எப்படி துரோகமாகும்?

இல்ல வசு! அவன் செய்த தப்பை நானும் பண்ணலாமா? இது என்னை என்னால முடியாது.

முட்டாள் மாதிரி பேசாதே. எந்தத்தப்பும் செய்யாம இத்தனை வருஷமா உன்னை நீ தண்டிச்சு கிட்டதே அதிகம். இனியாவது மாறப்பாரு சுசி.

வசு!

நீ சொல்றத வெச்சுப்பார்த்தால் அந்த பிரகாஷ் ரொம்ப நல்லவராத் தான் தெரியுது. நீ ஒன்னு செய்.

என்ன?

நீ உடனே கிளம்பி ஊருக்கு வா.

எ.. எதுக்கு?

வர்ற வெள்ளிக்கிழமை நம்ம பாப்பாவுக்கு குல தெய்வம் கோவில்ல வெச்சு மொட்டை போடுறோம். நீயும் வா. எல்லாம் பேசி முடிச்சிடலாம்.

ஏய் ஏய்! என்ன நீ..

நான் சொல்றதை நீ கேளு. இத்தனை நாளை வீணாக்கினதே தப்பு. முதல்ல உன் கல்யாணத்தை முடிச்சு அந்த சக்திவேல் பயலோட மூஞ்சியில கரியப்பூசணும்.

என்ன?

ஆமா சுசி! அந்த நாய் ஊரெல்லாம் என்ன சொல்லிட்டு திரியுது தெரியுமா?

எ..ன்...னவாம்?

அவனை மறக்க முடியாமத்தான் நீ வேற கல்யாணம் பண்ணிக்காம இருக்கியாம். இன்னும் அவனை நினைச்சிட்டுத் தான் இருக்கிறியாம்.

சீச்சீ - அருவருப்பாய் சீறினாள் சுசிலா.

அவன் அப்படித்தான் சொல்லிட்டு திரியுறான். அவன் வாயை அடைக்கிறதுக்காக வேணும் நீ கல்யாணத்தை பண்ணிக்க.

என்ன வசு நீ. நான் எப்படி..

முதல்ல ஊருக்கு வா. மத்ததை நேர்ல பேசிக்கலாம்.

இல்ல வசு. இது எக்ஸாம் டைம். என்னால வர முடியாது.


**கண்மணி சந்தா**

**கண்மணி**

**உங்கள் இல்லம் தேடி வர.**

**1 ஆண்டு சந்தா : ரூ 600**

**6 மாத சந்தா : ரூ 300**

**சந்தா அனுப்ப**

**வேண்டிய முகவரி:**

**நிர்வாகி**

**தேவியின் கண்மணி,**

**246, அண்ணாசாலை,**

**சென்னை - 600 006**




அப்ப பரீட்சை முடிஞ்சதும் வா. சரியா?

ம். பார்க்கலாம்.

நீ வர்ற. கல்யாணம் பண்ற-வசுமதி உறுதியாய்ச் சொல்ல, இன்னும் குழம்பிப்போனாள் சுசீலா.

அவர் யார் எந்த ஊர் என்றே சொல்லவில்லையே?. பிறகெப்படி இவள் இத்தனை உறுதியாய் கல்யாணம் பண்ணிடலாம் என்கிறாள்? பேசி முடித்துவிடலாம் என்கிறாள்.இது எப்படி சாத்தியம்?

பிரகாஷ் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் எப்படி.. இதெல்லாம்.. என்ற எண்ணம் தோன்றிய போதுதான் மனம் கேட்டது. அப்படியென்றால் உன் மனதில் பிரகாஷ் இருக்கிறானா?

ஆமாம் ஆமாம் என பலமாய் சொன்னது மனசாட்சி.

## ௰

***விடியும் வரை தெரியாது***
***காண்பது கனவென்று***
***அதுபோல் பிரியும் வரை***
***தெரியாது என் அன்பு***
***எத்தனை ஆழமானது என்று!***

திண்டாடிப்போனாள் சுசீலா. ஊர்ல ஒரு விசேஷம். ஊருக்கு போயிட்டு வர்றேன். நீங்களும் எக்ஸாம் பிஸியில இருக்கீங்க. அதனால எக்ஸாம் முடிஞ்சதும் வர்றேன். பை- என சிரித்த முகமாய் சொல்லி விட்டுத்தான் போயிருந்தான்.

அவனிடம் நல்ல பிள்ளையாய் தலையாட்டிவிட்டு அவன் சென்ற கணம் முதல், உண்ண உறங்க மனமின்றி திணறிக் கொண்டிருந்தாள்.

இது என்ன வித்தை? சில நாட்கள் மட்டுமே பழகிப்பிரிந்த ஒருவனால் இத்தனை அவஸ்தையா? தான் ஏன் இப்படி பரிதவிக்கிறேன்?

வழக்கமாய் செய்யும் பணிகளைச் செய்ய இயலாமல் கடமைக்காக எழுவதும் குளிப்பதும் கல்லூரிக்குச் செல்வதுமாய் வாரம் ஒன்று உருண்டோடி விட பசியும் தூக்கமும் இன்றி சுசீலாவின் உடல் இளைக்கத் துவங்கியது.

சகபேராசிரியைகள் கேட்ட பிறகு தான் தன் உருவத்தை நிலைக் கண்ணாடியில் பார்த்தவள் திகைத்துப்போனாள். நானா இப்படி உருமாறிப் போய் விட்டேன்? அவனது நினைவுகளா என்னை இந்நிலைக்கு தள்ளிவிட்டது?

நினைக்க நினைக்க கண்களில் நீர்தளும்பியது. உடனே அவனைப் பார்க்க வேண்டும் போல் கண்களும், இதயமும் பரபரத்தது. தெருவில், சாலையில், கல்லூரியில் பேசிச்செல்லும் ஆண்களின் குரல்கள் எல்லாம் பிரகாஷின் குரலாய் ஒலிக்க, எதிரில் தென்படும் உருவங்கள் எல்லாம் அவனது பிம்பமாய் தோன்றி இம்சித்தது.

அப்படியென்றால் இதுதான் உண்மையான நேசமா? நான் பிரகாஷை நேசிக்கின்றேனா? அதனால் தான் இந்த சிறுபிரிவைக்கூட தாள முடியாமல் தவிக்கின்றேனா?

இதற்கு முன் சக்திவேலை விரும்பிய போது இப்படிக் கலங்கியதில்லையே. மாசக்கணக்காய் பாராமல் இருந்தாலும் கண்கள் தேடியதில்லை. மனம் ஏங்கியதில்லை. விழிகள் கசிந்ததில்லை.

என்றால்.. நான் சக்திவேலை நேசிக்கவில்லையா?

''குடிகாரனுக்கு குழந்தை மனசு''
''எப்படிச் சொல்றே?''
''குடிச்சிட்டு ஊறுகாய்க்குப் பதில் பஞ்சு மிட்டாயைத் தொட்டுக்கிறானே!''

**-எம்.அசோக்ராஜா,**
**அரவக்குறிச்சிப்பட்டி.**



அது வெறும் பழக்கம் தானா? நேசித்திருந்தால் அவன் தன்னை விட்டு இன்னொரு பெண்ணை மணமுடித்த போது இந்த உயிர் பிரிந்து போயிருக்காதா?

இந்த இதயம் வெடித்து சிதறியிருக்காதா? இது எதுவும் நடக்கவில்லையே. துளி ஏமாற்றம் கூட தோன்றவில்லையே. அப்படியென்றால் இதற்கு முன் தோன்றியது. நேசம் அல்ல என்று உணர்ந்ததும் குபீரென மலர்ந்தாள்.

இல்லை. இதுதான் நேசம். இதுதான் என் முதல் நேசம். நான் பிரகாஷைத்தான் நேசிக்கிறேன். அதனால் தான் இந்த மனம் அவனது வருகைக்காக ஏங்கித்தவிக்கிறது. இது தவறில்லை.

நான் துரோகம் செய்ய



வில்லை. என் மனம் என் பிரியம் எல்லாமே பிரகாஷிற்கு மட்டும் தான். பிரகாஷ்! சீக்கிரம் வந்து விடுங்களேன். நான் உடனே உங்களைப்பார்க்க வேண்டும். என் மனதைச் சொல்ல வேண்டும்.

இப்படித்தவிக்க என்னால் முடியாது. உங்களிடம் பேசிவிட வேண்டும். உங்கள் பதில் எதுவாக இருந்தாலும் சரி. நான் பேச வேண்டும். உங்களைப் பார்க்க வேண்டும்.

தனக்குள்ளே குழப்பி பலவற்றையும் சிந்தித்து தெளிவான முடிவை எடுத்த போது அவளது கைபேசி அழைத்தது. ஆவலாய் எடுத்தாள்.

ஹலோ!

மிஸ் சுசீலா! நான் பிரகாஷ்! என்றதும் குபீரென மலர்ந்தாள்.

ஸார்! நீ நீங்களா? நீங்கள் தானா?

ஏன்? ஒரே வாரத்தில என்வாய்ஸ் கூட மறந்து போச்சா?

ஐயோ ஸார்! இப்பத்தான் உங்களை நினைச்சிட்டு இருந்தேன். உடனே போன் வந்ததும்.

என்ன? நீங்க என்னை நினைச்சீங்களா? - அவன் வியப்பாய்க்கேட்க, தயக்கமாய் தலையாட்டினாள்.

ஆ... ஆமா!

ஓ. தேங்க் காட்!

ஸார்!

எனக்குக்கூட இங்கே இருக்க முடியல. எப்ப உங்களைப்பார்ப் போம்னு இருக்கு - என்றதும் பனிச்சாரல் தன் மீது பொழிவதைப்போல் சிலிர்த்தாள்.

ஸார்!

இந்த ஸார் வேண்டாமே சுசி. கால் மீ பிரகாஷ் - அவனது குரல் குழைவாய் ஒலிக்க, சுசிலாவின் செவிமடல்கள் உஷாராகின.

சுசி என்றா சொன்னான்? இது அன்று பேசியவனின் குரல் அல்லவா? அதே குழைவு! அதே அழைப்பு! அப்படியென்றால் இவன் இவன் தான் ரவியா?

அதுவரை பாலாய் பொங்கிக் கொண்டிருந்த மனம் நீர் தெளித்ததைப் போல் சட்டென அடங்கியது. முகத்தில் கடுமை கூடியது. தான் ஏமாந்ததை உணர்ந்தாள்.

சுசீ! நான் பேசுறது கேட்குதா?

ம். கேட்குது

அப்புறம் சுசி! இங்கே அம்மா அப்பா அண்ணன் அண்ணி எல்லாரும் நச்சரிக்கிறாங்க.

எதுக்கு?

உங்களை நேர்ல பார்க்கணுமாம்.

என்னையா? ஏன் பார்க்கணும்? - சுசிலாவின் குரலில் கடுமை தொனித்ததை உணராமல் உற்சாகமாய் பேசினான் ரவிபிரகாஷ்.

என்ன இப்படிக்கேட்டுட்ட? மருமகளைப்பார்க்கணும்னு அவ்வளவு ஆசை.

மருமகளா?

ஆமா சுசி. எல்லார்கிட்டேயும் சொல்லிட்டேன்.

நாளைக்கே கல்யாணத்தை வைக்கக்கூட ரெடியா இருக்காங்க. நீ சரின்னு சொன்னா.

வாட் நான்சென்ஸ்! என்ன உளர்றீங்க. மிஸ்டர் பிரகாஷ்? ஆத்திரமாய் வெடிக்க, ரவிபிரகாஷின் முகம் மாறியது.

சு..சீ!

ஷட்-அப்! சும்மா ஒரு பேச்சுக்கு நினைச்சிட்டு இருந்தேன்னு சொன்னா உடனே கல்யாணம் வரைக்கும் போயிடுறதா?

இடியட்!

சுசீ?

யாருடா நீ?

சுசி!

எம்பேரைச்சொல்லாதே! யார் நீ? எனக்கு தெரிஞ்சு போச்சு. நீ.. அன்னிக்கு போன்ல கலாட்டா பண்ணினவன் தானே நீ?

ஓ! ஸாரி! ஸாரி சுசி. நானே சொல்லியிருக்கணும்.

வாயை மூடு. நீ ஒரு சீட்டிங்பெல்லோ! இரட்டை வேஷம் போடுறியா? எங்கிட்ட இருந்து என்ன எதிர்பார்க்கிற? சொல்லுடா!

ஹய்யோ! சுசி நான் யாருன்னு உனக்குத் தெரிஞ்சா.

வேண்டாம்! எனக்கு எதுவும் தெரியவேண்டாம். நான் உன்னைப் பார்க்கவோ பேசவோ விரும்பல. போனை வை.

சுசி பிளீஸ்! நான் பேசுறதைக்கொஞ்சம் கேளு.

போதும்! உன் பேச்சை நடிப்பைப் பார்த்து ஏமாந்தது போதும். அதெப்பிடிடா ஒட்டுமொத்த இனமும் இப்படி ஏமாத்தவே வந்தீங்களா? ச்சே! ஒரு முறை சுட்டுகிட்ட பிறகும் நான்.. நான்..

லிசன் சுசி! நான் ஒன்னும் சக்திவேல் இல்ல. உன்னை மனசார நேசிக்கிறேன். உன் மனசில இடம் பிடிக்கணும்னு தான்..



என்ன? என்ன பேர் சொன்ன?

அது.. வந்து சக்திவேல்...

ஓ! என்னைப்பத்தி எல்லாத்தையும் தெரிஞ்சிகிட்டு தான் வந்தியா? ஒருத்தன்கிட்ட ஏமாந்தவ தானே ஈஸியா ஏமாத்திடலாம்னு வந்தியா?

ஸ்டாப் இட் சுசி. நீ சக்தி வேலை விரும்பவே இல்ல. அது ஒரு ஆக்ஸிடெண்ட். அதை நீ மறக்கணும்னு தான் நான் வந்தேன்.

உன் மனசில உள்ள வலியைப் போக்கணும். என்னை முழுமனசோட நீ ஏத்துக்கணும்னு தான் நான் வந்தேன். மத்தபடி நீ நினைக்கிற மாதிரி நான் மோசமானவனில்லை.

''ஊர்வலத்தில் வருகிற எல்லோரும் ஏன் முகத்தை காட்டாமல், முதுகையே காட்டுகிறார்கள்?''

''ஊர்வலம் முடிந்ததும் வேறு கட்சி ஊர்வலத்துக்குப் போகணுமாம்''

**-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**



நம்பு சுசி. நான் உன்னை விரும்புறேன். இப்ப இல்ல. அஞ்சு வருஷமா. என் அண்ணி எப்போ உம்போட்டோவை எங்க வீட்ல மாட்டினாங்களோ அப்ப இருந்தே - ரவிபிரகாஷ் கம்மிய குரலில் பேசிக்கொண்டிருக்க மறுமுனையில் தொடர்பு எப்போதோ துண்டிக்கப்பட்டிருந்தது.

சுசீ! சுசீ! கத்தியவன் பெருமூச்சோடு ரிஸீவரை சாத்த, வசுமதியும் ரகுநந்தனும் முகம் மாறியிருந்தனர்.

என்னடா ஆச்சு?

ம்ப்ச்!

என்னடா?

கோவிச்சுகிட்டா!

ஏன்?

போன்ல அன்னிக்கு பேசினதை நான் இதுவரை சொல்லவே இல்ல. இன்னிக்கு ஐடென்டிபை பண்ணிட்டா.

ரவி! இப்ப என்ன பண்றது?- வசுமதி பதறினாள்.

ஒன்னும் பிரச்சனை இல்ல அண்ணி. நான் கிளம்புறேன்.

எ.. எங்கே?

சுசீலாவோட வர்றேன் - என்றவன் புறப்படத்தயாராக, வசுமதியின் பதற்றம் அதிகமாகியது

ரவி! நானும் வர்றேன்.

நீங்களா? நீங்க எதுக்கு அண்ணி?

நீங்க என் மச்சினன்னு தெரிஞ்சா அவளோட கோபம் குறைஞ்சிடும். நான் பேசிப்புரியவைக்கிறேன்.

இல்ல அண்ணி! இது நான் தொடங்கின விளையாட்டு. நான் தான் முடிக்கணும்.

ரவி!

நான் அவளை விரும்புறது நிஜம்ன்னு புரிய வைக்கணும்னா நான் தான் பேசியாகணும். எனக்கு எந்த சப்போர்ட்டும் வேண்டாம். நான் கிளம்புறேன், உங்க கல்யாண ஆல்பமும் இந்த போட்டோவும் கொடுங்க.

ரவி! சொன்னாக்கேளுடா! நானாவது வர்றேன்.

இல்லண்ணா! இது ஒன்னும் பெரிய பிரச்சனை இல்ல. அம்மாகிட்ட எதுவும் சொல்ல வேண்டாம். நான் போய் பேசி சுசியக் கையோட கூட்டிட்டு வர்றேன்.

அவளுக்கு எம்மேல பிரியம் இருக்கு. அது அவ பேச்சிலயே எனக்குத் தெரிஞ்சது. போன்ல பேசினதை அவகிட்ட மறைச்சது தான் தப்பு. அது அவளை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணியிருந்தது.

அதனால பொறுமையா எல்லாம் கை கூடினப்பிறகு சொல்லலாம்னு விட்டுட்டேன். எடுத்துச்சொன்னா புரிஞ்சுப்பா கிளம்புறேன்.

''தலைவர் மைக்கைப் பிடித்தால் தன்னையே மறந்துடுவாரு''
''மயக்க மருந்துக்குப் பதில் 'மைக்க' மருந்தா தந்திடலாம்னு சொல்லு''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.





ரவி! பார்த்து பேசுங்க. அவ கோபப்பட்டாலும்.. என்றவாறே போட்டோ அடங்கிய ப்ரீப் கேஸை நீட்டினாள் வசுமதி.

பயப்படாதீங்க அண்ணி! என்ன ஆனாலும் சரி சுசிதான் என் மனைவி. அதுல எந்த மாற்றமும் இல்ல. வர்றேன். உறுதியாய் உரைத்து விட்டு புறப்பட்டான் ரவிபிரகாஷ்.

## 11

***உ**ண்மையான அன்பை நீ*
*எவ்வளவு காயப்படுத்தினாலும்*
*அது உன்னையே நேசிக்கும்*
*ஏனென்றால் நேசம் என்பது*
*கானல் நீரல்ல மறைவதற்கு!*

கல்லூரிக்கு விடுப்பு சொல்லிவிட்டு தன் அறைக்குள் முடங்கிக்கிடந்தாள் சுசீலா. யாரையும் பார்க்கவோ, பேசவோ விருப்பமின்றி படுக்கையில் சுருண்டிருந்தவளை வாசற்கதவை தட்டும் ஒலி கலைத்தது.

வேலைக்கார பெண்மணியாக இருக்கும் என படுக்கையை விட்டு எழாமலே குரல் கொடுத்தாள்.

கதவு திறந்துதான் இருக்கு செல்லம்மா

கதவைத்திறந்த ஓசை கேட்டதும் அயர்ச்சியாய் கண்களை மூடிக்கொண்டாள். மீண்டும் மனதில் பாரம் அழுத்த கண்களில் நீர் கசிந்தது.

எப்படி ஏமாந்தேன்? அவனது குரலை எப்படி அடையாளம் கண்டு கொள்ளாமல் விட்டேன்? யாரவன்? என்னை ஏன் இப்படி வதைக்கிறான்? இப்படி ஒரு வேடதாரியை எப்படி நம்பினேன்?

நல்லவேளையாய் அவசரப்பட்டு அவனிடம் எதையும் உளறிக்கொட்டவில்லை. அப்படி ஏதேனும் நடந்திருந்தால் ச்சே! தன் மீதே வெறுப்பு எழ, அதே நேரம் முகம் சுருங்கினாள்.

வழக்கமாய் உள்ளே நுழைந்ததும் வாய் ஓயாமல் பேசும் செல்லம்மாவிடம் இன்று எந்த அசைவும் இல்லையே? குழப்பமாய் விழிகளைத்திறந்தவள் திடுக்கிட்டு எழுந்தாள்.

கட்டிலுக்கு வெகு அருகே கைக ளைக்கட்டிக்கொண்டு நின்றிருந்தான் ரவிபிரகாஷ். முகம் முழுக்க வெறுப் பாய் கட்டிலை விட்டு இறங்கினாள் சுசீலா.

ஏய்! யார் நீ? யாரைக்கேட்டு உள்ளே நுழைந்தாய்? வெளியே போ! போடா!

சுசீ! பிளீஸ் கூல் டவுன். நான் செ ால்ற...

நீ எதுவும் சொல்ல வேண்டாம். முதல்ல வெளியே போ. அவுட்!

அப்படியெல்லாம் போக முடியாது.

வ்வாட்?

முதல்ல உட்கார். உங்கிட்ட பேசணும்.

''ஒரு வாரமா காய்ச்சல்னு சொல்றீங்க. அப்பவே ஏன் வரலை?''

''போலி காய்ச்சலா இருக்குமானு செக் பண்ணினேன் டாக்டர்''

**-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**



யூ இடியட்! நான் என ஆத்திரமாய்த் தொடங்கியவளின் தோளைப் பற்றி அமரவைத்து அவளது மடியில் அந்த ஆல்பத்தை வைத்தான்.

வாட் ஈஸ் திஸ்? விடு என்னை

முதல்ல இந்த ஆல்பத்தைப்பாரு. அதுக்கப்புறம் நாம பேசலாம்.

என்ன இது?

என் அண்ணனோட கல்யாண ஆல்பம்

இதை ஏன் நான் பார்க்கணும்? ஸ்டுப்பிட் ஆத்திரமாய் அதைத்தூக்கி வீச முயன்றவளின் கரங்கள் அப்படியே நின்றது.

கண்கள் தயக்கமாய் அட்டை மேலிருந்த புகைப்படத்தில் பதிய, அவளது முகம் பலவிதமாய் மாறியது. திருமண அலங்காரத்தில் கண வனுடன் நின்றது வசுமதி.

லேசான திடுக்கிடலோடு ஆல்பத்தை நேராய் வைத்து தெளிவாய் பார்த்தாள். இது வசுதான். அவளது திருமணம்.

தான் அப்படியென்றால் இவன்? - குழப்பமாய் நிமிர்ந்தாள்.

இயல்பான புன்னகையோடு குனிந்து புகைப்படத்தின் மீது விரல் வைத்து காட்டினான் ரவி பிரகாஷ்.

இது என் அண்ணன் ரகுநந்தன். இது அண்ணி பேர் வசுமதி.



வ..சு... வசு! உங்கள்...அண்ணியா?

திகைப்பாய் கேட்டவளைப் பார்த்து தோள்களைக்குலுக்கினான்

''அண்ணனோட ஒய்ப் அண்ணிதானே?''

இ..ல்ல..நான்..நீங்கள்..

வெயிட்! இதோ இதையும் பார்த்திடு.. என வசுமதியும் சுசீலாவும் இணைந்து நின்ற புகைப்படத்தை நீட்டினான்.

கைகள் நடுங்க வாங்கிக் பார்த்தவளின் முகம் அந்தப் புகைப்படத் தைக் கண்டதும் மகிழ்ந்து பின் நெகிழ்ந்து கண்ணீர் சுரந்தது.

வசுமதியையே நேரில் கண்டதுபோல் பரவசமாகி விரல்களால் புகைப்படத்தை வருடினாள். விழிகளில வழிந்த நீர் கீழே விழுந்து சி தறியது.

புன்னகையோடு கைகளைக கட்டிக் கொண்டே கேட்டான்.

என் அண்ணின்னா உனக்கு ரொம்ப பிடிக்குமோ? கண்ணீரோடு தலையாட்டினாள் வசு என்னோட சிஸ்டர் மட்டுமில்ல. அவ எம் பிரெண்ட்.. என் உயிர்.

அப்படிப்பட்ட உயிர்த் தோழியோட கல்யாணத்துக்குக் கூட ஏன் வரல சுசீ? - அவனது கேள்வியில் தடுமாறினான்.

அது...அது...அப்போ...

நீ வராததால இப்ப எவ்வளவு பிரச்சனை ஆயிடுச்சு தெரியுமா? என் றதும் மீண்டும் திகைத்தாள்.

எ..ன்ன? பி..ர..ச்சனையா?

ஆமா!

யா...ருக்கு... என்ன பிரச்சினை?

எனக்குத்தான்.

என்ன சொல்றீங்க? - ஈர விழிகளை நிமிர்த்தினாள்.

பின்னே? நீ மட்டும் கல்யாணத்திற்கு வந்திருந்தால் உன்னை நேர்ல பார்த்து விரும்பி இந்நேரத்துக்கு நம்ம கல்யாணம் முடிஞ்சிருக்கும். குழந்தை கூட பிறந்திருக்கலாம்.

வாட்?

நீ வராம போனதால இந்த போட்டோவை பார்த்து உன் மீது மையல் கொண்டு வேற எந்தப் பெண் மீதும் ஆசைவராமல் மணந்தால் சுசீலா இல்லையேல் சந்நியாசின்னு உனக்காக அஞ்சு வருஷமா தவம் இருக் கேன்.

உன் மனசுல இடம் பிடிச்சி நீ முழு மனசோட என்னை ஏத்துக்க

ணும்ங்கிறதுக்காக போன்ல ரவியா உன்கிட்ட கலாட்டா பண்ணி அது உன்னை கஷ்டப்படுத்திட்டதால நேர்ல பிரகாஷா அறிமுகமாகி... இப்போ உன் முன்னால ஒரு ஏமாற்றுக்காரன்ற அவப்பேரோட நிற்கிறேன்.

ரவிப்பிரகாஷ் ஒரே மூச்சாய் பேசி முடிக்க, திகைப்பாய் எழுந்தாள்.

எ..ன்...ன சொல்றீங்க? எனக்கு எதுவுமே புரியல்ல?

உட்கார் சுசி! - என்றவன் அவளை அமர வைத்து தானும் அவளருகே அமர்ந்து அந்த புகைப்படத்தைக் காட்டினான்.

''என் அண்ணனோட கல்யாணம் முடிஞ்ச மறுநாள் அண்ணி இந்த போட்டோவை எங்க வீட்டுல மாட்டினாங்க. முதன்முறையா உன்னை அன்னிக்குத் தான் பார்த்தேன்'' - ரசனையாய் சொன்னவனை வியப்பாய் நோக்கினாள்.

'' பார்த்த உடனே பச்சக்குன்னு இதயத்தில ஒட்டிக்கிட்ட. அண்ணியோட பிரெண்டா இருக்கும்னு முதல்ல விசாரிக்கல. அப்போ நான் படிச்சிட்டு இருந்ததால வேற எந்த எண்ணமும் வரல.''

''படிப்பைமுடிச்சதும் கல்யாண பேச்சை எடுத்தாங்க எனக்கு என்னவோ வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்கணும்னு தோனலை''

''ஏ...ஏன்?''

''என்ன ஏன்? அதான் சொன்னேனே இதயத்தில ஒட்டிக்கிட்டன்னு. அண்ணிகிட்ட லைட்டா விசாரிச்சேன். நீ படிச்சிட்டு இருக்கிறதா சொன்னாங்க.

சரி படிக்கிற பொண்ணோட படிப்பை ஏன் கெடுக்கணும்னு ஐ.ஏ.எஸ்.பண்ணினேன். பாஸும் ஆகிட்டேன். டியூட்டில ஜாயின் பண்றதுக்குள்ள எப்படியும் கல்யாணம் பண்ணிடணும்னு அம்மா ஒரே நச்சரிப்பு.

அதனால திரும்பவும் உன்னைப் பத்தி அண்ணிகிட்ட கேட்டேன். அப்பத்தான் அண்ணி எல்லாத்தையும் சொன்னாங்க'' - என அவன் நிறுத்த. அவன் முகத்தை தயக்கமாய் பார்த்தாள்.

''எ..ன்..ன சொன்னாள்?''

''எல்லாம் தான். நீ அவங்களோட சொந்த பெரியப்பா பொண்ணுன்னுறத...மோட்டரப் போடப்போகும்போது உங்க அப்பா மேல கரண்ட் பாய்ஞ்சத, அதைத் தடுக்கப் போன உன் அம்மாவும் அதுல பலியானதை...'' - சுசிலா குலுங்கி அழத்துவங்க,தன் பேச்சை நிறுத்தி



அவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான் ரவிபிரகாஷ்.

சாய்ந்து கொள்ள தோள் கிடைத்ததும் அவளது அழுகை அதிகமாகியது. அவளை அணைத்து தேற்றினான்.

''அழாதேம்மா!''

''இல்ல...என்..னால...இப்பவும் அதை மறக்க முடியல. நான் ஸ்கூல்ல படிச்சிட்டு இருந்தப்ப சித்தப்பா வந்து கூப்பிட்டாங்க. வந்து பார்த்தா...அம்மாவும் அப்பாவும் கரிக்கட்டையா.... ஐயோ....''

''ஸாரிம்மா! உன் காயத்தை நானே கிளறிட்டேன்''

''அந்த மரணம் தான்....என் வாழ்க்கையையே புரட்டி போட்டிச்சு பிரகாஷ். அம்மா அப்பா போனபிறகு என்னால படிக்க முடியல. சித்தப்பா வீட்ல தான் வளர்ந்தேன். தோட்டத்துக்கு போய் வேலை செய்வோம்.

''அது ஒரு பெரிய பணக்காரக் குடும்பம்''
''எப்படிச் சொல்றே?''
''வேலைக்குப் போகாத தன் மகனைக் கூட தண்டச் சோறுனு திட்டாமல் தண்ட பீட்சானு திட்டுகிறார்களே''
**-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.**



அந்த நேரம் தான் எம்மேல பரிதாபப் படுறமாதிரி வந்து பழகினான் சக்திவேல். அறியாத வயசுல ஆறுதலா நாலு வார்த்தை பேசினதும் அவன் கடவுள் மாதிரி தெரிஞ்சான்.

அவனோட வெளிய சுத்தி திரிஞ்சதில்லையே தவிர இவனைக் கட்டிகிட்டா என்னை பெத்தவங்க மாதிரி அன்பா பார்த்துப்பான்னு நினைச்சேன். ஆனா...அவன்...''

''விடு சுசீ! போனதைப் பத்தி ஏன் பேசணும்?''

''இல்ல பிரகாஷ். என் மனசு இன்னும் எரியத்தான் செய்யுது. அவன் ஒரு கோழை. முதுகெலும்பு இல்லாதவன். பணத்தோட சொத்து சுகத்தோட மாமன்மக கிடைச்சதும் என்னை விட்டுட்டான்.

இப்பக்கூட அதை நினைச்சா எம்மனசு தீயா எரியுது. எங்கே ஊருக்குப் போனால் அவனைப் பார்த்தால் இந்த நெருப்பு அதிகமாகிடுமோன்னு தான் ஊருக்கு போறதை அவாய்ட் பண்ணினேன்.

அதோட ஊருக்குப் போனா எப்படியும் சித்தப்பா கல்யாணப் பேச்சை எடுப்பாங்க. என்னால இன்னொரு ஏமாற்றத்தை தாங்கிக்க முடியாது.

இன்னொரு ஆணை என்னால ஏமாற்றவும் முடியாது. அதான்....''

''தப்பு சுசி! நீ ஏமாறவும் இல்ல. ஏமாற்றப் போறதும் இல்ல...''

''பிரகாஷ்!''

''சின்ன வயசுல யார்மிட்டாய் கொடுத்தாலும் நமக்கு அவங்களைப் பிடிக்கும். அதுக்காக அவங்களை விரும்பினதா ஆகிடுமா?''

''பிரகாஷ்''

''சக்திவேல் உனக்கு கொடுத்த மிட்டாய் அவன் பேச்சுதான். நீ குழந்தை அதனால அது உனக்கு பிடிச்சிருந்தது. இப்ப அதையெல்லாம் நினைச்சுப்பாரேன்.

எல்லாமே ஏமாற்றுன்னு புரிஞ்சிடும். வெறும் பேச்சு தான்னு தோணும் அப்படின்னு தோணுதா?'' - அவளை முகத்தை நிமிர்த்தி அவன் கேட்க, சிலகணங்கள் யோசித்தாள் சுசீலா.

''உண்மை தான். அவன் பேசியவை அனைத்தும் சினிமா வரிகள். அப்போது அது இனித்தது. இப்போது நினைத்தால் கேலிப் பேச்சாய் தோன்றுகிறதே!''

அவள் குழப்பமாய் அமர்ந்திருக்க, அவளது கையை எடுத்து தன் கரங்களுக்குள் வைத்துக்கொண்டான். மறுக்கவோ விலக்கவோ தோன் றாமல் திகைத்துப் போனாள் சுசீலா.

''இத்தனை வருஷமா நீ நினைச்சிட்டு இருந்ததெல்லாம் வெறும் நிழல் சுசி. அவன் ஒரு கானல்நீர். அது ஒரு மாயை அவ்வளவு தான்.

ஆனா...நான்...என் நேசம் எல்லாமே நிஜம் உன் நிழல்படத்தைப்

பார்த்தே வருஷக்கணக்காய் உன்னை விரும்பியவன் கடைசி வரைக்கும் உன்னோட வாழணும்னு காத்திருப்பவன் என் நேசம் உனக்கு புரியலையா சுசீ?''

பி...ர...காஷ்!

எனக்குத் தெரியும்.நீயும் என்னை விரும்புற''

நான்...

இதுல பயப்படவோ தயங்கவோ எதுவுமில்லையே. இதுதான் நிஜம். உன் மனசில நான் இருப்பதால்தான் இத்தனை கண்ணீர் வருது.

இந்த ஒரு வாரமா உன்னைப் பார்க்காம பேசாம நான் எப்படித் தவிச்சேனோ அதே தவிப்பு உனக்கும் இருந்திருக்கணும். உண்டா இல்லையா? - அவனது கேள்விக்கு பதில் சொல்ல இயலாமல் திண றினாள்.



கடந்த காலத்தை விட்டு வெளியே வா சுசீ உன் மனசுக்கு ஆறுதலா உன் வழித்துணையா நான் இருக்கேன். அறியாத வயசுல புரியாம நடந் துகிட்டதை நினைச்சு ஏன் உன்னையே நீ ஏமாத்திக்கிற?

இந்த நிமிஷம் நடக்கிறதுதான் உண்மை. புரியுதா ? என்ன ? நான் சொன்னது சரிதானே?

ம்..ஆமா! உண்மைதான் பிரகாஷ். நான்தான் இத்தனை நாளா.. புரிஞ் சுக்காம இருந்திருக்கேன்.. - என்றாள் தெளிவோடு.

இப்பத் தெளிவா இருக்கியா?

ம்.

இப்போ ஊருக்கு போகலாமில்லே?

ஊ..ருக்கா?

ஆமா! உங்க சித்தப்பாவை பார்க்கணும்னு தோணவே இல்லையா?

சுரீரென நிமிர்ந்தாள். எப்படி? எப்படி சித்தப்பாவை மறந்தேன்? படிக்க வேண்டும் என்றதும் தன் மனைவியின் சொல்லையும் மீறி தன் னைப் படிக்க வைத்தாரே.

தனக்குக் கல்வியைத் தந்த கடவுள் ஆயிற்றே! பெற்றவர்களை இழந்து நிற்கையில் தந்தையாய் அரவணைத்தவர், தன் விருப்பத்திற்காக தோட் டத்தை அடமானம் வைத்து என்னை படித்த வைத்தவர் அவரை எப்படி மறந்து போனேன்?

ஒரு ஏமாற்றுக்காரனுக்காக தன் வளர்ப்புத் தந்தையையும் தன் சிநேகிதியையும் அல்லவா ஒதுக்கி வைத்து விட்டேன்? இது அல்லவா

''என்ன மாப்ளே மாமியாரும் மருமகளும் சண்டைப்போட்டா வேடிக்கை பார்க்கிறீங்களாம் ஏன்?''

''சண்டையில் நல்ல சீன் இருந்தா என்னோட அடத்த படத்துக்குச் சேர்த்திடலாமுன்னு பார்க்கிறேன் நல்ல ரசனையான சண்டையே இரண்டுபேரும் போட மாட்டேங்கிறாங்களே''.

-சு.லட்சுமி, கரூர்.



பாவம்? செய்நன்றி மறத்தல்?

உன்னைப் பார்க்கனும்னு அண்ணியும் மாமாவும் ரொம்ப தவிக்கிறாங்க. போலாமா சுசீ?

போகலாம் பிரகாஷ்.. நான்..நான் சித்தப்பாவைப் பார்க்கனும். இ..இப்பவே..போகலாமா? - ஆவலாய் கேட்டதும் முகம் மலர பலமாய் தலையாட்டினான் பிரகாஷ்.

# 12

***எனக்காகவே நீ***
***உனக்காகவே நான் - இது***
***இறைவன் போட்ட முடிச்சு***
***இதை அவிழ்க்கவோ***
***அவிழவோ விடமாட்டேன்!***

வருடக்கணக்காய் சேர்த்து வைத்திருந்த உறைந்து போயிருந்த மொத்தக் கண்ணீரும் சுத்தமாய் வெளியேறி இருந்தது சுசீலாவிற்கு.

வசுமதியைக் கட்டிக் கொண்டு உருகியதில் சிறிய தந்தையின் பாதத்தை நனைத்ததில் , சிற்றன்னையின் அரவணைப்பில் தேம்பியதில் , சந்தனப்பூச்சோடும் மொட்டைத்தலையோடும் அழகாய் சிரித்த வசுமதியின் மழலையிடம் கசிந்ததில் கண்ணீர் முற்றிலும் வெளியேறியது.

''என்ன மாப்ளே... என் பொண்ணை கண் கலங்காமப் பார்த்துக்கிறேன்னு சொன்னீங்க தினமும் கண் கலங்கிறாளே?''

''மிளகாய்த்தூள் அரைக்கும் தொழிலை கொஞ்ச நாளில்விட்டுட்டு வேற தொழில் செய்யப்போகிறேன் அப்புறம் கண் கலங்கத் தேவையில்லை மாமா''.

-ச.லட்சுமி, கரூர்.





இத்தனை காலமாய் எத்தகைய உறவுகளை அன்பை இழந்திருக்கிறோம் என்று புரிந்தது. பயணக்களைப்பு மறந்து, பசி மறந்து, தன்னை அழைத்து வந்தவனையும் மறந்து பேசிக் கொண்டே இருந்தாள்.

ரகுநந்தனும் ரவிபிரகாஷும் ஓரமாய் நின்று கொண்டு அனைத்தையும் அமைதியாய் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கசிந்த கண்களோடு நெகிழ்வாய் நின்றிருந்த தம்பியிடம் கிசுகிசுப்பாய் கேட்டான் ரகுநந்தன்.

ரவி!

ம்?

உன் மேட்டர் என்னாச்சு? ஓ.கே.வா?

ம்ப்ச்! அதைப்பத்தி பேசவே இல்லண்ணா!

ஏன்டா?

பேமிலியப் பத்தி பேசும்போதே அழுதிட்டா.. அவ மனசுல உள்ளதை சொன்னாள். அந்த நேரத்தில் நான் எப்படி?

காரில் வரும்போது பேசியிருக்கலாமே?

விடுண்ணா! இந்த நிமிஷம் அவ இவ்வளவு சந்தோஷமா இருக்கிறதே போதும். மத்ததை பிறகு பார்த்துக்கலாம்.

பிறகுன்னா?

அவ ரிலாக்ஸா ஆன பிறகு?

மா..ப்பிள்ளை! - முத்துசாமியின் அழைப்பில் இருவரும் அவரை நெருங்கினர். படுக்கையில் கிடந்தவர் கண்களில் நீர் கசிய ரவிபிரகாஷின் கைகளைப் பற்றிக் கொண்டார்.

ரொம்ப நன்றி மாப்பிள்ளை.

ஐயோ! எதுக்கு மாமா?

எங்கே எம்பொண்ணை பார்க்காமலே அதை அநாதையா விட்டுட்டு போயிடுவேனோன்னு பயந்தேன். உங்களால எல்லாம் நல்லபடியா நடந்திருக்கு.

அட என்ன மாமா நீங்க! நான் என்ன பெரிசா பண்ணிட்டேன்.

மாப்பிள்ளை! இதே சூட்டோட கல்யாணத்தையும் பண்ணிடலாம்.நான்...

மாமா!

என் கண்ல ஒளி இருக்கும் போதே உங்க கல்யாணத்தைப் பார்த்திடனும்.

அவசரப்படாதீங்க மாமா - என்றவனின் பதிலில் அனைவரின்

முகமும் மாற, வெட்கப் புன்னகையோடு தலை கவிழ்ந்திருந்த சுசீலா திடுக்கென் நிமிர்ந்தாள்.

அனைவரையும் பொதுவாய் பார்த்தான்.

எனக்கு ஒரு மணி நேரம் டைம் கொடுங்க.நானும் சுசியும் வெளியே போயிட்டு வந்து முடிவைச் சொல்றோம்.

எங்கேடா போற?

ஒரு முக்கியமான இடத்துக்கு. வா சுசீ - என கரம்பற்றி அழைத்தவனிடம் எதுவும் கேட்கத் தோன்றாமல் புறப்பட்டாள்.

பின்னே ஓடிவந்த வசுமதியிடம் அமைதியாய் இருக்கச் சொல்லிவிட்டு காரில் ஏறினர்.

எங்கே அழைத்துச் செல்கிறான் ?எதற்காக சித்தப்பாவிடம் அவசரப்பட வேண்டாம் என்றான்? மனம் முழுக்க கேள்விகள் குடைந்தாலும் மவுனமாகவே அவள் இருக்க, கார் நின்ற பிறகே வாயைத் திறந்தான் ரவிபிரகாஷ்.

இறங்கு சுசீ - என காரின் கதவைத் திறக்க குழப்பமாய் இறங்கியவளின் மூக்கை குப்பென ஏதோ நாற்றம் அடைக்க , முகச்சுளிப்போடு கைக்குட்டையை எடுத்து மூக்கை மூடிக்கொண்டாள்.

கண்களை சுழற்றினாள். அது மாட்டுத் தொழுவம். வரிசையாய் பத்துக்கும் மேற்பட்ட பசுக்கள். நான்கைந்து எருமைகள், சாணங்கள் குவிக்கப்பட்டிருக்க சுற்றுப்புறம் முழுக்க சாணி வாடை.

என்ன பிரகாஷ்! இங்கே ஏன் கூட்டிட்டு வந்தீங்க?

ஒரு முக்கியமான ஆளை பார்க்கிறதுக்கு.

யார் அது?

ஒன் மினிட்! - என்றவன் சற்று தூரமாய் தலைப்பாகையோடு சாணத்தைக் கூடையில் அள்ளிக் கொண்டிருந்தவரை அழைத்தான்.

ஹலோ! மிஸ்டர் சக்திவேல். சக்திவேல் - அவனது அழைப்பில் அவன் திரும்ப, திகைப்பாய் ரவிபிரகாஷை ஏறிட்டாள் சுசீலா.

பிரகாஷ்! இங்கே ஏன்?

வெயிட்! இதோ வர்றார் பாருங்க இந்த ஊர் ஆணழகன். - நக்கலான குரலில் அவன் சொல்ல, தயக்கமாய் திரும்பிப் பார்த்தாள்.


கிழிந்த பனியனும் நாற்றமடித்த லுங்கியுமாய் கைகளில் ஒட்டிய சாணத்தோடு வந்து நின்றவனைக் கண்டதும் குடலைப் புரட்டியது.

யாருங்க? - என வந்தவனின் பார்வை சுசீலாவின் முகத்தில் உறைந்து போக கடுப்பாய் திரும்பினாள்.

வாங்க பிரகாஷ் போகலாம்.



''மாப்பிள்ளை... என் மகளைக் கண் கலங்காமல் பார்த்துக்குங்க...''
''சரி மாமா... சீரியலே பார்க்க விடாமல் பார்த்துக்கிறேன் மாமா!''
-எம்.அசோக்ராஜா, திருச்சி.



சுசீ! அட ! என்ன சுசீலா இது? அம்மாடி! கலெக்டர் மாதிரி வந்து நிற்கிறியே - அவன் தன்னை அடையாளம் கண்டு கொண்டான் என்றதும் நிமிர்ந்து நின்றாள்.

சுசீ! சுசீ! என் அம்மா பேச்சைக் கேட்டு என் தலையில நானே மண்ணை அள்ளிப் போட்டுகிட்டேனே! என் நிலைமையைப் பார்த்தியா? - என கண்ணீர் விடத் துவங்கினான்.

இவன் இன்னும் அழுவதை விடவில்லையா? சலிப்பாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

என் மாமனும் எம் பொஞ்சாதியும் சேர்ந்து என்னை மாடுமேய்க்க போட்டுட்டாங்க சுசீ! வீட்டோட மாப்பிள்ளைன்னு கூட்டிட்டு வந்து சாணி அள்ள வெச்சிட்டாங்க.

இதையெல்லாம் ஏன் எங்கிட்ட சொல்ற?

சுசீ.

இது நீ ஆசைப்பட்டு சம்மதிச்ச வாழ்க்கை தானே?

எது? இதுவா? என்ன சுசீ நீ?

வசதியா வாழனும்னா சில வேலைகளை சகிச்சிகிட்டுதான் இருக்கணும்.

என்னால முடியல சுசீ. என்னை நாயை விட கேவலமா நடத்துறாளுங்க நான்... என் கையில் ஒரு குரல் இடைவெட்டியது.

நடத்தாம? வந்த இடத்தில வாயை வெச்சுகிட்டு சும்மா இருக்கணும். என்னவோ பெரிய இவன் மாதிரி பேசின? - குரல் வந்த திசையில் திரும்பினர் இருவரும்.

கடுப்பாய் கனத்த உடம்போடு இடுப்பில் கையூன்றி நின்றிருந்தாள் ஒரு பெண். அவளைக் கண்டதும் உடல் நடுங்கத் துவங்கியது சக்தி

''கண்டக்டரிடம் அவர் மகளை காதலிக்கிற விஷயத்தை எப்போ சொல்லணும்?''

''பஸ் புறப்பட அவர் 'ரைட்' என்று சொல்ற நேரம் பார்த்து சொல்லிடணும்''.

**-நாஞ்சில் சு.நாகராஜன், பறக்கை.**



வேலுக்கு. அவள் அதட்டலாய்க் கேட்டாள்.

''யாருய்யா இவங்க?''

''த்...தெரியாது''

''தெரியாமலா உம் புராணத்தை அளந்திட்டு இருக்க. ஒழுங்கா உண்மையைச் சொல்லிடு. இல்லே...''

''இது...எங்க ஊரு...பொண்ணு.''

''என்னது? உங்க ஊர் பொண்ணா? உன் ஆத்தா வேவு பார்த்திட்டு வரச் சொன்னாளாமா?''

''இல்ல. இவுக....'' - என இழுக்க அவள் இவர்களிடம் திரும்பினாள்.

''அவதான் சொன்னான்னா உடனே கிளம்பி வந்திடுறதா? நீங்களே சொல்லுங்க. என்னைக் கட்டிகிட்டு என்கிட்டயே அவளைக் கட்டியிருந்தா எப்படி வாழ்ந்திருப்பேன் தெரியுமான்னு கேட்கிறான்.

இன்னொருத்திய நினைச்சிட்டு என் கழுத்தில தாலி கட்டுனதே தப்பு. இதுல எங்கிட்டயே அவளைப் பத்தி பேசறானே. இவனை எப்படி மதிக்கிறது? நீங்களே சொல்லுங்க'' வந்தவள் கேட்க, சுசீலாவின் முகம் புன்னகைத்தது.

''கரெக்ட்! இவனை மாதிரி ஆட்களையெல்லாம் இப்படித்தான் நடத்தணும். கேரி ஆன். நாங்க கிளம்புறோம்.''

''அப்படியே எம்மாமியாகிட்ட சொல்லிடுங்க. இந்த ஜென்மத்தில இவனுக்கு இதுதான் கதின்னு.''

''தேங்க்ஸ். சொல்லிடுறேன்''-என்றவள் ஒரு வெற்றிப்பார்வையை சக்திவேலிடம் வீசிவிட்டு, ரவிபிரகாஷின் கரத்தை பற்றிக் கொண்டாள்.

''வாங்க பிரகாஷ் போகலாம்''- என உரிமையாய் அழைக்க, அவள் பற்றிய கரத்தை ரவிபிரகாஷ் மலர்ச்சியாகவும் சக்திவேல் திகைப்பாகவும் பார்த்தனர்.



அந்தப் பெண் சக்திவேலை தாறுமாறாய் திட்டிக்கொண்டே உள்பக்கமாய் சென்றுவிட. அலட்சியமாய் அவனை ஏறிட்டாள் சுசீலா.

''என்னவோ ஊரெல்லாம் பைத்தியக்காரத் தனமாய் உளறிக் கொண்டு இருந்தாயாமே. அதான் என் வருங்காலக் கணவரை உனக்கு அறிமுகம் செய்யலாம்னு கூட்டிட்டு வந்தேன். எப்படி இருக்கார்?''

சக்திவேலின் முகம் கோணல்மாணலாய் சுருங்கிவிட ,திருப்தியாய் புன்னகைத்துக் கொண்டாள்.

''இவர் யாருன்னு சொல்லலயே! ரவிபிரகாஷ் ஐ.ஏ.எஸ்...கலெக்டர். வர்ற முகூர்த்தத்தில எங்களுக்குக் கல்யாணம். உம் பொண்டாட்டி சம்மதிச்சா வந்து ஒருவேளை சாப்பிட்டுட்டு போ. வரட்டுமா? வாங்க பிரகாஷ்'' - என்றவள் நில்லாமல் வெளியேறி விட, அசையாமல் நின்று கொண்டே இருந்தான் சக்திவேல்.

காரில் ஏறி அமர்ந்தவள் பெரிதாய் மூச்சை இழுத்துவிட, அவளை உற்றுப்பார்த்தான் ரவிபிரகாஷ்.

''இப்ப எப்படி இருக்கு சுசீ?''

''எப்படின்னா?''

''மனசுக்குள்ள எரிஞ்சிட்டு இருந்த தீ அணைஞ்சிடுச்சா?''

வியப்பாய் புன்னகைத்தாள். ''அட! ஆமா! இப்ப எம்மனசுல எந்த அழுத்தமும் இல்ல. என்னால பிரீயா மூச்சுவிட முடியுது''

''ம். இதுக்குத்தான் இங்கே கூட்டிட்டு வந்தேன்''- என்றவனை விழிவிரியப் பார்த்தாள்.

''எ..ன்ன?''

''தன்னை ஏமாத்தினவன் அதுக்கான தண்டனையை அனுபவிக்கிறான்னு தெரிஞ்சிட்டா மனசில ஏதோ ஒரு மூலையில பதுங்கியிருக்கிற வலி கூட மறைஞ்சிடும். அதுக்காகத்தான் இந்த மீட்டிங்!''

மென்மையாய் சொன்னவனை கண்களில் நன்றியோடு நோக்கினாள். யார் இவன்? எனக்காகவே படைக்கப்பட்டவனா? என் மனதை, அதன் மொழியை வலியை எல்லாவற்றையும் எப்படி இவனால் புரிந்து கொள்ள முடிகிறது?

இமைக்காமல் பார்த்தவளது முகத்தின் முன்னே விரலைச் சொடுக்கினான்.

''ஹலோ! என்னாச்சு?''

''பி..ர..காஷ்! நீங்க யாரு?''

''ஐயோ! இதென்ன கேள்வி?''

''இல்ல...எனக்காக நான் கேட்காமலேயே எல்லாம் பண்றீங்களே...நீங்க என்ன கடவுளா?''

''அவ்வளவு பெரிய பதவி வேண்டாம்மா. உன் மனசில கொஞ்சூண்டு இடம் கொடுத்தாப் போதும். என் ஆயுசுக்கும் அங்கேயே ஒரு ஓரமா உட்கார்ந்துப்பேன்.''

''முடியாது'' - அவனது கண்களை நேராய்ப் பார்த்து சொன்னவளைத் திடுக்கிடலாய் பார்த்தான்.

''சு....சீ....''

''என் மனசுக்குள்ள எப்போதோ நுழைஞ்சு முழுமையா நிறைஞ்சிட்டீங்க. இனி எப்படி இடம் தருவதாம்?''

''ஹேய்!யூ....மீன்....'' - இன்ப அதிர்ச்சியாய் துள்ளியவனிடம் மவுனமாய் வெட்கமாய் தலையசைத்தாள்.

''ஹய்யா! அப்போ சக்திவேல் கிட்ட சொன்னது...உண்மை தானா?''

''எது?''

''வர்ற முகூர்த்தத்தில நம்ம கல்யாணம்னு சொன்னது?''

''முழுக்க முழுக்க உண்மை'' - வெட்கப்புன்னகையோடு சொன்னவளை மனம்நிறைய நேசத்தோடு கட்டிக் கொண்டான் ரவிபிரகாஷ்.

## முற்றும்

## பட்டுசேலை

### பரிசு பெற்றவர்கள்

பதில் :சிங்கம் ஏப்ரல்: 03-04-2013

1. ஆ.கிறிஸ்து தாஸ், சென்னை - 600 049.
2. கா.கணபதி, தேனி - 625530.
3. ஆர்.உஷா, சென்னை - 600 024.



# கோலங்கள்

15 புள்ளி 6-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)

**-தேவசேனா திருமலையப்பன், உத்தங்குடி.**






15 புள்ளி 1 முடிய (நேர்புள்ளி)

**-டி.ராஜராஜேஸ்வரி, சேலம்.**



*9 புள்ளி 9 வரிசை*
*(நேர்புள்ளி)*
**-எச். சத்யவதி, சென்னை.**



கோலத்தில் உள்ளவாறு புள்ளிகள் வைத்து போடவும் (நேர்புள்ளி)
**-உஷா வெங்கடேசன், சென்னை.**




*7 புள்ளி 7 வரிசை, நான்குபுறமும் 5, 1 புள்ளி (நேர்புள்ளி)*
**-மகாலட்சுமி சுப்பிரமணியன், புதுச்சேரி.**





*19 புள்ளி 1ல் நேர் புள்ளி*
*ஒன்றில் நிறுத்தவும்*
**-வனிதா சுந்தரராஜன், திருச்சி.**



*15 புள்ளி நேர் புள்ளி*
*ஒன்றில் நிறுத்தவும்*
**-பாமதி நாராயணன், பெங்களூர்.**

# டிப்ஸ் டிப்ஸ்

குளிர் காலங்களில் முகம் பார்க்கும் கண்ணாடிகளில் சோப்பு நீரை நன்கு தடவி பின்னர் மெல்லிய துணியால் துடைத்தால் புகை படிந்தது போல் ஆகாமல் பளபளக்கும்.

**-ஆர்.பிரகாசம், கோவிலூர்.**

காய்கறி, மீன், இறைச்சி முதலியவற்றை வேக வைத்த தண்ணீரில் கொஞ்சம் மைதாவைப் போட்டுக் காய்த்து வடியவைத்துப் பிறகு, இரண்டு தேக்கரண்டியால் அதில் சேர்த்தால் அது மிகவும் சுவையான சூப் ஆகும். இரண்டு கோப்பைத் தண்ணீருக்கு ஒரு தேக்கரண்டி மைதா மாவு போதும்.

**-ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.**

**அறுசுவை உணவின் அவசியம்**

துவர்ப்பு- இரத்தம் பெருகச் செய்கிறது.
இனிப்பு- தசை வளர்க்கிறது
புளிப்பு- கொழுப்பை உற்பத்தி செய்கிறது.
கார்ப்பு- எலும்பை வளர்த்து உறுதியாக்குகிறது.
கசப்பு- நரம்பை பலப்படுத்துகிறது.
உவர்ப்பு- உமிழ் நீரைச் சுரக்கச் செய்கிறது.

**-நாஞ்சில் சு.நாகராஜன், பறக்கை.**



வெல்லம் உருகாமலிருக்க தேக்கின் இலையில் பொதிந்து வைத்தால் போதும். பிளாஸ்டிக் பையில் பொதிந்து காற்று ஏறாத டப்பாவில் வைக்கவும்.

**-ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.**



வெள்ளரிக்காய் சிறு நீரகங்களை வலுப்படுத்தும். வாய்ப்புண்களை ஆற்றும். கண்ணிற்கு ஒளி கூட்டும். தோல்வியாதிகளை கட்டுப் படுத்தும். குடல் புழுக்களை அழிக்கும்.

**-கே.எல்.புனிதவதி, கோவை.**

அரிசியை போட்டு வைக்கும் பாத்திரத்தில் கொஞ்சம் வேப்பிலை போட்டு வைத்தால் பூச்சிகள் ஏறாமல் இருக்கும். கல் உப்பை போட்டும் பாதுகாக்கலாம்.

**ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்**



வைட்டமின் 'சி' சத்து ஞாபகசக்தியை அதிகரிக்கும் குணம் கொண்டது என அமெரிக்காவைச் சேர்ந்த மருத்துவ விஞ்ஞானி லினன் பாலிங் ஆராய்ச்சிகள் மூலம் கண்டு பிடித்துள்ளார். வைட்டமின் 'சி' நல்ல பலன் கிடைக்கும்.

**-உ.ராமநாதன், நாகர்கோவில்.**




# சோள அடை



**தேவையான பொருட்கள்:**

சோளம்- 1 கப், உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, பாசிப்பருப்பு, பச்சரிசி- தலா ¼ கப், வரமிளகாய்- 5, தேங்காய்த்துருவல்- ½ கப், பெருங்காயத்தூள்- சிறிது, கருவேப்பிலை- 1 கொத்து, எண்ணெய், உப்பு- தேவையான அளவு.


**செய்முறை:**

சோளம் மற்றும் பருப்புகளை ஒன்றாகச் சேர்த்து ஊறப்போடவும். ஊறியதும் நீரைவடித்து உப்பு, மிளகாய், பெருங்காயம், தேங்காய்த்துருவல் சேர்த்து கரகரப்பாக அரைத்து எடுக்கவும்.

மாவில் கருவேப்பிலையைகிள்ளிப்போட்டுக்கலக்கவும். விருப்பப்பட்டால் பொடியாக நறுக்கிய வெங்காயத்தையும் சேர்க்கலாம்.

அடுப்பில் அடைக்கல்லை ஏற்றி காய்ந்ததும் மாவை ஒரு கரண்டி எடுத்து ஊற்றி அடையைச் சுற்றிலும் எண்ணெய்விட்டு இருபுறமும் பொன்னிறமாக வந்ததும் எடுத்து பரிமாறவும்.

**-தாரா, கோவை.**



# பிரெட் குழிப் பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

அரிசி- ½ கப், பிரெட் தூள்- 1 கப், நறுக்கிய வெங்காயம்- ¼ கப், கொத்தமல்லித்தழை- 1 கைப்பிடி, நறுக்கிய பச்சைமிளகாய்- 1 ஸ்பூன், தேங்காய்த்துருவல்- 1 கரண்டி, கடுகு, உளுத்தம் பருப்பு- 2 ஸ்பூன், நல்லெண்ணெய், உப்பு- தேவைக்கேற்ப.

**செய்முறை:**

அரிசியை இரண்டு மணி நேரம் ஊற வைத்து நைசாக அரைக்கவும்.



பிரெட்டை நன்கு உதிர்த்துக் கொள்ளவும். அரிசி மாவுடன் பிரெட் தூளை கலந்து தண்ணீர் விட்டு இட்லி மாவு பதத்திற்கு கரைக்கவும்.

வாணலியில் நல்லெண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம் பருப்பு தாளித்து பச்சை மிளகாய், தேங்காய்த்துருவல், வெங்காயம், கொத்தமல்லித் தழையை போட்டு வதக்கி மாவில் கொட்டி உப்பு சேர்க்கவும். பணியாரச் சட்டியில் நல்லெண்ணெய் தடவி மாவை ஊற்றி இருபுறமும் வேக விட்டு எடுக்க 'பிரெட் குழிப் பணியாரம்' ரெடி.

மாலை நேரத்தில் கடச்கட தக்காளி சாஸுடன் சாப்பிடலாம். மாறுபட்ட சுவையுடன் இருக்கும்.

**-செ.கலைவாணி, மேட்டூர் அணை.**



# நெல்லிக்காய் தக்காளி இஞ்சி ஜாம்

**தேவையான பொருட்கள்:**

பெரிய நெல்லிக்காய்- ½ கிலோ, தக்காளிப் பழம்- ½ கிலோ, இளம் இஞ்சி- 100 கிராம், சர்க்கரை- ¾ கிலோ.

**செய்முறை:**

நெல்லிக்காய், தக்காளியை நன்கு கழுவி வைத்துக் கொள்ளவும். இஞ்சியை மண் போக கழுவி, தோல் சீவிக் கொள்ளவும். குக்கரில் இரண்டு பாத்திரங்கள் வைத்து ஒன்றில் நெல்லிக்காய்களையும், மற்றொன்றில் தக்காளி, இஞ்சி இரண்டையும் போட்டு 4 அல்லது 5 விசில் வரும் வரை வேகவைத்து (தண்ணீர் சேர்க்க வேண்டாம்) இறக்கவும். ஆறிய உடன் நெல்லிக்காய்களின் கொட்டையை நீக்கி சுளைகளை தனியாக வைக்கவும்.

வெந்த தக்காளி, இஞ்சியை நீர் சேர்க்காமல் மிக்ஸியில் மையாக அரைக்கவும். அரைத்த விழுதை, சற்றே பெரிய கண் உள்ள வடிகட்டியில் வடிகட்டி வைக்கவும் (தக்காளி சக்கை தங்கி விடும்). நெல்லிக்காய் சுளைகளையும் மையாக அரைக்கவும். பின்னர் அடிகனமான பெரிய பாத்திரத்தில் இரண்டையும் ஒன்றாக சேர்க்கவும். ஒரு பங்கு விழுதுக்கு ஒன்றேகால் பங்கு என்ற அளவில் சர்க்கரையை அத்துடன் சேர்த்து கொதிக்கவிடவும். சர்க்கரை நன்கு கரைந்து ஜாம் பதம் வந்த உடன் இறக்கி விடவும். ஆறிய உடன் காற்றுப் புகாத பாத்திரம் அல்லது பாட்டிலில்

எடுத்து வைக்கவும்.

இனிப்பு அதிகம் வேண்டுவோர் ஒரு பங்கு விழுதுக்கு ஒன்றரை பங்கு என்ற அளவில் சர்க்கரை சேர்க்கலாம். புளிப்புச்சுவை சிறிது தூக்கலாக இருக்க வேண்டும் என்றால் எலுமிச்சைச் சாறு சேர்க்கலாம். ஒரு டம்ளர் நீரில் இந்த ஜாமை சிறிதளவு எடுத்து கலந்தால் சூப்பர் நெல்லிக்காய் ஜூஸ் தயார். மாங்காய் துருவல் கால் கப் சேர்த்து செய்தால், சுவை கூடும்.

**-கே.கோமளா, சென்னை.**



# ஓட்ஸ் தட்டை

**தேவையான பொருட்கள்:**

ஓட்ஸ்- 1 கப், அரிசி மாவு- 1 கப், பொட்டுக்கடலை மாவு- 1/4 கப், பாசிப் பருப்பு-1 ஸ்பூன், காரத்தூள், காயத்தூள், உப்புத்தூள் ஆயில் பொரிப்பதற்கு

**செய்முறை:**

பாசிப்பருப்பை வெந்நீரில் ஊறவைத்து விடவும். ஓட்ஸை மூழ்கும் வரை நீரில் கொட்டி ஊறவைக்கவும். பிறகு அரிசி மாவு, பொட்டுக்கடலை மாவு, ஊறிய பாசிப்பருப்பு, காயத்தூள், காரத்தூள், உப்புத்தூள் சேர்த்து நன்கு கலக்கவும் (தட்டை தட்டும் பதத்தில் பிசையவும்)

தேவையானால் சிறிது பால் சேர்த்துப் பிசையலாம். பாலிதீன் கவரின் மீது எண்ணெய் தடவி நெல்லியளவு மாவை எடுத்து வட்ட வட்டமாகத் தட்டி, எண்ணெயில் போட்டு வறுத்து(பொரித்து) எடுக்கவும். திடீரென செய்யக் கூடிய ஸ்நாக்ஸ் இது!

**-தாரா,கோவை.**



# அவிழ்மடல்

'தமிழ்ப் புத்தாண்டு' பற்றி பழ.நெடுமாறன் எடுத்துவைத்த வாதங்கள், செய்ததையும் செய்யத்தவறியதையும் யதார்த்தமாக உணர்த்தியது.

**-ஆர்.இ.மணிமாறன், இடையன்குடி.**

மருத்துவர்கள் அதிகரிப்பை விட நோய் அதிகரிப்பை சுட்டிக்காட்டி எச்சரிக்கையூட்டியது, போலிடாக்டர்கள் பற்றிய ஆபரேஷன் ரிப்போர்ட். 'மசாஜ்'கள் 'கசமுசா'வாகும் நிலையையும் சுட்டிக் காட்டி ரெட்லைட் போட்டது.

**-அ.முருகேசன், திசையன்விளை.**

இயக்குனர் பாலாஜி சக்திவேல் மனம் திறந்து சொல்லிய விசயங்கள், அவரது பெருந்தன்மையை பறை சாற்றியது.

**-வாசுகி, கொளத்தூர்.**

நடிகை சுவாதியின் 'கவர்ச்சி' குமுறல் நியாயமானதுதான்.

**-மணிசுப்பையா, திருவைகுண்டம்.**

கண்மணியில்பரிமளாராஜேந்திரன்எழுதிய 'அன்பில்விளைந்தபாசமலரே' நாவல், ஓர் உன்னத படைப்பாய் பிரகாசித்தது. மன நிறைவான நாவல். அட்டையில் மாருதியின் அழகி, அலங்கார தேவதையாக திகழ்கிறார்.

**-ம.உதயகுமார், கச்சிராயபாளையம்.**

மன ரீதியான மாற்றங்களே குற்றங்கள் குறைய வழிவகுக்கும் என எடுத்துரைத்த கட்டுரை யதார்த்தம்.

**-சங்கரலட்சுமி, விருகம்பாக்கம்.**

கள்ளக் காதலால் பதவியை இழந்த மந்திரி பற்றிய கட்டுரையை படித்ததும், நம்நாட்டு அரசியலை நினைத்து, தலையில் அடித்துக்கொள்ளத் தோன்றியது.

**-கணேசன், பவானி.**

பாகிஸ்தான் தேர்தலில் களமிறங்கியிருக்கும் நடிகை மீராவின் கவர்ச்சி கலாட்டாக்கள் சுவாரஸ்யம்தான்.

**-ராஜாதுரை, வெள்ளக்கோவில்.**

அந்தரங்க வாழ்க்கை பற்றி நடிகை கத்ரீனா கைப் அளித்துள்ள பதில்கள் போல்டானவை.

**-செல்வி, பரமகுடி.**

தேவியின் கண்மணி மலர்- 27 மணி-12

முரசு பப்ளிகேசன்ஸ் நிறுவனத்துக்காக தேவியின் கண்மணி அச்சகத்தில் அச்சிட்டு 246, அண்ணாசாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600 006-ல் இருந்து வெளியிடுபவர், ஆசிரியர். இரா.கண்ணன் ஆதித்தன்.



# ஆரோக்கியத்துடன், வருமானம் ஈட்டித்தரும் மொட்டைமாடி காய்கறி தோட்டம்!

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை வெளியூர்களுக்கு பஸ் அல்லது ரெயில் போன்ற ஏதேனும் ஒன்றில் பயணம் செய்திருந்தால் இருபுறமும் பசுமையான வயல்வெளிகள், சாலைகளின் இருபுறமும் நீண்ட நெடிய மரங்கள் வரிசையாக நின்று சூரிய வெளிச்சத்தைக் கூட சாலையில்விழவிடாமல்குளிர்ச்சியை தருவனவாகவும் அமைந்திருந்ததை கண்டு இருப்போம்.

ஆனால்தற்போது நகரமயமாக்கல் என்பதன் பெயரால் லட்சக்கணக் கான மரங்களும், பசுமையான தாவரங்களும் காவு கொடுக்கப்பட்டு பசுமை குடில்களாக இருந்த இடங்கள் இன்று நாற்கர சாலை களாகவும், பைபாஸ் சாலை களாகவும் உருமாறி உள்ளது. அடர் மரங்களை அழித்த தனால் நாம் சந்திக்கும் எதிர் விளைவுகள் கொஞ்சம் நஞ்சமல்ல. மரங்களை அழித்தால் மழை பெய்யாது என்பது பள்ளிக்குழந்தைகளுக்கு கூட மனப்பாடம்.

ஆனால் பெரியவர்கள் நாம் அதை மறந்ததன் விளைவு பருவத்தில் கூட மழை பொழிவதில்லை. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லும் வெப்ப நிலை. மிகு வெப்பத்தால் உருவாகும் ஏராளமான நோய்கள் என அன்றாட அவதி. அதோடு சாலையோரங்களில் பல தலைமுறைகளாக பராமரிக்கப்பட்டு வந்த புளியமரங்கள், காய்கறி தோட்டங்கள், வயல்வெளிகள் அழிக்கப்பட்டதால் விண்ணைத் தொடுகிறது காய்கறிகளின் விலை. அரிசி கூட இன்னும் சில ஆண்டு களில் செல்வந்தர்களின் வீடுகளில் மட்டுமே சமைக்க கூடிய பொருளாக இருக்கப்போகிறது. சாமானியர்கள் மீண்டும் குச்சிக்கிழங்கிற்கும், குப்பைக்கீரைக்கும் அலைய நேரிடும் அபாயம் இருப்பதாக வேளாண் ஆய்வாளர்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

தற்போது கொஞ்சம் நஞ்சம் உள்ள தோட்டங்களில் பயிரிடப்படும் விளைப்பொருட்கள், காய்கறிகளும் கூட இயற்கையாகவிளைந்தவையாக இருப்பதில்லை.

குறுகிய காலத்தில் வளர வேண்டும் என்பதற்காக ரசாயன சேர்ப்பு, சீக்கிரம் கெட்டுவிடக்கூடாது என்பதற்கான ரசாயன கலவை, பூச்சிக்களை தாக்குதலில் இருந்து பயிர்களை காப்பாற்ற ஏராளமான பூச்சிக் கொல்லி மருந்துகள் என விஷத் தன்மை வாய்ந்தவையாக வேசந்தைக்கு வருகிறது.

இது போன்ற விஷத் தன்மை வாய்ந்த காய்கறி, பழங்களை நாம் உட்கொள்வதால் ஏற்படும் உடல் பாதிப்பும் ஏராளம். சுருக்கமாக சொல்லப்போனால் நாம் உண்ணும் உணவே விஷமாகி வருகிறது. அதோடு சந்தையில் காய்கறிகளின் விலை நாளுக்கு நாள் எகிறிக்கொண்டே செல்வதால் சாதாரண, நடுத்தர குடும்பங்களில் காய்கறிகளின் பயன்பாடு என்பது நாளுக்கு நாள் குறைந்து கொண்டே செல்கிறது.

இதனால் தற்போது இயற்கை விவசாயம் குறித்த விழிப்புணர்வும், காய்கறி வளர்ப்பும் அதிகரித்து வருகிறது. இல்லத்தரசிகள் உள்பட பலரும் காய்கறி தோட்டங்களை உருவாக்குவதிலும், அதில் இயற்கை முறையில் காய் கறிகளை வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அதன்படி வீட்டுத்தோட்டங்களின் மூலம் காய்கறிகளை வளர்ப்பதால் தங்களது குடும்பத்திற்கு தேவையான காய்கறிகளை அவர்களே உற்பத்தி செய்ய முடிகிறது.

மேலும் தங்களது தேவைக்குப் போக மீதமுள்ள காய்கறிகளை அக்கம் பக்கத்தினருக்கும் விற்பனை செய்வதன் மூலம் உபரி வருவாயும் கிடைக்கிறது.



வீட்டில் காலி இடம் இருந்தால் தான் தோட்டம் அமைக்க முடியுமா? என்று நீங்கள் ஏக்கம் கொள்ள தேவையில்லை. வீட்டில் காலி இடம் இல்லாதவர்கள் கூட தங்களது மொட்டைமாடிகளை பயன்படுத்தி அதில் காய்கறிகள், கீரைகள் போன்றவற்றை வளர்த்தும் வருமானம் பார்க்க முடியும். தற்போது நகர்ப்புறங்களில் பலர் மொட்டைமாடி காய்கறி தோட்டங்களை அமைத்துதங்களுக்கு தேவையான காய்கறிகளை பெற்றுக் கொள்கின்றனர்.



மொட்டைமாடி காய்கறி தோட்டம் அமைக்க மிகப்பெரிய செலவினங்களோ, நாள் முழுவதும் பராமரிப்போ, தண்ணீர் தேவைக்கு பம்ப்செட் கிணறுகளோ தேவையில்லை. நமது வீட்டில் பயன்படுத்திய பழைய பிளாஸ்டிக் வாளிகள், பால் டிரேக்கள், பிளாஸ்டிக் குடங்கள், ஜாடிக்கள், சிறிய மண் தொட்டிகள் போன்றவற்றை மட்டுமே பயன்படுத்தி காய்கறிகளை வளர்த்து பலன் அடைய முடியும்.

உதாரணமாக ஒரு பிளாஸ்டிக் வாளியில் செம்மண், களிமண் போன்ற வகை மணல்களை நிரப்பி அதில் மண்புழு உரம், சாணம் போன்றவற்றை கலந்து சில நாட்கள் வைத்து விட வேண்டும். பின்புநமக்கு தேவையான கத்தரி, வெண்டை, தக்காளி, மிளகாய் போன்றவற்றின் விதைகளை வாங்கி அதில் நட்டு வைத்து பராமரிக்கலாம்.

மேலும் மொட்டைமாடியில் துணி காய போடும் கொடிகளை பயன்படுத்தி அவரை, பாகற்காய், பீர்க்கை, புடலை, சுரைக்காய் போன்ற கொடிகளையும் வளர்க்கலாம்.

விதைகள் நட்டு வைத்ததில் இருந்து செடிகள், கொடிகளில் இருந்து 40 நாட்கள் முதல் நமக்கு தேவையான காய்கறிகள் பறித்துக் கொள்ளமுடியும். மேலும்சிறியவகை மரங்களான எலுமிச்சை, நார்த்தை, சிறிய முருங்கை போன்றவற்றையும் சிறிய தொட்டிகளில் வளர்க்க முடியும்.

இந்த செடிகளுக்கு தேவையான உரங்களை நாமே தயாரித்துக் கொள்ள முடியும். நமது வீட்டில் பயன்படுத்தப்படும் முட்டைஓடுகள், காய்கறி கழிவுகள், பழ கழிவுகள், இழைதலைகள் ஆகியவற்றோடு கால்நடை சாணங்களை கலந்து ஒரு சிறிய அளவிலான தொட்டியில் குவித்து வைத்து விட்டால் சில நாட்களில் குப்பைகள் மக்கி



சிறந்த இயற்கை உரமாக மாறி விடும். இவற்றையே நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.



மேலும்செடி, கொடிகளை பூச்சி, வண்டுகளின் பாதிப்பில் இருந்து காப்பாற்ற வேப்பிலையை அரைத்து அவற்றை தண்ணீரில் கரைத்து செடிகளின் மீது தெளித்து விட்டால் மிகச்சிறந்த பூச்சிக்கொல்லி மருந் தாக செயல்பட்டு செடி, கொடிகள் காப்பாற்றப்படும். எக்காரணம் கொண்டும் ரசாயன உரங்களை பயன்படுத்தக் கூடாது.

தொடக்கத்தில் ஒருசில காய்கறிகளை மட்டும் வளர்த்து அதில் கிடைக்கும் அனுபவங்களில் இருந்து மேலும் பல வகையான செடி, கொடி வளர்ப்புக்கு நாம் செல்ல முடியும்.

மாடியில் காய்கறி தோட்டம் இருப்பதால் கோடை காலங்களில் கூட வீடுகளில் வெப்பத்தின் தாக்கம் இல்லாமல் குளுகுளுவென்று இருப்பதை நம்மால் உணரமுடியும்.

மேலும் காலை, மாலை நேரங்களை காய்கறி தோட்டங்களில் செலவழிப்பதன் மூலமாகமன அழுத்தம் உள்ளிட்ட பல நோய்கள் குறைவதாக ஆய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேலும் குடும்பத்தினரோடு காய்கறி வளர்ப்பில் ஈடுபடும்போது குடும்ப உறவுகள் மேம்படுவதோடு, சிறு குழந்தைகளுக்கும் செடி வளர்ப்பின் அவசியத்தை நேரடியாகவே உணர்த்த முடிகிறது.



மேலும் காய்கறி தோட்டத்தின் மூலம் நமது வீட்டை சுற்றிய காற்றும் மிக சுத்தமான காற்றாக மாற்றப்படுகிறது. தோட்டத்தில் ஆரோக்கியமான காற்றை சுவாசிப்பதன் மூலமாக நுரையீரல், இருதய நோய்களும் வராமல் நம்மை பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

இதுபோல் ஏராளமான பலன்களை தரும் காய்கறி தோட்டங்களின் அவசியங்களை உணர்ந்து அனைவரும் தங்களது வீடுகளில் இதுபோன்ற தோட்டங்களை அமைக்க ஆரம்பித்து விட்டால் அதுவே ஒரு பசுமைப்புரட்சியாக மாறி விடும்.

**-எஸ்.பி. உமாமகேஸ்வரன், மதுரை.**

Deviyin KANMANI-Tamil Weekly 24-04-2013 Regd.No. TN/CH(C)/360/12-14 Registered With Registrar of News papers for India Under No.49510/89 published every Wednesday of every Week.



# என்னைப் பற்றி...

என் அன்பான கண்மணியின் கண்மணிகளுக்கு மீண்டும் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. அன்பு, நட்பு,நேசம்அனைத் தும் கலந் த கலவைதான் இந்த 'தேடிவந்த உறவு'

சக்தி வேலின் பொய்யான அன்பில் காயப்பட்ட சுசீலாவின் இதயத்திற்கு மருந்தாய் வந்த உறவு ரவிபிரகாஷ்,அன்பைப் பொழியும்வசுமதி என இக்கதையில்வரும் அனைத்து கதாபாத்திரங்களும் உங்கள் மனதைக் கவரும் என நம்புகிறேன்.

படியுங்கள்வாழ்த்துங்கள்.
உங்கள் வாழ்த்துக்கள் தான் என்னை வளரவைக்கின்றது. நன்றி!

என்றும் அன்புடன்,
சொ.கலைவாணிசொக்கலிங்கம்